padippakam

# தமிழின் ஆக்கம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

தஞ்சாவூர்
1995

TASNA

'தாஸ்னா' சிறப்புமலர்

விலை
ரூ. 25-00

படிப்பகம்

padippakam


தஞ்சையில் ஜனவரி 1 முதல் 5 வரை நடைபெறும்
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தரும்

- புலம் பெயர்ந்த தமிழ்ச் சான்றோரை - எழுத்தாள - இதழாளர்களை
- தாய்மொழி யாதாயினும் தமிழ்போற்றும் பன்னாட்டு பேராளர் - பார்வையாளர்களை

வருக! தமிழ் ஆய்க! தமிழ்வழி உலகம் உய்ய வழி காணுக!
என வரவேற்கிறோம்.

நீலகிரியிலிருந்து வாரம்தோறும் வெளிவரும் செய்திப் பத்திரிக்கை

நீலகிரி நியூஸ்

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
கே. எம். செல்வராஜ்
தபால் பெட்டி எண். : 48
உதகை, நீலகிரி - 643 001

ஆண்டுச் சந்தா :
ரூ. 150-00


படிப்பகம்

padippakam

- புலம் பெயர்ந்து உலகெங்கும் சிதறி வாழ்ந்தாலும் தமிழை - அதன் பண்பாட்டைச் சுமந்து வாழும் நம் தமிழ்ச் சுற்றங்களுக்கு

- தம் தாய்மொழி யாதாயினும் தமிழ் போற்றும் பன்னாட்டுப் பேருள்ளப் பெரும் சுற்றங்களுக்கு

படிப்பகம்

padippakam

# பொருளடக்கம்


1. தோரணவாயில் 3
2. தமிழாக்கத்திற்கு மொழித் திட்டமிடுதல் — முனைவர் கி. கருணாகரன், முனைவர் வ. ஜெயா 5
3. அறிவியல் தமிழ் ஆக்கம் — முனைவர் இராம. சுந்தரம் 9
4. தமிழில் கணினி - இன்றும் நாளையும் — முனைவர் தி. கமலி 17
5. தமிழில் அகராதிகள்- அன்றும் இன்றும் — முனைவர் மு. ச. சிவம் 26
6. பொங்கல் (கவிதை) — கவிஞர் க. அ. பிரகாசம் 31
7. தமிழில் பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா 32
8. தமிழில் தலித்தியம் — திரு உஞ்சைராசன் 36
9. தமிழில் தலித் இலக்கியம் — திரு இரச. நடராசன் 42
10 பழந்தமிழ் இலக்கியங்கள் - இன்று நமக்குத் தேவையான பார்வை - யுகசிற்பி 51
11 டங்கலும் தமிழும் — ஞானி 54
12 முன்னேற்றம் (கவிதை) — தி. கமலி 57
13, தமிழ் வளர்க்கும் வழிமுறைகள் — இரா. பெருமாள் I. A. S 58
14 தனிமை (கவிதை) — அசரப் முஸ்தபா 62
15. தமிழ் படைப்பிலக்கியத்தின் எதிர்காலம் — முனைவர் இந்திராபார்த்தசாரதி 63
16. இருபத்தியோராம் நூற்றாண்டில் தமிழ் — முனைவர் அருணா ராசகோபால் 72
17. தமிழின் ஆக்கமும், சிற்றிதழ்களும் — பொள்ளாச்சி நசன் 78
18. சூரிய குஞ்சுகள் (கவிதை) — முங்காரி 80
19. நதியை விற்று படகு வாங்கினால்... — தமிழன்பன் 81
20. குன்றத்தின் கவிதைகள் 83
21. தாஸ்னா உறுப்பிதழ்கள் பட்டியல்


படிப்பகம்

padippakam

# தோரணவாயில்

இயங்கியல் ரீதியில் உலகம் தொடர்ந்து மாறுகிறது. ஆனால் மனிதர்களோ அம்மாற்றத்தை அந்தந்த கால கட்டத்தில் உணர்ந்து மாற மறுக்கிறார்கள். அதனால் எழும் எண்ணற்ற இன்னல்களால் மனித வாழ்வு அவலத்திற்குள்ளாகிறது. மாறும் உலகில் மாறா மனிதர்களை சமகால பிரக்ஞைக்குள்ளாக்கி, மாறச் செய்யும் பணி தகவல் தொடர்புச் சாதனங்களின் பணியாகிறது. ஆனால். வெகுஜன தொடர்பு சாதனங்கள் எல்லாம் இன்று ஆதிபத்திய- ஆணவ- அதிகார வர்க்கங்களின் ஆதிக்கத்தில் உள்ளன. அவை, மாறும் உலகம்- மாறா மனிதர்களின் முரணை மிகையாக்கி மாந்த வாழ்வைப் பாழடிக்கின்றன. இந்த நிலையை ஈடுகட்டி, மனித வாழ்வை சீராக்கும் ஓர் எதிர்வினையாகத்தான் சிற்றிதழ் இயக்கம் தோன்றுகிறது. அந்த வகையில் உலகிலேயே இடதுசாரி நோக்கோடு முதன்முதல் தோன்றிய சிற்றிதழ் இயக்கம்தான் 'தாஸ்னா' எனப்படுகிற தமிழ் சிற்றிதழ்கள் சங்கம்.

*''நாளை வரலாறு நல்லதாய் அமைய ஏற்றவை செய்தலே எங்கள் பணி''* என்ற லட்சிய முத்திரை வாசகத்தோடு தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் 1988-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ம் நாளான பொங்கல் அன்று இதே தஞ்சையில் தோற்றம் கொண்டது. 1991-ம் ஆண்டு பதிவு பெற்ற நிறுவனமான தாஸ்னா இன்று இந்தியா அளவில் 141 இதழ்களை உறுப்பிதழ்களாகக் கொண்டு, மொத்தம் சுமார் மூன்று லட்சம் பிரதிகளை வெளியிட்டு தமிழின் ஆக்கம், கலை - இலக்கிய மேம்பாடு, கலாச்சார மறுஆக்கம், சமூக - அரசியல் விழிப்புணர்வு, மாந்த இன பொது மேம்பாட்டுக்கான கருத்தாக்கம் ஆகிய தளங்களில் வெளிச்சப்படுத்திக் கொண்டு வருகிறது. இந்த அமைப்பை உலக அளவாக விரிவாக்கம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முன் முயற்சியாக இந்த உலகத் தமிழ் மாநாட்டுப் பேராளர் - பார்வையாளர்கள் மற்றும் பன்னாட்டு தமிழ் எழுத்தாளர் இதழாளர்களின் அறிமுகத்தை தாஸ்னா கருதுகிறது.

உலகின் பல பகுதிகளில் இன்று ஆதிக்க - அதிகார சக்திகளை - அவை முடுக்கி விடும் வெகுஜன ஊடகங்களின் வெறியாட்டத்தை முறியடிக்கவென்றே பல தமிழ்ச் சிற்றிதழ்கள் தோன்றிப் போராடிக் கொண்டிருக்கின்றன. அத்தகைய சிற்றிதழ்களை ஒருங்கிணைத்து தமிழ்ச் சிற்றிதழ்கள் இயக்கத்தை உலகளவில் விரிவாக்கி செயல்படுத்துவது இன்றைய காலகட்டத்தின் அவசியமாகிறது. ஆக, தமிழ் மற்றும் தமிழை ஒன்றாகக் கொண்ட பன்மொழி சிற்றிதழ்களை தாஸ்னா வரவேற்கிறது. விருப்பப்படும் சிற்றிதழ்கள் *''புலமைப் பண்ணை, சுகர்கேன் அஞ்சல், கோயமுத்தூர் - 641 007 இந்தியா''* என்ற தாஸ்னாவின் பதிவு (தலைமை) அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளலாம் என்ற அழைப்போடு தமிழ்வழி ஒருமுகப்பட்டு, உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைத்து தமிழ் நெஞ்சங்களையும் வருக வருக என மலர் முகத்தோடு இம் மாநாட்டின் தோரண வாயிலில் எதிர்கொண்டு தாஸ்னா வரவேற்கிறது.

வாழ்க தமிழ்! வையம் நலம் பெறவே.

இங்ஙனம்

**குன்றம். மு. இராமரத்நம்**
தலைவர்

**கே. எம். செல்வராஜ்**
பொதுச் செயலாளர்

படிப்பகம்

padippakam

## உதவிக்கரங்கள்

திரு E. S. D. தேவசிகாமணி, கோவை-18
கலைமகள் சபா, கொமாரபாளையம்
திரு ஞானி, கோவை-9
திரு முனைவர். அருணா ராஜகோபால், கோவை-3
திரு G. ஆஷ்துரை, கம்பம்
திரு துரை. மூர்த்தி, அமிர்தசரஸ்
திரு கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை
திரு வை. கி. துறையன், கோவை-9
திரு மா. மாணிக்கம் (கோவை ஏஜன்ஸீஸ்), கோவை-18
கவிஞர். எழுஞாயிறு, சேலம்-7
கவிக்குரிசில் இரா. பெருமாள், பெங்களூர்-1

ஆகிய நன்கொடையாளர்கள், விளம்பரம் தந்துதவிய அன்பர்கள் மற்றும் கட்டுரை கவிதை வழங்கிய அறிஞர்கள், அச்சாக்கத்தில் உதவிய லேசர் பார்க் நண்பர்கள், உறவு அச்சகம் சார்ந்த திரு. ஈ. நாகராசன் மற்றும் மலர்க் குழு சகாக்கள் நமது நன்றிக்கு உரியவர்கள்.

-தாஸ்னா

படிப்பகம்

padippakam

# தமிழ் ஆக்கத்திற்கு மொழித்திட்டமிடுதல்

முனைவர் கி.கருணாகரன் & முனைவர் வ.ஜெயா
*பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.*

## முன்னுரை

நீண்ட நெடிய பாரம்பரியமும் இலக்கிய இலக்கண வளமும் வரலாறும் கொண்டு விளங்கும் மொழி தமிழ் மொழி. பல்வேறு கால கட்டங்களில் சங்கத்தமிழ், தெய்வத் தமிழ், நீதித் தமிழ் என்றெல்லாம் அமைந்து அவ்வக்காலப் பயன்பாட்டில் தமிழ்ச் சமுதாயத்தின் பணிகளையும் தேவைகளையும் நிறைவேற்றி வந்துள்ளது இம்மொழி. காலப்போக்கில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களின் அடிப்படையிலும் சமுதாயத்தேவைகளின் அடிப்படையிலும் தமிழின் மொழிப் பயன்பாட்டில் (Language use) குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பிற்காலத்தில் இத்தகைய மாற்றங்களால் இக்காலத்தமிழில் தேவைக்கேற்ப சில வளர்ச்சிப் போக்குகள் தோன்றலாயின. பிற மொழிகளின் செல்வாக்கு, பிற துறைகளின் வளர்ச்சி, பிற சமுதாயங்களின்-பண்பாடுகளின் தாக்கம் போன்றவற்றால் இக்காலத் தமிழின் பயன்பாடு தாக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உள்ளாகியது. புதுத்துறைகள், புதுப்பணிகள் போன்றவற்றை ஆற்றல் மிக்க வகையில் நிறைவேற்றிடத் தேவையான சொற்கள், தொடர்கள் போன்றவையும் உரைக்கோவை அமைப்பும் தேவையாயின. அதுமட்டுமின்றி, எழுத்தமைப்பிலும் சிற்சில மாற்றங்கள் தேவையாயின. ஓரளவிற்கு மாற்றம் செய்யப்பட்டு அதுவும் மேற்கொள்ளப்படலாயிற்று.

## இக்காலத் தமிழ்

இந்நூற்றாண்டில் வழங்கி வரும் 'எழுத்து வழக்கு'மற்றும் 'பேச்சு வழக்கு' இரண்டும் இணைந்ததே இக்காலத் தமிழ் (Modern Tamil) எனப்படுகிறது. இக்காலத் தமிழைப் பயன்படுத்தி, இன்று நாம் பலதுறைகளிலும் பல்வேறு முறைசார் பணிகளை மேற்கொள்ள முனைந்திருக்கிறோம். ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றோம். இக்காலப் பகுதி குறிப்பாக இந்நூற்றாண்டின் பிற்பகுதி, பல புதுமைகளைப் பெற்று விளங்குகிறது. புதுமையாக்கம் (Modernisation) என்பது சமுதாயத்தில் தொடங்கி இன்று சமுதாயம் சார் மொழிவரை பரவியுள்ளது. எனவே, சமுதாயத்தில் தோன்றி வரும் புதுமையாக்கம் மொழி வழியாக வெளிப்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது. இதனை மையப்படுத்தியே இக்காலத் தமிழின் வளர்ச்சியினையும் ஆக்கத்தினையும் நாம் எண்ணிப்பார்க்கிறோம். இவ்வாறு எண்ணிப்பார்த்ததன் விளைவாகத் தமிழில் சில துறைகளுக்கான கருத்துகளை முறையாக வெளிப்படுத்துவதற்கான, சில புதுமைகளைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான அமைப்பும் கூறுகளும் இல்லாத நிலை இருந்து வருவது தெரியலாயிற்று. இந்நிலை மாற வேண்டும் என்பதில் இன்று நாம் உறுதியாக இருக்கிறோம். இவ்வுறுதிப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான செயல்வடிவம் கொடுக்கத் திட்டங்கள் சிலவற்றைத் தீட்டி வருகிறோம். இவையே மொழி வளர்ச்சிக்கான திட்டமிடுதலாகும். அதாவது, மொழித் திட்டமிடுதல் (Language planning) எனப்படுகிறது.

# இக்காலத் தமிழின் பயன்பாடும் மொழித் திட்டமிடுதலும்

இக்கால தமிழுக்கு முக்கியமான பயன்பாட்டுக் களங்கள் (Functional domains) உள்ளன. அதில் இடம் பெறுபவற்றுள் குறிப்பிடத்தக்கவை. கல்வித் துறை, ஆட்சித்துறை, தகவல் தொடர்புத்துறை, அறிவியல் துறை போன்றவையாகும். வளர்ந்து வரும் ஒரு நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் மேற்குறிப்பிட்ட துறைகளில் மொழி அல்லது மொழிகளின் பயன்பாடும் மிகவும் அவசியமாகின்றன. ஏனெனில், மொழிப் பயன்பாட்டுத் திறனின் அடிப்படையிலேயே இத்துறைகளின் வளர்ச்சி பெரிதும் அடங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, பன்மொழி வழக்குச் சூழலில், பிற மொழிகளைக் கற்றல்-கற்பித்தல், பயிற்று மொழி, ஆட்சி மொழி, தகவல் தொடர்பு மொழி, அறிவியலுக்கேற்ற மொழி, அனைத்துலகத் தொடர்பிற்கான மொழி போன்றவற்றையெல்லாம் கொள்கை அடிப்படையிலும் சமுதாய நோக்கிலும் தேர்ந்தெடுத்து, மொழிப் பயன்பாட்டில் முதலில் ஈடுபடுத்துகிறோம். அவ்வாறு ஈடுபடுத்தும் நிலையில் அவற்றின் குறை நிறைகள் நமக்குத் தெரிய வருகின்றன. இவற்றைக் களைந்து மொழிகளைத் தன்னிறைவு கொண்டவையாக-பயன்பாட்டிற்கு ஏற்ற ஆற்றல் மிக்கவையாக ஆக்குவது மொழித் திட்டமிடுவோரின் சிறப்பான கடமையாகும்.

இக்கடமையை நிறைவேற்ற சில ஆக்கப் பணிகள் மேற்கொண்டால்தான் மொழி வளர்ச்சி செம்மையாக அமைந்து, அதன் வழி மொழிப் பயன்பாடு வளம் பெறும், இதனால் சமுதாயப் பயன் கூடும். மொழியால் சமுதாயமும் சமுதாயத்தால் மொழியும் சிறக்கும் நிலை ஏற்படும். இக்கருத்துக்களை மையப்படுத்தி, இன்று ஒவ்வொரு மொழியின் வளர்ச்சிக்குமான திட்டப் பணிகளை அரசும் மொழித்திட்டமிடுவோரும் உருவாக்கத் தொடங்கியுள்ளனர். இத்திட்டத்தில் இரு முக்கியமான பகுதிகள் அடங்கியுள்ளன. 1. கொள்கை உருவாக்கத்திட்டம் (Policy/Status planning) 2. மொழிக்கூறுகளின் செம்மையாக்கம் (Corpus planning). இவற்றை ஒருமித்துச் செயற்பாட்டிற்குக் கொண்டு வருவதே implementation process, அதாவது, 'செயல்படுத்தும் முறை' எனப்படுகிறது. இவை ஒன்றையொன்று சார்ந்தும் ஒன்றோடொன்று இணைந்தும் மொழி வளர்ச்சிக்கு உதவுகின்றன. அரசு, உயர்மட்ட நிலையில் மொழிக் கொள்கைகளை உருவாக்கி, அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருகிறது. கொண்டு வருவதற்கு முன்னர் மொழியில் (அ) மொழிகளில் தன்னிறைவு உள்ளதா இல்லையா என்பதைத் தற்சார்பற்ற முறையில் மதிப்பீடு செய்து அம்மதிப்பீட்டின் அடிப்படையில் குறைகளைப் போக்கிட தேவையான மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்திட-உருவாக்கிட சில கொள்கைகளை வரையறை செய்து, அவற்றின் துணை கொண்டு செம்மையாக்கப் பணியை மேற்கொள்கிறது. இதில் மூன்று சிறப்பான நெறிமுறைகள் உள்ளன. அவை: 1. புதுமையாக்கம் (Modernisation) 2. நிலைபேறாக்கம் (Standardisation) 3. எழுதுருவாக்கம் (Graphisation) என்பன. இவற்றுள்ளும் சில கொள்கைகள் அடங்கியுள்ளன. குறிப்பாக, பொதுமைப்பண்பு, கருத்துப் புலப்பாட்டுத்திறன், எடுத்தாளும் திறன் போன்றவை மொழித் கூறுகளின் நிலைபேறாக்கத்திற்கு மிகவும் தேவைப்படுகின்றன.

மொழியின் பயன்பாட்டில் அதிகமாகவும் எளிதாகவும் இடம் பெறுபவை சொற்களே. அதிக அளவில் மாற்றங்களுக்கு உள்ளாவதும் சொற்களே. இவை தொடர்களிலும் வாக்கியங்களிலும் இடம் பெற்று, கருத்துப்புலப்பாட்டிற்குத் துணைசெய்கின்றன. அதாவது

உரைக்கோவை அமைப்பு (Discourse structure) உருவாகிறது. சொற் பொருளும் சமுதாயப் பொருளும் இலக்கணப் பொருளும் சூழலுக்கு ஏற்ப உணர்த்தப்படுகின்றன. உரைக்கோவையின் ஆற்றல்மிக்க அமைப்பு கருத்துக் கோவையாக (Content Structure) நமக்கு வெளிப்படுகிறது. அதாவது, உரைக்கோவையும் கருத்துக் கோவையும் மொழிப் பயன்பாட்டின் தனித்தன்மையையும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றன. இவை சரிவர அமைந்தால்தான் அறிவுத் துறைகளின் வளர்ச்சி மேம்படும். இன்றையச் சூழலில் பல்துறை அறிவும் தமிழ் மூலம் வெளிப்பட நாம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். என்றாலும், அதில் உறுதிப்பாடு தொடர்ந்து அமையாத நிலை இருந்து வருகிறது. மேலும், மொழிக் கொள்கைகளின் (Language policy formulation) உருவாக்கத்தில் ஒரு வித நெகிழ்ச்சி (Flexibility) மற்றும் விட்டுக் கொடுத்தல் பண்பு (Compromise and give and take policy), சமுதாய மற்றும் அரசியல் காரணங்களால் அவ்வப்போதுஏற்பட்டு விடுகின்றன. இத்தகைய நெகிழ்ச்சியால் ஆக்கப்பணிகளில் அல்லது அவ்வப்போது மேற்கொள்ளப்படும் செயல்முறைகளில் மாற்றங்களும் இடையீடுகளும் ஏற்படுகின்றன. இதனால், ஆக்கப் பணிகளில் **தேக்க நிலை** தோன்றிவிடுகிறது. இவ்வாறெல்லாம் ஏற்பட்டுவரும் நெகிழ்ச்சி, இடையீடு, மாற்றம், உறுதியற்ற நிலை போன்றவற்றால் மொழி பயன்படுத்துவோரிடையே (Language Users) ஒரு வித குழப்பமான சூழல் காணப்படுகிறது. அவர்களது மொழியின்பாற்பட்ட மனப்பாங்குகளிலும் (Language attitudes) சிற்சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. கல்வித்துறையில் தமிழ் பயிற்று மொழியாக முப்பதாண்டுகளுக்கு முன்னரே ஈடுபடுத்தப்பட்டு இருந்தும், அதன் வளர்ச்சி வளர்ந்த மொழிகள் எனப்படும் பிறமொழிகளுக்கு ஈடு கொடுக்கும் நிலையில் அமையாத நிலையே காணப்படுகிறது. ஏனெனில், செயலாக்க முறையில் ஏற்பட்ட இடையீடுகள், இடைவெளி போன்றவற்றின் காரணமாகத் தன்னிறைவு பெற முடியவில்லை. அதாவது, தொடங்கிய நிலைக்கே மீண்டும் நமது மொழிப்பயன்பாடும் நாமும் வந்துள்ளோம். கலைச் சொல்லாக்கப்பணி, மொழிப் பயன்பாடு குறித்த தொடக்க நிலைப்பணி. அதனை அடிப்படையாகக் கொண்டே பாடமாக்கம் (Textualisation), நூலாக்கம், அறிவுப்பரவலாக்கம் (Propagation/ Extension of knowledge) போன்ற தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது மிகவும் சரியான-முறையான ஒன்று. எனினும் இதுவரை இப்பணிகள் ஓரளவிற்கே செம்மையாக நடந்துள்ளன. இவற்றில் பெரும்பான்மையான பணிகள் தொடக்க நிலைப் பணிகளாகவே இன்றும் உள்ளன. பல துறைகளுக்கான பாடமாக்கமும் நூலாக்கமும் தன்னிறைவற்ற நிலையிலேயே அமைந்துள்ளன. இது கல்வித்துறையில் இன்று இருந்து வரும் தமிழின் பயன்பாட்டு நிலையாகும். பிற களங்களில் குறிப்பாக, ஆட்சித்துறையிலும் தகவல் தொடர்புத் துறையிலும் முறைசார் ஆக்கப்பணிகள் குறிப்பிடத்தக்க அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. என்றாலும், ஆக்கத்திற்கும் செயற்பாட்டிற்குமிடையே கொண்டு-கொடுப்பு முறையாகவும் நிறைவாகவும் அமையாதது பெருங்குறையாகவே உள்ளது.

எனவே மொழி வளர்ச்சிக்கான கொள்கைகளையும் கூறுகளையும் உருவாக்குவது மட்டுமே ஆக்கப்பணி என்று கருதிக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து, அவற்றால் சமுதாயம் பயன்பெறும் வகையில்

திட்டங்களைச் செயற்படுத்தும்போதே, மொழிப்பயன்பாடு ஆற்றல் பெறுவதோடு, சமுதாயத்திற்குப் பயன் விளைவிப்பதாகவும் அது அமைய வழி ஏற்படும். எனவேதான், மொழித்திட்டமிடுதலின் நோக்கம், சமுதாயத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு வெளிப்படையாக மேற்கொள்ளப்படுவது என்று கருதப்படுகிறது. இந்நிலை தமிழ் மொழியின் வளர்ச்சிப் பாதையில் இன்று வெள்ளிடை மலை. இந்நிலை மாறவேண்டும். அவ்வாறு மாற முறையான மொழி வளர்ச்சிப் பணிகள் சமுதாய நோக்கில் அமையப் பாடுபட வேண்டியது-முயற்சிகளை முனைந்து மேற்கொள்ள வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

* * *

## சிறைபட்ட சிந்தனைகள்

அறிஞர்கள் நூலினும் நிகழும் அவலங்கள்
அதிகமாய் ஆய்ந்திடத் தூண்டுது! தீய
நெறிகளின் விளைவுகள் மனதிலே பட்டு
நிறையவே சிந்தனை பிறக்குது! - அதை
குறித்தொரு நூலாகச் சமைத்துக் கொடுத்திட
கொள்ளையாய் ஆசைகள் கிளம்புது! ஆனால்
வறியவனான என்சிந்தனைக் கெல்லாம் எங்கே
வழிவகை பிறந்திடப் போகுது!
எழுத்துத் துறையும் லாபங்கள் ஈட்டும்
எந்திரத் தொழில் போல ஆனது - அதில்
கொழுத்த வியாபாரப் பொருள் என்பதெல்லாம்
கூறமுடியாப்புது கொக்கோக மானது - அதனால்
விழுந்த சமுதாய மேம்பாட்டுக் கானவை
விலையில்லாப் பொருளாகப் போனது - எந்தன்
விழுமிய சிந்தனை அனைத்துமே பேழையுள்
விழுந்து சிறைபட்டுப் போனது!

**குன்றம் மு.இராமரத்நம் அவர்களின் சிறைமீண்ட கவிதைகளிலிருந்து**

padippakam

# அறிவியல் தமிழ் ஆக்கம்

**முனைவர் இராம.சுந்தரம்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

அறிவியல் தமிழ் ஆக்கம் குறித்த இக்கட்டுரையைத் தமிழர்தம் அறிவியல் தொழில் நுட்பச் சிந்தனை பற்றிய ஒரு சிலவரலாற்றுக் குறிப்போடு தொடங்குவது பொருத்த மெனத் தோன்றுகிறது.

மனித சமுதாய வரலாற்றின் ஒரு பகுதியாக அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சி அமையும். தமிழ்ச்சமுதாய வரலாறும் இதற்கு விதிவிலக்கன்று. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் இடம்பெற்ற அறிவியல் உணர்வு, தொழில்நுட்பத்திறன் பற்றி அறிய பண்டைய இலக்கிய இலக்கணங்களும் அவற்றின் உரைகளும் உதவுகின்றன. தமிழ்ச் சமுதாயம் திராவிடர் சமுதாயத்தின் ஒரு கிளை என்கிற கருத்தையும், சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்கிற கருதுகோளையும் ஏற்று வரலாற்றை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தள்ளிப் பார்த்தால் திராவிடரின் தொழில் நுட்பத்திறன் வியக்க வைக்கிறது. மொகஞ்சதாரோ, ஹாரப்பா நகரங்களின் கட்டமைப்பு பற்றியும், பெரியகுளம் பற்றியும் வரலாற்றாசிரியர்களும் தொல்பொருள் ஆய்வாளர்களும் விளங்க உரைத்து வியந்து நிற்கின்றனர். சிந்துவெளிப் பண்பாட்டின் சிறப்புக் கூறாக, அங்கு வீடுகட்டப் பயன்பட்ட செங்கல் தொழில் நுட்பம் திகழ்கிறது. இந்தச் செங்கல்லைச் சுல்வசூத்திரம்-சிந்துவெளி நாகரிகத்தின் இறுதிக்கட்டத்துக்கு 1000 ஆண்டுகளுக்குப் பின் எழுந்த சமஸ்கிருத நூல் 'இஷ்டிக' எனக் குறிக்கிறது. 'இஷ்டிக' என்ற சொல்லுக்கு இந்தோ-ஆரிய மூலம் கிடைக்கவில்லை என்றும், அது திராவிடச்சொல்லை மூலமாகக் கொண்டிருக்கலாம் என்றும் தேவிபிரசாத் சட்டோபாத்யாய கருதுகிறார். மலையாளம், கன்னடம் ஆகியவற்றில் 'இஷ்டிக'என்றே வழங்கப்படும் இச்சொல்லின் தமிழ் வடிவம் 'இட்டிகை' என்பதாகும். 'இட்டிகை' நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென' (அகநானூறு:167) என்ற வரியும், இட்டிகை-செங்கல்; ஈண்டு பலிபீடம் என்ற குறிப்பும் (அகநானூறு:287) சட்டோபாத்யாய கருத்தை அரண் செய்யும். சிலப்பதிகாரமும் ஓடுமண் சுங்கிய நெடுநிலை மாடங்கள் பற்றி வியந்துகூறும்.

சிந்துவெளிக்குப் பிந்திய ஆதிச்சநல்லூர், பய்யாம்பள்ளி தொல்பொருள் கண்டு பிடிப்புகள் தமிழர்களின் பலவகை உலோகத் தொழில்நுட்ப அறிவை எடுத்துக்காட்டும்.

பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் 'கொடுமணம் பட்ட வினைமாண்' அருங்கலம் புலவர் கற்பனையன்று, உண்மைச் செய்தியே என்பதை பெரியார் மாவட்டம் கொடு மணலில் தமிழ்ப்பல்கலைக்கழகத் தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்வு தெளிவுப்படுத்தியுள்ளது. அற்புதமான வேலைப்பாடமைந்த துளையிடப்பட்ட மணி மாலைகளும், கண்ணாடி வளையல்களும், இரும்பு உலைக்களமும் இங்கே காணப்பட்டன.

படிப்பகம்

'மென்தோல் மிதிஉலைக்கொல்லன், முறிகொடிற்றன்ன கவைத்தாள் அலவன்' (பெரும்பாணாற்றுப்படை, 206-208) என்ற வரி கொல்லனுடைய உலைக்களத்தையும் அவன் பயன்படுத்திய துருத்தி, கொறடு முதலியவற்றையும் சுட்டுகின்றது.

போர்த்தொழில், வேளாண்தொழில், கட்டடத்தொழில் தொடர்பான தொழில் நுட்பம் சிறந்திருந்தது; நெசவுத்தொழிலும் உயர்ந்திருந்தது. பலவகை அணிகலன்களை உருவாக்கும் தொழில்நுட்பமும் வழக்கிலிருந்தது. பழந்தமிழ் நூல்களைப் படிக்கும்போது கிடைக்கும் பல கலைச்சொற்கள் தமிழர் தம் அறிவியல் தொழில்நுட்பத் திறனுக்குச் சான்றாகின்றன. 'வேயாமாடம்', 'நாழிகைக்கணக்கர்', 'திருமணி குயிற்றுநர்', 'செலிகோல்', 'தாதெரு', 'தளம்பு துளர்', 'அடார்', 'இணர்', 'மகார் மருந்தாளர்', 'குளிரி', 'ஞாயில்' - இவை ஒரு சோற்றுப்பதம்.

படகுத் தொழில்நுட்பத்தை அம்பி, புணை, திமில், நாவாய், வங்கம், கலம், தோணி, ஓடம், படகு, மிதவை, தெப்பம், கைப்பந்தல், கப்பல், வள்ளம், வஞ்சி முதலாய சொற்கள் விளக்கும். மீன்பிடிபடகு, உல்லாசப்படகு, சரக்குப்படகு, போக்குவரத்துப்படகு, போர்ப்படகு எனப் பலவகைப்படகுகளை உள்ளடக்கிய சொற்கள் இவை. நெல், செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, பதக்கு, குறுணி, கலம், பறை முதலிய அளவுக்குறியீடுகள் தமிழரின் கணிதவியல் வெளிப்பாடு. தொல்காப்பியம் இவற்றுக்கு இலக்கணம் கூறுவது இன்னொரு சமுதாயச்சித்திரம்.

பழந்தமிழ்ப்புலவர்கள் அறிவியல் அறிஞர்கள் அல்லர். தாம் எடுத்துக்கொண்ட பாடுபொருளுக்கு ஏற்ற இயற்கை நிகழ்வுகளைப் பொருத்திப்பாடிய வரிகளில் கிடைக்கும் அறிவியல் செய்திகள் இவை. செடி கொடி பற்றியும் பறவை விலங்கு பற்றியும் இவர்கள் பல குறிப்புக்களைப் பொதிந்து வைத்துள்ளனர். அவற்றுள் பல இன்றைய தாவரவியல், விலங்கியல் உண்மைகளோடு பொருந்திவருவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

இவ்வகை அறிவும் நுட்பமும் அன்றைய தமிழ்ச்சூழலில் இயல்பாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தமிழ்ச்சூழல் மாறி, அயலவர் ஆதிக்கத்திற்கு இடம் தந்தபோது இந்த அறிவும் நுட்பமும் புறந்தள்ளப்பட்டன; அல்லது அயல் சூழலில் உள்வாங்கப்பட்டு, புதுமுறையில் திருப்பித்தரப்பட்டன. இடைக்காலத் தமிழக அரசுகளின் (பல்லவர், சோழர்) ஆதரவுடன் இந்த மாற்றம் நிகழ்கிறது. நோய், நோயாளி, மருத்துவன், உழைச்செல்வான் மருந்தாளர் ஆகிய சொற்கள் வியாதி, வியாதிதன், பண்டிதன், பரிகாரன் என உருமாறின. தமிழ்க்கல்வியும், தமிழ்வழிக்கல்வியும், தமிழ்ச்சிந்தனையும் சமஸ்கிருதச் செல்வாக்கால் பின்தள்ளப்பட்டன. இந்த ஆதிக்கச் சூழலிலும் அறிவியல் தொழில்நுட்பம் தொடர்பான சில நூல்கள் தோன்றின. குறிப்பாக சித்த மருத்துவ நூல்கள்.

காலம் ஓடியது. ஐரோப்பியர் வந்தனர். ஆங்கிலம் கோலோச்சத்தொடங்கியது. மீண்டும் தமிழ் இரண்டாம் இடத்துக்குச் சென்றது. இருப்பினும், ஐரோப்பியர் கல்வி முறையில் ஜனநாயகத்தன்மை இருந்ததால் குறிப்பிட்ட கட்டம் வரை தமிழ்வழிகற்கும் நிலைமை இருந்தது. அதன் பலனாக, ஐரோப்பியர் அறிமுகம் செய்த அறிவியல் - தொழில்நுட்பம் பற்றிய நூல்கள் வெளிவரலாயின. தொடக்கப்பள்ளி நிலையிலும் பின்னர் இடைநிலைப்பள்ளி அளவிலும் தமிழ்வழிக் கற்பிக்கும் சூழல் இருந்ததால் அவற்றிற்கான பாட நூல்கள் எழுதப்பட்டன. தமிழர் அறிவு பெறுதற்காக 1832-இல் இரேனியுஸ்

பாதிரியாரால் **பூமி சாஸ்திரம்** எழுதப்பட்டது. தொடர்ந்து பல அறிவியல் நூல்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் வெளியாயின.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அறிவியல் தமிழ் ஆக்கத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். டாக்டர் சாமுவேல்ஃபிஷ் கிறீன் (1827-1884) என்ற அமெரிக்கர் யாழ்ப்பாணம் வந்து, தமிழ் கற்று, மதபோதனையுடன் மருத்துவ அறிவியலையும் போதித்தார். 1872-இல் **மனுஷ அகராதி பாதம் (Human Anatomy)** என்கிற மொழிபெயர்ப்பு நூல் வெளியானது. தொடர்ந்து சில மருத்துவ நூல்கள்; கலைச்சொல் பட்டியல்கள் தமிழ்வழி அலோபதி மருத்துவத்தைக் கற்பித்து வெற்றிகண்டார். இடைக்காலத் தமிழகச் சூழலில் மேலோங்கி நின்ற சகுனம், சூனியம், சோதிடம், மூட நம்பிக்கைகளுக்கு மாற்றாக அறிவியல் உணர்வை ஏற்படுத்தும் விதத்தில் புதிய அறிவியலைத் தமிழ்வழி வளர்க்கும் முயற்சியில் கிறீனும் அவரது ஈழத்தமிழ் மாணவர்களும் முன்நின்றனர். கிறீன் தமது **கெமிஸ்தம்** (1875) என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது:- "இல்லாத சாஸ்திரமென்றமைப்பில் பதுங்கி, தமிழருக்கு நாசமோசத்தை வருவிக்கும் சகுனம் சூனியம் முதலிய பெயர்கள் தடையின்றி நித்தமும் உலவுகின்றன. இரசவாதத்துக்குப் பதிலாக பொருள்களின் துகளைக் குறிக்கும் கெமிஸ்தமென்றவித்தையும் சோதிட சாஸ்திரத்துக்குப் பதிலாக நட்சத்திரங்களின் தன்மைகளைச் சரியாய்ச் சொல்லும் வான சாஸ்திரத்தையும் இல்லாத ராட்சதர் தேவதைகளைப் பற்றிய கதைகளுக்குப் பதிலாக உள்ள சரித்திரங்களையும் சுருக்கிச் சொல்லுகையில் பொய்யான கல்விக்குப் பதிலாக மெய்யான அறிவைத் தேசத்தில் நிறுத்துவது, ஊரிலும் ஆளிலும் உள்ள துர்எண்ணப் பழக்கங்களை அகற்றுமென்று நம்பி விரும்புகிறபடியால் இப்புஸ்தகம் பிரசுரமாகிறது."

பூமி சாஸ்திரமும் கெமிஸ்தமும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தன:- தமிழர்கள் உண்மை அறிவு பெறவேண்டும். சமஸ்கிருதத்தில் நல்ல அறிவியல் தொழில்நுட்பநூல்கள் இருந்தன என்பது உண்மை. ஆனால் அந்த நூலறிவு அனைவருக்கும் கிடைக்கவில்லை. சமஸ்கிருத அறிவியல் விற்பன்னர்களைப் புரோகிதக் குழு அரசு அரவணைப்போடு அமுழ்த்திவைத்திருந்தது. கலிலியோ வரலாறு நமக்கெல்லாம் தெரிந்ததுதானே! ஐரோப்பாவில் மதத்துக்கு எதிராக அறிவியல் தலை எடுத்தபோதெல்லாம் அறிவியலுலகில் பின்னடைவே ஏற்பட்டது. இந்தியாவிலும் அதே நிலைதான். ஆனால் தொழிற்புரட்சி மற்றும் மக்களாட்சி மலர்ச்சிக்குப் பின்னர் நிகழ்ந்த அறிவியல்-தொழில்நுட்பச் சாதனைகள் மதத்தையும் மதாச்சாரியார்களையும் புறந்தள்ளி, தம்மை நிலைநிறுத்திக்கொண்டன. இன்று மதபோதனைக்கு மைக் தேவைப்படுகிறது. அறிவியலை மதம் ஏவல்கொண்ட நிலை மாறி, அறிவியல் அனைத்தையும் கட்டுப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. உலகின் பல பாகங்களிலும் இதுதான் இன்றைய நிலை.

இந்தியா 1947-இல் விடுதலை பெற்றது. விடுதலை பெறுதற்கு முன்பு தாய்மொழி வழிக்கல்வி பற்றி காந்தி, தாகூர், பாரதி போன்ற பலரும் வற்புறுத்தினர். ஆங்கிலத்தை அகற்றித் தாய்மொழியைப் பயிற்று மொழியாக்கும் முயற்சி இது. இந்த முயற்சி இந்தியாவெங்கும் முழு வெற்றி பெறவில்லை என்றாலும், தமிழகத்தில் உயர்நிலைப்பள்ளி வரை தமிழில் படிக்கும் வாய்ப்பு இருந்தது. விடுதலைக்குப் பின், இது இன்னும் விரிவு பெற்று, கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

1960-களில் தமிழகத்தில் சோதனை முயற்சியாகப் பட்டப்படிப்பு மட்டத்தில் மானிடவியல் பாடங்களைத் தமிழ் வழிக் கற்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பின்னர் சிறிது சிறிதாக அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் செயல்திட்டமும் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் பல பாட நூல்களையும் கலைச்சொல் பட்டியல்களையும் வெளியிட்டது. ஆனால், இந்த நிலை தொடர்வதில் அரசியல் குறுக்கிட்டது. எனவே, தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்கவேண்டியதற்குப் பதிலாக தமிழும் ஆங்கிலமும் பயிற்று மொழியாக நீடிக்கும் அவல நிலை தொடர்கிறது. இந்த அவல நிலையை மாற்றும் வகையில் பல தீவிர முயற்சிகள் அறிவியல் தமிழ் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முயற்சிகள் நம்பிக்கை தருவதாக இருப்பதோடு, தமிழின் புலப்பாட்டுத்திறனையும் மெய்ப்பித்துள்ளது. அம்முயற்சிகள் பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

அறிவியலைத் தமிழில் சொல்லமுடியாது, அதற்கான நூல்கள், கலைச்சொற்கள் இல்லை என்பதுதான் தமிழைப் பயிற்று மொழியாக்குவதில் உள்ள சிக்கல் எனக் கூறப்படுகிறது. ஆனால், இது உண்மையன்று என்பதை அண்மைக்காலத்தில் குறிப்பாக கடந்த 10,15 ஆண்டுகளில் வெளியாகியுள்ள நூல்கள், கட்டுரைகள், கலைச்சொல் பட்டியல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் அறிவியல் கல்வி என்பது கலைச்சொல்லோடு மட்டும் அமைந்துவிடுவதில்லை. அறிவியலுக்கென ஒரு மொழிநடை உண்டு அறிவியலுக்கென ஒரு உரைக்கட்டு (Discourse) உண்டு. தமிழே பயிற்று மொழி என்கிற சூழல் இல்லாத இக்காலக்கட்டத்திலும் கூட அறிவியல் தமிழ்மொழி நடையும், உரைக்கட்டும், கலைச்சொற்களும் உருவாகி நம்பிக்கை ஊட்டுகின்றன என்பது இங்கு அழுத்தமாகக் குறிப்பிட வேண்டிய செய்தியாகும். மேலும் அறிவியல் தமிழ் வளர்ச்சி என்னும்போது இலங்கை, சிங்கப்பூர் மலேசியா முயற்சிகளையும் கணக்கில் கொள்ளவேண்டும்.

## கலைச்சொற்கள்

இக்கட்டுரையின் தொடக்கத்தில் பழந்தமிழில் காணப்பட்ட கலைச்சொற்கள் சில சான்றாகத் தரப்பட்டன. அவற்றை முழுமையாகத் திரட்டித் தொகுத்து அகராதியாக்கும் பணி தமிழ்ப்பல்கலைக்கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறையில் நடைபெற்று வருகிறது. அன்றைய தமிழர்க்குத் தேவையான அறிவியல் தொழில்நுட்பக் கலைச் சொற்களை அவர்கள் உருவாக்கிக் கொண்டனர். அவர்களது அறிவியல் சாதனை அவர்தம் சுயமுயற்சி சார்ந்தது; கடன் வாங்கல் குறைவு. எனவே, கலைசொற்களைத் தேவைக்கேற்ப உருவாக்க முடிந்தது. இன்றைய நமது அறிவியல் கல்வி மேலை நாட்டு அறிவியல் கல்வி வழிப்பட்டது; கடன் வாங்கும் கல்வி. ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளில் அறிவியல் -தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளோடு சேர்ந்து அவர்தம் மொழிகளும் வளர்கின்றன. நமக்கு அத்தகைய சூழல் இல்லை. எனவே, நாம், நமக்குத் தெரிந்த, பழக்கமான ஆங்கிலச் சொல்லை மையப்படுத்தித் தமிழில் கலைச்சொல் உருவாக்குகிறோம். பழையசொற்களுக்குப் புதுப்பொருள் தேடுகிறோம். இயலாத இடத்து மொழிப்பெயர்க்கிறோம் அல்லது எழுத்துப் பெயர்க்கிறோம். இம்முறைகளைக் கையாண்டு ஏறத்தாழ 2 இலட்சம் சொற்கள்

உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் பயன்படுத்துகிற சூழல் முழுமையாக இல்லாத காரணத்தால் இவற்றின் வன்மை மென்மை புலப்படவில்லை; இவற்றின் பயன்பாடு இல்லாத காரணத்தால் தமிழில் கலைச்சொற்கள் இல்லை என்கிற கூப்பாடும் ஓயவில்லை. ஆனால் உண்மை என்னவென்றால், தமிழில் தேவையான கலைச்சொற்கள் உள்ளன என்பதுதான். கம்ப்யூட்டர் அறிமுகமான நிலையில் கலைச்சொல் தடுமாற்றம் ஏற்பட்டது. கணிப்பொறி உருவாகித் தடுமாற்றத்தையும் போக்கியது. தற்போது கணினி தரப்படுத்தப்பட்ட சொல்லாயிற்று (Standardized form) தமிழகத்தை விடவும் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் கணினிப் பயன்பாடு மிகுதி. எனவே, அங்குள்ள தமிழர்கள் புதுப்புதுச் சொற்களை உருவாக்கிப் புழங்கி வருகின்றார்கள். Software, Hardware என்பன முறையே மென்பொருள், வன்பொருள் என ஆயின. சொல்லின் உருவாக்கமும் நிலைபெறும் அதன் பயன்பாட்டைப் பொறுத்தே அமையும். தமிழில் கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. கணினி விசைப்பலகையும் தமிழுக்கேற்றவண்ணம் உருப்பெற்றுள்ளது. தொல்காப்பியர் அறிந்திருந்த அழானும் புழானும் நமக்குத் தெரியாது; காரணம், நம் வழக்கில் அவை இல்லை. எனவே, மென்பொருளும் வன்பொருளும் புழக்கத்தில் வரும்போது நிலைபெறும் அல்லது இவற்றினும் நல்ல சொற்கள் உருவாகும். 'தண்டல்நாயகம்', 'மாவட்ட ஆட்சித்தலைவர்' என்பன மறைந்து 'ஆட்சியர்' என்ற சொல் நிலைபெற்றுவிட்டதல்லவா? எனவே, தமிழில் அறிவியல் கலைச்சொல் இல்லை என்பது பொருந்தாக்கூற்றாகும். பயன்பாடும் தேவையும் கருதி, புதிய கலைச்சொற்கள் தமிழில் உருவாகும், அதற்கான ஆற்றல் தமிழுக்கு உண்டு. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், கலைக்கதிர், தமிழ்ப் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் முதலிய நிறுவனங்களும், மணவை. முஸ்தபா, சாமி சண்முகம் ஆகியோரும் வெளியிட்டுள்ள கலைச்சொல் பட்டியல்கள் தமிழின் கலைச் சொல்லாக்கத்திறனை விளக்கும். மணவை. முஸ்தபா தமது **அறிவியல் கலைச்சொல் களஞ்சிய**த்தில் தமிழ்க்கலைச் சொல்லுக்கான விளக்கம் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் கலைச் சொல் வங்கி கலைச்சொல் வேண்டுவோர் தேவையை நிறைவு செய்துவருகிறது. புதுப்புதுக் கலைச்சொல் அகராதிகள் தொடர்ந்து வெளிவரவேண்டும். கலைச் சொல்லை உருவாக்குதல், பட்டியலிடுதல், அகராதியாக வெளியிடுதல் பெருஞ்செயல் அல்ல, ஆனால், அச்சொற்களைப் பயன்படுத்தும் சூழல் வேண்டும். சூழலை உண்டுபண்ணாமல் மொழி 'மீது குறை சொல்வது நிலம் என்னும் நல்லாள் நகும்' என்ற கதைதான்.

## நூல்கள்

அறிவியல் தமிழ் நூல்களில் நான்கு வகை உண்டு. 1) பாடநூல் 2) பொது அறிவியல் நூல் 3) சிறுவர் நூல், 4) நோக்கு நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் இரண்டும் பட்டப்படிப்புக்காகப் பாடநூல்களை வெளியிட்டுள்ளன, பிற பல்கலைக் கழகங்களும் பாடநூல்களை வெளியிடும் திட்டத்தைச் செயல்படுத்துகின்றன, அண்ணா பல்கலைக் கழகம் பொறியியல் பாட நூல்களையும் தமிழ்ப் பல்கலைக் கழகம், பொறியியல், மருத்துவப் பாட நூல்களையும் வெளியிடுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம் 14 மருத்துவ நூல்களையும், 13 பொறியியல் நூல்களையும், 1984-ஆம் ஆண்டிலேயே வெளியிட ஆயத்தம் செய்தது. கடந்த 10 ஆண்டுகளில் 5 மருத்துவ நூல்களும் ஒரு

பொறியியல் நூலும் வெளிவந்துள்ளன. மருத்துவ நூல்களுக்கு மாணவரிடையே வரவேற்பு இருக்கிறது. (மருந்தியல் நூல் 1500 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளது). ஏனைய நூல்களை வெளியிடப் போதிய நிதி வசதி இல்லை. அரசும் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை, 1984இல் 27 நூல்களையும் அடுத்துவரும் ஆண்டுகளில் 10 நூல் வீதமும் வெளியிடுவது தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கமாக இருந்தது. ஆனால் நிதிக்குறைவால் திட்டம் செயல்படச் சுணக்கம் ஏற்பட்டுள்ளது, என்.சி.பி.எச். நிறுவனமும் வேறு சில தனியார் பதிப்பகங்களும் பாட நூல்களை வெளியிடத் தொடங்கியுள்ளன. தமிழாக்கப்பட்ட சோவியத் பாட நூல்கள் கூட மாணவர்கள் மத்தியில் புழங்கி வருவதாக அறியப்படுகிறது. இவ்வரிசையில் பொறியியல், மருத்துவம் மற்றும் பிற அறிவியல் நூல்கள் நிறைய வெளிவந்துள்ளன.

பொது அறிவியல் நூல்கள் (Popular Science) கணிசமான அளவில் வெளிவந்துள்ளன, குறிப்பாக, மருத்துவ நூல்களும் எந்திரவியல் மற்றும் கணினி நூல்களும். டாக்டர் அ. கதிரேசன் எழுதிய காசநோய் தொடர்பான நூல் நிறைய விற்பனையாகியுள்ளதாகப் பதிப்பாளர் தெரிவித்தார். தற்போது, கணினி, ரேடியோ மெக்கானிசம் முதலிய தலைப்பிலான பயில்முறை நூல்கள் ஏராளமாக விற்கப்படுகின்றன. தேவை இருப்பதால் சந்தையும் இருக்கிறது. என்.சி.பி.எச். ஹிக்கின்பாதம்ஸ் முதலியன நல்ல அறிவியல் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளன.

சிறுவர் நூல்களும் ஓரளவு வெளிவந்துள்ளன, மனோன்மணி புத்தக நிலையம் 1960களில் பல தலைப்புகளில் சிறுவர் அறிவியல் நூல்களை வெளியிட்டது. பழனியப்பா பிரதர்ஸ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், என்.சி.பி.எச்., நேஷனல் புக் டிரஸ்ட்., தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலமும், கல்வி. கோபாலகிருஷ்ணன், பெ.நா. அப்புஸ்வாமி முதலியோர் மூலமும் தரமான சிறுவர் நூல்கள் வெளியாகியுள்ளன. ஆயினும் வெளியாகியுள்ள நூல்களின் எண்ணிக்கை ஆங்கில நூல் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது குறைவுதான். தமிழகத்தில் ஆங்கில மழலையர் பள்ளிகள் (Nursery Schools) 30,000 இருப்பதாகத் தெரிகிறது. ஒரு பள்ளிக்கு ஒரு நூல் என்றால்கூட 30,000 நூல்கள் விற்கின்றன. தமிழுக்கு அந்தத்தேவை இல்லாததால், தமிழ்நூலை வெளியிடுபவர்கள்கூட ஆங்கில நூலை வெளியிட அவசரப்படுகிறார்கள். இந்நிலை மாறும்போது தமிழர் சிறுவர் நூல்கள் ஏராளமாக வெளிவரும். மலேசியா, சிங்கப்பூர், இலங்கையில் கணிசமான அளவு சிறுவர் நூல்களும் ஒலிப்பேழைகளும் கிடைக்கின்றன.

கலைக்களஞ்சியம், கலைச்சொல் பட்டியல் முதலிய நோக்கு நூல்களும் (Reference books) வெளிவந்துள்ளன. பெ. தூரன் அவர்கள் பொறுப்பில் பல ஆண்டுகளுக்கு முன்பே பொதுக் கலைக் களஞ்சியமும், குழந்தைகள் களஞ்சியமும் வெளியாகியுள்ளன. தமிழ்ப்பல்கலைக்கழகம் வாழ்வியல் களஞ்சியம் 14 தொகுதிகளும், அறிவியல் களஞ்சியம் 8 தொகுதிகளும் வெளியிட்டுள்ளது. இன்னும் 12 அறிவியல் களஞ்சியத் தொகுதிகள் வெளிவர உள்ளன. கலைக்களஞ்சியங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. பிற இந்திய மொழிகளில் களஞ்சியங்கள் வெளிவருவதற்கு முன்பே தமிழில் கலைக்களஞ்சியம் வெளிவந்துள்ள வரலாற்றுக்குறிப்பும் இங்கு நினைக்கத்தக்கது.

padippakam

இவ்வாறு பலதரப்பட்ட நூல்கள் வெளிவந்தும் அவை பற்றிய தகவல் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. காரணம், அவற்றைப்பட்டியலிட்டு நூலடைவுகளாக வெளியிட யாரும் முன்வரவில்லை. தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள **அறிவியல் தமிழ் வெளியீடுகள் - நூலடைவு** என்ற நூல் சுமார் 4000 பதிவுகளைக் கொண்டுள்ளது. 1989 இல் வெளியான இந்நூலில் உள்ள பதிவுகள் 1985க்கு முன் வெளியான நூல்கள் கட்டுரைகள் பற்றியதாகும். அதுவும் முழுமையானதல்ல. இந்த நூலடைவுப் பணியை ஒரு திட்டமாகக் கொண்டு 2 ஆண்டுகள் உழைத்தால் 15,000 - 20,000 பதிவுகள் கிடைக்கும் என்பது உறுதி. தமிழகத்தில் நடைபெற்றுள்ள அறிவியல் ஆக்கப்பணிகள் குறித்த ஒருங்கிணைப்புத் திட்டம் இல்லாததால் பல தகவல்கள் தெரியவில்லை; தெரியாததால் தமிழில் இல்லை என்கிற கூக்குரலும் அடங்கவில்லை.

## இதழ்கள்

உலகில் வெளிவரும் ஆங்கில அறிவியல் இதழ்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து வருவதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்தியாவில் Science Age' என்ற ஒரு தரமான அறிவியல் இதழ் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்து நின்றுவிட்டது. Science Today என்ற இதழும் சில ஆண்டுகள் வந்தது; பிறகு 2001 என்கிற பெயரில் சில மாதங்கள் வந்து, தன்வருகையை நிறுத்திக்கொண்டது, தற்பொழுது `Science Reporter' `Science & Culture' `Down to Earth' என்று விரல்விட்டு எண்ணத்தக்க அளவில் சில இதழ்களே வருகின்றன. ஆங்கில இதழ்களுக்கே இந்த நிலை என்றால், தமிழைப் பற்றிக்கவலைப்படுவதில் பொருள் இல்லை. இருப்பினும், கலைக்கதிர், விஞ்ஞானச்சுடர், களஞ்சியம், துளிர், அறிக அறிவியல், அறிவியல் துளி, ஹெல்த், மருத்துவம், மூலிகைமணி, சித்தமருத்துவம், வளர்தொழில், கோழிப்பண்ணை, கோழி கூவுது, மின்தொழில், கால்நடைக்கதிர், வளரும் வேளாண்மை, உங்கள் ஹோமியோ நண்பன், உங்கள் உடல்நலம் எனப்பல இதழ்கள் தமிழில் தொடர்ந்து வெளிவருவது நம்பிக்கையூட்டுகிறது. கலைக்கதிர் 1949 தொடங்கி இன்னும் வெளிவருவது நாமெல்லாம் பெருமைப்படத்தக்கச் செய்தி.

'துளிர்' என்கிற சிறுவர் இதழின் விற்பனை பல ஆயிரமாக இருப்பதும் பாராட்டத்தக்கதாகும். மலையாளத்தில் வெளியாகும் 'யுரேகா' இதழ் போல இதுவும் பள்ளி மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பெற்றோர்கள் குழந்தைகளை உற்சாகப்படுத்தி இவ்வகை இதழ்களை வாங்கித் தரவேண்டும். அறிவியல் இதழ்களேயன்றி, குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், இந்தியா டுடே முதலியனவும் அவ்வப்போது அறிவியல் செய்திகளை வெளியிடுகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, கலைமகள் ஆகியன தொடக்க காலம் முதற்கொண்டே அறிவியல் கட்டுரைகள் வெளியிடுகின்றன. 1920களில் செந்தமிழ் 'பிரகிருதி சாஸ்திரம்' என்கிற தலைப்பில் Physics பற்றி பல இதழ்களில் தொடர் கட்டுரையாக வெளியிட்டது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கலைக்கதிர்,. துளிர் இதழ்கள் பற்றிய ஆய்வுகளும் நடைபெற்றுள்ளன.

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களுள் மின்னணுவியல் சாதனங்களான வானொலியும், தொலைக்காட்சியும் அறிவியலைத் தமிழ்வழி ஒலி-ஒளி பரப்பி வருவதும்

படிப்பகம்

குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அறிவியல் இயக்கம், மக்கள் அறிவியல் இயக்கம், சுதேசி விஞ்ஞான இயக்கம், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தமிழக அறிவியல் பேரவை, வளர்தமிழ் மன்றம் முதலான அமைப்புகள் ஆண்டுதோறும் அறிவியல் பரப்பும் நிகழ்ச்சிகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவதன் மூலம் அறிவியல் தமிழ் வளர உதவுகின்றன. அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம் நான்கு கருத்தரங்குகளை நடத்தி, கருத்தரங்கக் கட்டுரைகளை நான்கு தொகுதிகளாக 'வளர்தமிழில் அறிவியல்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. இவற்றுள் 200 கட்டுரைகள் உள்ளன. தமிழக அறிவியல் பேரவை அனைத்துத் தமிழகப் பல்கலைக்கழகங்களின் உதவியுடன் மூன்று கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. ஒவ்வொரு கருத்தரங்கிலும் 500க்கு மேற்பட்ட கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட்டன. இவையேயன்றி, தமிழகப் பல்கலைக்கழகங்கள் அறிவியல் தமிழ்க் கருத்தரங்குகளை ஆண்டுதோறும் நடத்தி அறிவியல் புதுமைகளைத் தமிழ் வழி வெளிப்படுத்துகின்றன. இவை எல்லாவற்றையும் - நூல்கள், இதழ்கள், இயக்கங்கள், நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் ஒரு சேர வைத்து எண்ணும்போது அறிவியல் தமிழ் ஆக்கம் குறித்து மன ஊக்கம் பிறக்கத்தான் செய்கிறது. ஆயினும் மனம் மகிழும் விதத்தில் ஆக்கப்பணிகள் நடைபெற என்ன செய்யவேண்டும்? சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1. பயிற்று மொழியாகத் தமிழே இருத்தல் வேண்டும்.
2. கலைச்சொல் அகராதிகள் தயாரித்தல், நூல்கள் வெளியிடுதல் ஆகியவற்றுக்கு ஒரு பொது நிறுவனம் தேவை. அது தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மையமாகக் கொண்டு செயல்படலாம். இந்த நிறுவனத்துக்கு அரசு தாராளமாக நிதி உதவி செய்தல் வேண்டும்.
3. இதுவரை நடைபெற்றுள்ள அறிவியல் தமிழ் ஆக்கப்பணிகள் குறித்ததொரு அறிக்கை தேவை. வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள் பற்றிய நூலடைவு தயாராதல் வேண்டும்.
4. தமிழக அறிவியல் அறிஞர்கள் தமது அறிவியல் ஆய்வுக்கட்டுரைகளைத் தமிழிலும் வெளியிடும் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.
5. பொதுமக்கள். குழந்தைகள் பங்கேற்கும் வண்ணம் தமிழகமெங்கும் 'அறிவியல் மையங்கள்' (Science Centres) அமைக்கப்படவேண்டும். தற்போது சென்னையிலும், நெல்லையிலும் செயல்படுகின்றன.

அறிவியலைத் தமிழில் சொல்லவும் எழுதவும் முடியும்; அதற்கான ஆற்றல்மிகு அறிஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் உள்ளனர். கலைச்சொல் தட்டுப்பாடும் இல்லை. இத்துறை மேலும் வளர அரசும் மக்களும் ஆர்வம் காட்டவேண்டும். நமது ஆர்வக்குறைவையும், ஆங்கில மோகத்தையும் மறைத்துக்கொண்டு, தமிழில் முடியாது என்பது சரியன்று. மொழி வளர்ச்சி என்பது அதன் பயன்பாட்டைப் பொறுத்தே அமையும். 'வெள்ளத்தனையது மலர்நீட்டம்' - எனவே, நமது குறையை மொழிமீது சுமத்தாமல் நாம் ஆர்வத்துடன் பணியாற்றினால், அறிவியல் தமிழின் ஆக்கப்பணிகள் விரிவுபெறும்; தமிழும் வளம் பெறும்.

padippakam

# தமிழில் கணினி-இன்றும் நாளையும்.

முனைவர். திருமதி, தி.கமலி
*அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்*

## இந்திய சூழலும் கணினியும்

### நேற்றைய நிலை:-

வளரும் நாடாகிய இந்தியாவில் 'கணினி' இந்திய பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்தபோது அதன் சாத்தியக்கூறுகள் வெகுவாக விமர்சிக்கப்பட்டன.

'இந்தியத் திருநாட்டின்
இல்லந் தோறும்
ஆறாத பசித்தீயை
அகற்றிட
அளிப்போம்
ஆளுக்கொரு கம்ப்யூட்டரை'

என்று எள்ளல் கவிதைகள் எழத்தான் செய்தன.இது மின்னணுக்கருவிகளது யுகம் ஆதலால், ஆளுக்கு ஆள் சொந்தமாகக் கணினியை வாங்கிப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு கணினிகள் (Personal computer) எங்கும் கிடைக்கும் நிலை (ஆறாயிரம் முதல் இருபத்தையாயிரம் விலைகளில்) விரும்பியோ, விரும்பாமலோ 1994-க்குள், இந்த பத்தாண்டிற்குள் உருவாகி விட்டதை எவரும் மறுக்கவே முடியாது.

### இன்றைய நிலை:-

பல்கலைக்கழகங்களில் மட்டுமின்றி அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும், விலைமதிப்பு மிக்க பாடமாகத் திகழ்வது கணினி முதுநிலைக் கல்வியே (Master of Computer Application) ஆகும். நுழைவுத்தேர்வு அது இது என்று இவ்வகுப்பில் சேர்வதற்கு எக்கச்சக்கமான போட்டி வேறு. ஆங்கிலவழிக் கல்வி பயிற்றும் சிறுவர் பள்ளிகள் 'கணினி அறிவியல்' போதிக்கின்றன. உங்கள் குழந்தைக்குக் கணினி பயிற்சியும் எங்கள் பள்ளியில் தரப்படுகிறது. என்பது சில வருடங்களுக்கு முன்வரை, அதிக எண்ணிக்கையில் மாணவர்களைத் தங்கள் பள்ளிகளின்பால் ஈர்க்க பள்ளி நிர்வாகம் கையாளும் விளம்பர உத்திகளுள் ஒன்றாக இருந்தது. இன்றோ அது கட்டாயப் பாடமாகி விட்டது. பள்ளிக்கூட விடுமுறை காலத்தின்போதும் பிள்ளைகளது தலையில் அறிவைத் திணிக்க அவாவும் பெற்றோர்களுக்கும், அவசர அவசரமாகக் கணினியறிவைப் பெறத் துடிக்கும் ஆவல் மிக்கவர்களுக்கும் புகலிடமளிக்கும் விதத்தில், குறுகிய கால பட்டய வகுப்புகளையும், சான்றிதழ் வகுப்புகளையும் நடத்தக்கூடிய கணினி நிலையங்கள் (Computer Centres) தெருவுக்குத் தெரு புற்றீசல் போல நாள்தோறும் முளைத்து வருகின்றன. (இவை தரும் சான்றிதழ்களுக்கிருக்கும் அங்கீகாரம் மதிப்பு என்பதெல்லாம் விவாதத்திற்குரியன என்பது வேறுவிஷயம்) இது தவிர, பணிபுரியும் ஊழியர்களுக்குக்

படிப்பகம்

padippakam

கூடுதல் தகுதியாகக் கணினி பயிற்சியளித்து தத்தம் நிறுவனங்களைக் கணினிமயமாக்கும் முயற்சியும் ஒருபுறம் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. மைய அரசின் மின்னணுத் துறையும் (Department of Electronics-Govt. of India) மாநில அரசுகளின் துறைகளும் இலவசமாகவோ, குறைந்த கட்டணத்திலோ, பின்தங்கிய வறிய மாணவர்களுக்கு பயிற்சி நல்கி வருகின்றன. கிராமப் பகுதியினருக்கு விழிப்புணர்வூட்டும் பணியைப் பல்கலைக்கழகம் சோதனை முறையில் ஏற்று செய்தும் வருகிறது. இந்தியாவெங்கும் மாதமொன்றுக்கு 26,000 கணினி சார் பணிவாய்ப்புகள் உருவாகின்றன என்றொரு கணக்கெடுப்பு குறிப்பிடுகிறது.

## உலகச் சந்தையில் இந்திய நிலை:-

கணினி வரலாற்றில், கணினி தோன்றிய ஆண்டிலிருந்து குறிக்கத்தகு திருப்புமுனை வளர்ச்சியை, நான்காவது தலைமுறை கணினிகள், ஐந்தாவது தலைமுறை கணினிகள் (Fourth generation computers-Fifth Generation Computers) என்று எல்லாம் குறிப்பிடுவது வழக்கம். மிகுந்த போட்டிகளுக்குப் பின் தலைசிறந்த மாணவர் இந்தியாவின் முன்னணி உயர்கல்விக் கூடத்தில் சேர்ந்து பயிலுவது இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய கணினி தலைமுறை குறித்த செய்தியைத்தான். கணினி தொழில் நுட்பத்தில் இந்தியா பின்தங்கி இருக்கிறது. அபரிமித வளர்ச்சியை அமெரிக்காவில்தான் காணமுடிகிறது என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது.

ஹாங்காங்கில் பலூன்களைப் போல் கணினிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மிகக் கஷ்டப்பட்டு பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப்பின் அமெரிக்கா போன்ற நாடுகளில் தயாரிக்கப்பட்டு, சந்தையில் ஆயிரக்கணக்கான ரூபாய் விலையில் விற்கக்கூடிய மதிப்பு மிக்க கணினி மென்பொருட்கள் எல்லாம் அனுமதி இன்றி, காப்பியடிக்கப்பட்டு, அடுத்த வாரமே நூறு ரூபாய் விலையில் ஹாங்காங் சந்தையில் விற்கப்படுகின்றது. இந்தியாவில் இந்த அளவிற்கு தொடங்கப்படவில்லை. இந்தியாவில் இந்த பரபரப்பு தொடங்கப்படும்போது கணினி உலகம் அடுத்த கட்டத்திற்குச் சென்று விடுமென்று.[1] 'கம்ப்யூட்டர்களைக் கூறுகட்டி விற்கும் ஹாங்காங்' பயணக் கட்டுரைத் தொடரில் கோமல் ஆதங்கப்படுவதில் மெய்யிருக்கத்தான் செய்கிறது.

## இன்றைய ஆய்வுகளில் கணினி:

கணினியைப் பயன்படுத்தி சொல்லடைவு உருவாக்குதல் (Concordarce) இலக்கிய தரவு தள உருவாக்கம் (Creation of Databases on literary works in Tamil), நடை ஆய்வு (Stylistic Analysis), சொல்பொருள் பகுப்பாய்வு (Stylistic Analysis), இலக்கிய அகராதி உருவாக்கம் (Literary Dictionary making), தொடரிலக்கண பகுப்பு (Syntactical studies) மொழிபெயர்ப்பு (Translation)[2] ஆகியவற்றோடு, பயிற்றுவிக்கும் வகுப்பறைக் கருவியாகவும் (Tool of Education), பிழை நீக்கியாகவும் (Tamil spell casher) கணினி தமிழில் பயன்படுத்தப்படுகிறது.

## இன்றைய உலகில் கணினி பயன்பாடு:

சிறுவர்களுக்கான கணினி விளையாட்டுகள் மொழி அறிவை வளர்க்கவும் தூண்டுகின்றன. அறிவியல்ஆய்வு, காரியாலயங்கள், தொழிற்சாலைகள், வடிவமைத்தல்,

படிப்பகம்

வரைதல் திறனால் வணிக மையங்களால் பயன்படுத்தப்படுவதுடன் பங்குச் சந்தை, போக்குவரத்துத் துறை, போர் முனை, வங்கித் துறை, தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத் துறை என்று தென்பட்ட இடங்களிலெல்லாம் அன்றாட வாழ்வில் கணினிகள் கையாளப்படுகின்றன.

'தரவு சேகரிப்பு களஞ்சியம்' என்ற முறையில் பெரிய பெரிய நூலகங்கள் கணினி மயமாக்கப்பட்டதோடு, வழக்கறிஞர், மருத்துவர் போன்ற தனி நபர்களும் கணினியைத் தொழிலின்பொருட்டு கையாள்கின்றனர். இசைத்துறையில் கணினி பெரிய மாற்றத்தையே கொண்டு வந்துள்ளது. பத்திரிகை அலுவலகங்களும், எழுத்தாளர்களும் கூட விதிவிலக்கில்லை.

## கணினிக்குத் தமிழைப் பரிச்சயப்படுத்தல்:

உலகெங்கும் நூற்றுக்கணக்கான கணினிமொழிகள் கையாளப்பட்டு வருகின்றன. இருப்பினும், கணினிமொழி' (Computer language) எனும் மொழி, கணினிக்கும், பயன்பாட்டாளருக்கும் இடையே குறுக்குச்சுவராக இருக்கும் நிலையை அகற்றுதற்குரிய ஆய்வுகள் கணினி பொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. விளைவு, கணினியைப் பயன்படுத்த பயன்பாட்டாளருக்கு கணினிமொழி அறிவு தேவை என்ற நிலை மாறிவிட்டது. கணினிக்கு பயன்பாட்டாளர் உட்பட மக்கள் பேசும் இயற்கை மொழியறிவு இன்றியமையாதது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆம்!

* இயற்கை மொழியை புரிந்துகொள்ளுதல் (Natural language understanding)
* இயற்கை மொழியில் விடையுருவாக்குதல் (Natural language Generation)

என்ற வசதிகள் கணினியில் உருவாக்கப்பட்டுள்ளன. இம்முயற்சி, இயற்கை மொழி செயல்முறை[3] (Natural language processing) கிளைத்து செழித்து வளர்ந்து வருகிறது.

இயற்கை மொழி செயல்முறை திறம்படக் கையாளப்படுவதற்கேற்ற வகையில் கணினி வடிவமைக்கப்பட வேண்டும். ஆம்! கணினி ஒரு மின்னனு கருவியாக மட்டுமிறாது, செயற்கை அறிவு (Artificial Inteligence) பெற்றதாக இருக்க வேண்டும். செயற்கை அறிவு இப்போதெல்லாம் பழைய சொல்லாகி விட்ட அளவிற்கு கணினி ஆய்வுகள் வெகு வேகமாக வெற்றிகளைக் குவித்தபடி வளர்ந்து வருகின்றன.

கணினியின் இடுவரல் (Input) உலகத்தின் எந்த மொழியின் வரிவடிவத்தைப் பெற்றதாக இருந்தாலும் அதை ஏற்று கணினியின் உட்புறம் உள்ள வரைபட அறிவுசார் வரிவடிவ அமைப்பு (GIST-Graphics and Intelligent based script Technology) அவ்விடுவரல் தரவைப் பரிசீலித்து, தமிழில் மொழி பெயர்க்கத் தோதுவான அமைப்பை[4] (Tamil language Front end to INGRES) உருவாக்குவதற்கான ஆய்வுமுயற்சிகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

* குறியீடுகளை அங்கீகரித்தல் (Character recognition)
* மொழியமைப்பை அங்கீகரித்தல் (Language pattern recognition)

என்ற நிலைக்கு கணினியை வடிவமைக்க வேண்டும். மொழிகளுக்கிடையிலான தடைச்சுவர்கள் அகற்றப்படும் நிலை உருவாவது இனிய மாற்றமேயாகும்.

கணினியின் நினைவகத்தில், தகவல் தளம் (Information base) மொழியகராதி (Lexicon) இரண்டையும் உருவாக்குதல் இன்றியமையாதது. சொல் உருவாக்கி (Word Generator) சொல் வடிவ அமைப்பிலாய்வி (Morphological Analyser) இவை கணினி வழி மொழிபெயர்ப்பில் இன்றியமையாதவை. கணினியைப் பயன்படுத்தி, 'உருசியன் தமிழ்' மொழிபெயர்ப்பு ஆய்வுத்திட்டத்தை மேற்கொண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.

## தமிழ் மொழியின் நவீன கூறுகள்-கணினி நோக்கில்:

இருபத்தோராவது நூற்றாண்டின் விளிம்பில் இருக்கும் இந்த காலகட்டத்தில் கணினிக்கு பயன்படும் விதத்தில் தமிழ்மொழி நவீனக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பது வியக்கத்தக்கது.

தமிழ் எழுத்துக்களை உருவாக்கப் பயன்படும் அடிப்படை மூலக்கூறுகளின் கணம்=
$V_n$= {l, ◜, ⌒, o}

இவை முறையே,

நிலைக்குத்தான அடிப்படை கோடு (Vertical Storke) - l

வட்டத்தின் ஒரு பகுதி (Portion of circle) - ◜

நீள்வட்டத்தின் ஒரு பகுதி (A portion of an Ellipse) - ⌒

சிறிய வட்டப் புள்ளி (A dot) - o

என்பன[5]. தமிழ் வரிவடிவ அமைப்பு கணினிக்கு மிகவும் ஏற்ற கணிதமுறை வழியமைப்புகளை உருவாக்கும் வகையில் அமைந்திருப்பது சீரிளமைத் திறனுக்கு கூடுதல் சான்றாகத் திகழ்கிறதென்று வடிவாக்க வல்லுனர்தம் மதிப்பீடு குறிக்கத்தக்கது.

தமிழ் மொழியின் எழுத்துக்கள் தனித்தனியாக எழுதப்படும் 'நான்கர்சிங்' எழுத்துக்களாக இருப்பது ஒரு வரப்பிரசாதமாகக் கொள்ளப்படுகிறது.

தமிழின் அடிப்படை நெடுங்கணக்கு, 'அகர முதல் னகர ஈறுவாய் முப்பஃது' என்று ஆங்கிலத்திற்கு அருகிலேயே உள்ளது. ஆங்கில மொழிக்கு இருப்பதுபோல் 'அப்பர் கேசு' (Upper case) வடிவ வகைபாடு தமிழுக்கு இல்லை[6] என்பார் எழுத்தாளர் சுஜாதா.

## எதிர்கால எழுத்துணர்வு

எழுத்தாணி, பனை ஓலை கண்டு, எழுதுகோல், காகிதம், அச்சு சாதனங்களில் நடமிட்ட மொழியரசி விசைப் பலகை வழி கணினியில் பதிவாகி, பிளாப்பி வடிவில் உலகெங்கும் பயணிக்கத் தொடங்கிவிட்டாள். ஆம்! அனைவரும் கையாளும் விதத்தில் 'நோட்டு வடிவ கணினிகள்' புழங்கத் தொடங்கிவிட்டன. கை ஒடிய எழுத வேண்டாம்.

மனவுணர்வுகளை, சிந்தனைகளை, விசைப்பலகை மூலம் 'நோட்டு வடிவ கணினியில்' பதிவு செய்யலாம். திரையில் (Screen) ஓயாமல் படிப்பது கண்ணுக்கு ஊறு விளைவிக்கக் கூடுமோ? அல்லது அதுவே நடைமுறை நியதியாகி எதிர்காலத்தினருக்கு பழகிப்போகுமோ? தெரியவில்லை. ஆய்வுக் கூடங்களில் ஆசிரியர் உடனிருந்து பயிற்றுவிக்கத் தேவையில்லை. செய்திகளைப் பதிவு (Feed) செய்தால், மாணவர் மீண்டும், மீண்டும் போட்டு, போட்டு தெளிவு பெறலாம் என்று சார்ந்திருக்கத் தேவையின்றி தனித்துவத்தை ஒருமாதிரி வளர்த்து வருகிறது.

எவரும் மிக எளிதாக இயக்கக்கூடிய கருவியாகக் கணினி வடிவமைக்கப்படுவதால், தட்டச்சுப் பலகையில் தட்டச்சு செய்யத் தெரிந்தாலே கணினியோடு தொடர்பு கொள்ள முடியும். பத்தாம் வகுப்பு மாணவர் கணினி வழி அச்சிடலில் (DTP) கைதேற முடியும் என்பது மொழி பயன்பாட்டை விரிவாக்குவன.

மனிதரது வாய்மொழி ஆணைகளை (Voice recognition) ஏற்றுச் செயற்படும் கணினிகளும் வடிவமைக்கப்படுவது மொழி பயன்படுதளத்தை விசாலப்படுத்துவதே!

## தமிழுக்கு கணினியைப் பரிச்சயப்படுத்தல்:

### இதுவரை செய்யப்பட்டிருப்பன:

கணினி விசைப்பலகையில் இருக்கும் ஆங்கில தட்டெழுத்துக்களையே பயன்படுத்தி, 'எழுத்து பெயர்ப்பு முறை'யில் (Transiliteration method) எழுதத் தொடங்கிய நிலை இருந்தது. பின் 'பாரதி' போன்ற மென்பொருள் (Software) தயாரித்து தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

* 1988-இல் தமிழக அரசு தமிழ் தட்டச்சுப் பொறி விசைப் பலகையைக் கணினிக்கு அங்கீகரித்தது.

* மைய அரசின் மின்னணுத்துறை (Dept. of Electronics - Govt. of India) 1988-இல் இஸ்கி (ISCII-Indian Standard Code for Information Interchange) விசைப்பலகையை பரிந்துரைத்தது.

(இது தேவநாகரி எழுத்துக்களின் புழக்கத்தை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் விவரிக்கப்பட்ட விசைப்பலகை. இந்திய மொழிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் நிகழ்வதை உறுதி செய்து, சிக்கலான இந்திய மொழிகளைக் கணினிமயமாக்க ஏதுவாக வடிவமைக்கப்பட்ட விசைப்பலகை (Keyboard) ஆகும்.)

அரசின் இம்முயற்சிகள் தவிர, தமிழ் எழுத்துக்களின் புழக்கத்தை ஆய்வு செய்து சிங்கப்பூரில் பணியாற்றும் தமிழர் நா. கோவிந்தசாமி, 'கணியன் விசைப்பலகை'' (1988) என்ற ஒன்றையும் நெல்லை. சு. முத்து 'முத்துக் கணினி'-34 (1994) என்ற ஒன்றையும் வடிவமைத்துள்ளனர். இங்ஙனம் முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்படுகின்றன.

## இனி செய்ய வேண்டுவன:

கணினி கலைச்சொல்லாக்கத்தையும், கணினி விசைப்பலகையையும் தரப்படுத்த வேண்டும். கணினிக்கேற்பத் தமிழை மாற்றாமல் (எழுத்து வரிவடிவங்களைச் சிதைத்து கூட்டி, குறைத்து, மாற்றி கொலை பண்ணாமல்) தமிழுக்கேற்பக் கணினியை மாற்ற வேண்டும். கணினிக்கேற்ற எளிய தற்காலத் தமிழ் இலக்கணம், தமிழ் உச்சரிப்பு அகராதி (Ortheoepical Dictionary) சமகாலக் கணினி நிகண்டு, அகராதி (Concordance), தமிழ் தகவல் தளம் (Tamil Data base), இலக்கண ஐயநீக்க விதிகளது தொகுப்பு ஆகிய வற்றை உருவாக்க வேண்டும் 8 என்ற நோக்கங்களை எழுத்தாளர் சுஜாதா எடுத்துரைக்க, தமிழும் கணிப்பொறியும் என்ற பொருளில் அண்ணா பல்கலைக்கழகம் வரலாற்று சிறப்பு மிக்க கருத்தரங்கு நடத்தியது. தொடர் செயல்பாடுகள் (Follow-up programmes) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கூட்டு முயற்சியாக ஒருங்கிணைந்து திட்டமிடப்பட்டுள்ளன.

## தமிழருக்குக் கணினியைப் பரிச்சயப்படுத்தல்:

இதற்கிடையில் கணினி அறிவியலைப் படித்தவர்களது தனிச்சொத்தாக ஆக்கிவிடாமல், அனைவருக்கும் பரிச்சயப்படுத்தும் நோக்குடனும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'கணிப்பொறியின் கதை', 'கம்ப்யூட்டர் ஒரு அறிமுகம்' என்றெல்லாம் எளிய தமிழில் நூல்கள் எழுதி வெளியிடப்பட்டு வருகின்றன.

கனடாவில், கன்கார்டியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கணினித்துறை ஆசிரியர் பாமரருக்கும், படித்தவருக்கும் கணிப்பொறி[9] என்ற தொடரை எளிய தமிழில் 'அதிக விற்பனையாகும் தமிழ் வார இதழான' குமுதத்தில் எழுதி வருவது எளிமைப்படுத்தும் முயற்சியாகவும், வெகு ஜன இதழ் வழி பரந்த வாசகர் தளத்தைச் சென்றடையச் செய்யும் பணியாகவும் உள்ளது. இத்தொடர் ஒவ்வொருவரையும் கணினி வல்லுனராக ஆக்காது என்றாலும், கணினியைத் தொட்டால் ஷாக் அடிக்குமா? என்பது போன்ற அடிப்படையற்ற அறியாமை சார் ஐயங்களை நீக்கித் தெளிவளிக்கும்.

## பிராந்தியப்படுத்தலில் வினாக்கள்

கணினிமொழியைத் தமிழ்ப்படுத்தி, 'கணினி ஒழுங்கும் பேஸிக் மொழியும்' என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நூலை வெளியிட்டது கணினிமொழியைத் தமிழருக்கு அறிவுறுத்தும் முயற்சி என்ற நிலையில் ஆங்கிலமறியாதவர்க்கு பலனளிக்கக்கூடும்.

* உலகெங்கும் வழக்கிலுள்ள அத்தனை கணினிமொழிகளையும் பெயர்த்து எழுதி வெளியிடுவது சாத்தியமா?
* பிராந்திய மொழிகளில் கணினி மொழியாக்க முறை தீவிரப்படுத்தப்பட்டால், ஒரு கணினி மொழிக்கு இருபத்தோரு இந்திய மொழிகளில் பெயர்ப்பு வேண்டியிருக்குமே?
* கணினி அறிவியல் பயின்ற எவரும் எங்கும் பணியாற்றலாம் என்ற நிலை மாறி, அந்தந்த மொழி பேசும் மாநிலத்தில், அந்தந்த மொழிவழி கணினியைக் கையாள

padippakam

அறிந்திருப்போர்தான் பணியாற்ற முடியும் என்ற நிலை ஏற்படக் கூடுமா? இது ஆரோக்கிய வளர்ச்சியா?

* மலையாளக் கணினி அறிவியலாளர் ஹிந்திக்கணினியைக் கையாள முடியாது அல்லல்பட நேருமா?

என்ற வினாக்கள் எழுப்பப்படும் தருணம் கனிந்து வருகிறது.

இடுவரல் (Input) எம்மொழியினதாக இருப்பினும், விரும்பும் மொழிக்கேற்ப (Target Language) கணினியின் உட்பகுதியில் மொழி மாற்றுக் கட்டுப்பாட்டு (Language Compiler - Controller) அமைப்பு மூலம் பெயர்த்து வெளிப்படுத்தும் (Output) வல்லமை மிக்கதாக வடிவமைக்கத் தக்க உத்திகள் ஆராயப்பட்டு வருகின்றன.

பிராந்திய மொழிகளில் பெயர்த்தெழுதுவது அனைவருக்கும் அறிவூட்டும்; சிந்திக்கத் தூண்டும்; புதுப்புது கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும் என்ற நிலையில் இம்முயற்சிகள் வரவேற்கப்படத்தான் வேண்டும்.

## குறைபாடு முறையீடு:

'கம்ப்யூட்டர்' வந்தது. கம்ப்யூட்டரை வைத்துக்கொண்டு உலகத்தில் எவ்வளவோ செய்கிறார்கள். நம் ஊரில் என்ன செய்கிறார்கள்? கம்ப்யூட்டரில் ஜாதகம்தானே கணிக்கிறார்கள்! உலகத்தில் எந்த விஷயம் வந்தாலும், நம்மிடம் வரும்போது அது இப்படித்தான் தாழ்ந்து போகிறது[10] என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. வானமழை பேதமின்றி, நெல்லுக்கும், புல்லுக்கும் ஒருசேரப் பொழிவதுபோல், அறிவுத்திறன் பெருகும்போது அனைத்துத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்துவது இயற்கையே. தகுதி உடையது நிலைத்து வாழும்; செழித்து வளரும். காலப் போக்கில்தான் பரிணாம வளர்ச்சி மாற்றங்கள் ஏற்படக் கூடும். நாளை தமிழ் மட்டுமேயறிந்த எளிய பாமரரும் கணினிச் சாதனையாளராகும் நிலை நேரலாம். வாழ்வின் அங்கமாகக் கணினி நிலைபெறத் தொடங்கிவிட்டது.

## குறிப்புகள்


1. கோமல் சுவாமிநாதன், 'கம்ப்யூட்டர்களைக் கூறுகட்டி விற்கும் ஹாங்காங்', சுபமங்களா-மாத இதழ், அக். 1994, பக்.3.
2. ஏ. பாஸ்கரன் வழக்கு மொழியில் கணிப்பொறிப் பயிற்சி, 1994. பக். V.
3. Ibid.
4. S. Chitra, T.Devi, K.Sarukesi, Tamil Language Front end to INGRES. 'தமிழும் கணிப்பொறியும்' கருத்தரங்க மலர், 1994. பக். 139.
5. சு. வைத்தியநாதன், தமிழ் எழுத்துக்களை அடையாளம் கண்டுகொள்வதில் வடிவமைப்புகளின் சிறப்பியல்புகள், தமிழும் கணிப்பொறியும் கருத்தரங்க மலர், 1994, பக். 93.


படிப்பகம்

6. எஸ். ரங்கராஜன் சுஜாதா 'தமிழும் கணிப்பொறியும் தொடக்க உரை' 5.8.1994.

7. நா. கோவிந்தசாமி, 'கணியன் விசைப்பலகை' தமிழும் கணிப்பொறியும் கருத்தரங்க மலர், 1994, ப.35.,

8. எஸ். ரங்கராஜன் ("சுஜாதா") தமிழும் கணிப்பொறியும் தொடக்க உரை, கருத்தரங்க மலர், 1994.

9. ராதா கிருஷ்ணன், 'பாமரருக்கும் படித்தவருக்கும் கணிப்பொறி' குமுதம் - வார இதழ், 6-10-1994 ப. 80-85.

10. திலகவதி 'திலகவதி நேர் காணல்' சுபமங்களா - மாத இதழ், நவம்பர் 1994. ப. 10.,

# தமிழ் எழுத்தில் திருத்தம் வேண்டும்

**குன்றம் மு.இராமரத்நம் அவர்களின் சிறைமீண்ட கவிதைகளிலிருந்து**

தமிழ் எழுத்தில் திருத்தம்
வேண்டும்
மறுக்க வில்லை
தற்கால நிலைக்கேற்ப
திருத்தம் செய்வோம்
அதற்காக
முற்கால நிலை காட்டி
மொழியை ஏன் நீ
கற்காலம் நோக்கி அதை
கடத்துகிறாய்!
ஐ யினை பிரித்தெழுது
அட்டியில்லை
அச்சுக்கும் தட்டுக்கும்
பொருத்தமாகும்
உயிர் மெய்யை
பிடித்தேன் நீ
குழப்புகிறாய்
அதன் உயிர்போக்க
நீ ஏனோ முந்துகிறாய்!

மாத்திரைகள் பேசுகிறாய்
கணக்குப் போட்டு
'க' என்ற உயிர் மெய்யில்
'ஆ' வைச் சேர்த்து
கணக்கின்றி போட்டாலோ
என்னவாகும்?
'க்அஆ' ஆகும்!
'கா'க்குள்ள மாத்திரையா
இதுக்கு வரும்?
கணக்கறியா போக்கிது
புரிந்து கொள்ளும்!
ஆட்டடித்தாய்
மாட்டடித்தாய்
இப்போது
ஆளையும் நீ அடிக்கின்றாய்
நியாயமில்லை!

*தமிழ் எழுத்து சீர்திருத்தச் செம்மல்(?)*
*பேராசிரியர் கொண்டல் மகாதேவருக்கு பணிவுடன்.*

# நா. கோவிந்தசாமியின் கணியன் விசைப்பலகை

## விசைப்பலகை அமைப்பு

இடம் — வலம்

| . | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 | - | _ | \ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

| TAB | Q | W | E | R | T | Y | U | I | O | P | [ | ] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஸ | ஸ்ரீ | ஷ | ஜ | ஹ | | |
| | | ஊ | ஈ | எ | ஏ | ற | வ | ல | ன | ய | ண | ழ |

| CTRL | A | S | D | F | G | H | J | K | L | : | ' | ENTER |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ங | ஞ | | | | |
| | ஐ | ஆ | இ | உ | . | த | க | ம | ப | ட | ந | |

| SHIFT | Z | X | C | V | B | N | M | , | . | / | SHIFT |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஃ | ஔ | ஒ | ஓ | அ | ர | ள | | | ச | |

| ALT | | SPACE BAR | |
|---|---|---|---|

| சுண்டு விரல் | மோதிர விரல் | நடு விரல் | ஆள் காட்டி விரல் | ஆள் காட்டி விரல் | நடு விரல் | மோதிர விரல் | சுண்டு விரல் |
|---|---|---|---|---|---|---|---|

# நெல்லை சு. முத்துவின்

## முத்து கணினி-34 எழுத்தெண்பலகை

**மேல்தளம்**

| “ | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 | - | + | / |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ” | ∞ | Σ | Δ | π | Λ | ∩ | \| | % | ( | ) | ÷ | = | \ |

**கீழ்த்தளம்**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ர | ந | எ | ற | த | ய | உ | இ | ஒ | ப | ी | ° | மேல்தளம் |
| Q | W | E | R | T | Y | U | I | O | P | ! | ? | கீழ்த்தளம் |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஷ | ட | ஞ | ங | ஹ | ஜ | க | ல | ெ | ே | மேல்தளம் |
| A | S | D | F | G | H | J | K | L | : | ; | கீழ்த்தளம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ழ | ா | ச | வ | ஃ | ண | ம | ஸ | ள | ன | மேல்தளம் |
| Z | X | C | V | B | N | M | , | . | ° | கீழ்த்தளம் |

padippakam

# தமிழில் அகராதிகள் - அன்றும், இன்றும்.

(முனைவர் மு.ச. சிவம்,
(ஆசிரியர் 'வளரும் தமிழ் உலகம்' ஈரோடு,)

## தமிழ் எழுத்தில் திருத்தம்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அகராதித் துறையில் முன்னணியில் இருந்த தமிழகம் இன்று பின்தங்கியுள்ளது. மீண்டும் அகராதி உலகில் தமிழகம் வீறு நடை போடும் காலம் விரைவில் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

### அகராதிக்கலையின் கரு:

தமிழ் அகராதிக்கலையின் கரு தொல்காப்பியம் உயிரியலில் உள்ளது. கிரேக்கர்களும், உரோமானியர்களும் அகராதிக்கலையை வளர்க்குமுன்பே தமிழகம் அகராதிக் கலையைத் தோற்றுவித்தது பெருமைக்குரியது. உரியியலே பிற்கால நிகண்டுகளுக்கு முன்னோடியாகும்.

### நிகண்டுகள்:

தமிழில் அகராதிகளுக்கு முன்னோடியானவை நிகண்டுகளே. இவை பெரும்பாலும் செய்யுள் வடிவில் தோன்றின. ஓலைச் சுவடியில் எழுதப்பட்ட அக்காலங்களில் நிகண்டுகள் மனப்பாடம் செய்யப்பட்டன. அதற்குச் செய்யுள் வடிவமே ஏற்றதாயிருந்தது.

தமிழில் உள்ள நிகண்டுகளுள் பழமையானது சேந்தன் திவாகரம் ஆகும். இஃது 8 அல்லது 9ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தெய்வப்பெயர் முதலாகப் பன்னிரு தொகுதிகளை உடையது. ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி. ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. இது நூற்பா நடையில் அமைந்தது. இந்நிகண்டின் வளர்ச்சியைப் பார்க்கும்போது இதற்கு முன்பே பல நிகண்டுகள் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அவற்றின் பெயர்கள் கூட அறியப்படவில்லை. திவாகர நிகண்டில் ஏறத்தாழ 9500 சொற்கள் உள்ளன. அடுத்து 8-10-ஆம் நூற்றாண்டுக்குள் தோன்றிய பிங்கலம் அல்லது பிங்கல நிகண்டு திவாகரம் போல நூற்பாவில் அமைந்த. முந்து நூலினும் விரிவானது. ஏறத்தாழ 15,800 சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளது. பத்துத் தொகுதிகளை உடையது. இந்நிகண்டில் 'பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி' இடம்பெறவில்லை.

அடுத்துத் தோன்றிய சூடாமணி நிகண்டுதான் நிகண்டுகளில் சூடாமணியாய், மணிமுடியாய்ப் போற்றப்பட்டு வந்தது. அமைப்பில் திவாகரத்தை ஒத்தது. பன்னிரு தொகுதிகளை உடையது. விருத்தப்பாவில் இயன்றது. 11,000 சொற்கள் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன.


படிப்பகம்

padippakam

கி.பி. 1594இல் தோன்றிய அகராதி நிகண்டு அகராதி என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியுள்ளது. இதன் ஆசிரியர் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் ஆவார். பத்துத் தொகுதிகள் அடங்கிய இந்த நிகண்டில்தான் முதன் முதலில் அகரநிரல் கையாளப்பட்டது. ஆனால் முதல் எழுத்து மட்டும்தான் அகரவரிசையில் அமைந்தது. நிகண்டுகளின் வரலாற்றில் 'அகராதி நிகண்டு' ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

## பிற்கால நிகண்டுகள்:

17ஆம் நூற்றாண்டில் காங்கேயர் என்பவரால் இயற்றப்பட்ட உரிச்சொல் நிகண்டு பன்னிரு தொகுதிகளில் 3,200 சொற்களுக்கு விளக்கம் தருகிறது. மனப்பாடம் செய்வதற்கு எளிதான வெண்பா யாப்பில் இயற்றப்பட்டது.

அதே நூற்றாண்டில் தோன்றிய கயாதர நிகண்டு மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தது. பதினொரு தொகுதிகளே உள்ளன. 11,350 சொற்கள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலியைச் சார்ந்த ஈசுரபாரதியார் என்பவர் பல்பொருள் சூடாமணி நிகண்டு, வடமலை நிகண்டு என்ற இரு நிகண்டுகளை இயற்றினார். இரண்டும் ஒன்று போலவே உள்ளன. வடமலை நிகண்டு சற்று விரிவாக உள்ளது. வடமொழி நிகண்டாகிய அமரகோசத்தைப் பின்பற்றியது.

17ஆம் நூற்றாண்டில் தோன்றிய கைலாச நிகண்டு சூடாமணி பதினொரு தொகுதிகளை உடையது. 15,000 சொற்களுக்கு விளக்கம் தருவது. அதே காலத்தில் திருவேங்கட பாரதி இயற்றிய பாரதி தீபம் என்னும் நிகண்டும் கலித்துறையால் ஆனது. 13,000 சொற்களுக்கு விளக்கம் தருகிறது. ஆண்டிப்புலவர் இயற்றிய ஆசிரிய நிகண்டு ஆசிரிய விருத்தத்தில் 12,000 சொற்களுக்கு விளக்கம் தருகிறது.

18ஆம் நூற்றாண்டில் அருமருந்தைய தேசிகர் 'அரும்பொருள் விளக்க நிகண்டை' இயற்றினார். சுப்பிரமணிய தேசிகர் தொகை நிகண்டைப் படைத்தார். இது திவாகரத்தின் பன்னிரண்டாவது தொகுதியாகும். இந்நூல் இன்று கிடைக்கவில்லை. சுப்பிரமணிய பாரதி என்பவர் பொருள் தொகை நிகண்டை இயற்றினார். சாமிநாதக் கவிராயர் பொதிகை நிகண்டை விருத்தப்பாவில் இயற்றினார். இதில் முதலீடு எழுத்துக்கள் அகர வரிசையில் உள்ளன. அகராதி நிகண்டுக்குப் பிறகு அகராதியியல் வளர்ச்சி பெற்றதை இஃது குறிக்கிறது.

மேலும் உசித சூடாமணி நிகண்டு, நாமதீப நிகண்டு, வேதகிரியார் சூடாமணி நிகண்டு, கந்த சுவாமியம், நாநார்த்த தீபிகை, சிந்தாமணி நிகண்டு, அபிதானத் தனிச்செய்யுள் நிகண்டு, விரிவு நிகண்டு முதலிய பல நிகண்டுகள் 19-ஆம் நூற்றாண்டு வரை தோன்றி வந்தன.

## அகராதிகள்:

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு மனப்பாடம் செய்வதினும் வேண்டிய போது நூல்களைப் புரட்டிப் பார்த்துச் செய்திகளைத் தெரிந்து கொள்வதே போற்றத்தக்கது என்ற

படிப்பகம்

கருத்து வலுப்பெற்றது. அதனால் தமிழில் அகராதிகள் 17ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றி வந்துள்ளன.

மோனைக்ககராதி எதுகை என்ற அகராதி நிகண்டு நடையில் உள்ளது. முதலிரு எழுத்துக்கள் அகரவரிசையில் உள்ளன. இதில் 7500 சொற்கள் பொருள் விளக்கம் பெற்றுள்ளன.

1679-இல் அம்பலக்காடு என்ற இடத்தில் தமிழ்-போர்ச்சுக்கீசிய அகராதி அச்சானது. தமிழில் முதலில் அச்சிடப்பெற்ற அகராதி இதுவே, ஏறத்தாழப் பதினேழாயிரம் தமிழ்ச் சொற்களுக்குப் போர்ச்சுக்கீசியம் அல்லது இலத்தீனில் பொருள்கள் தரப்பட்டுள்ளன. மேல்நாட்டுப் பாதிரியார் சீகன் பால்கு என்பவர் தமிழ்-இலத்தீன் அகராதியை வெளியிட்டார்.

## சதுரகராதி:

வீரமாமுனிவர் 1732-இல் இயற்றிய சதுரகராதி தமிழ் அகராதிகளின் கலங்கரை விளக்கமாக உள்ளது. இது சொல்லின் எல்லா எழுத்துக்களையும் அகரவரிசையில் அமைத்துள்ளது. செய்யுள் நடையைத் தவிர்த்து அகராதி வடிவத்தை இது பெற்றுள்ளது. இதனால் வீரமாமுனிவர் 'தமிழ் அகராதிகளின் தந்தை' என்று போற்றப் பெறுகிறார். இவரே தமிழ்-இலத்தீன் அகராதி, இலத்தீன் தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, போர்ச்சுக்கீசியம்-இலத்தீன்-தமிழ் அகராதி முதலியவற்றை இயற்றினார்.

பிறநாட்டவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள உதவியாகப் பல அகராதிகள் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பெப்ரீஷீயஸ் தமிழ்-ஆங்கில அகராதி, ஆங்கிலம்-மலபார் (தமிழ்) அகராதி, ராட்லர் அகராதி, வின்சுலோ ஆங்கிலம் - தமிழ் அகராதி, ஸ்பால்டிங் ஆங்கிலம் - தமிழ் அகராதி, பெர்சிவல் ஆங்கிலம் - தமிழ் அகராதி, இலத்தீன் பிரெஞ்சு-தமிழ் அகராதி, தரங்கம்பாடி அகராதி, சென்னைப் பல்கலைக் கழகத்து லெக்சிகன், ஆங்கிலம்-தமிழ் அகராதி, தமிழ் - ருஷ்ய அகராதி, ருஷ்ய - தமிழ் அகராதி முதலியன.

## தமிழ் அகராதிகள்:

இருமொழியகராதிகளைப் போலவே தமிழுக்குத் தமிழில் பொருள் கூறும் பல அகராதிகள் சதுரகராதியைப் பின்பற்றி எழுந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மானிப்பாய் (யாழ்ப்பாண) அகராதி, கதிரைவேற்பிள்ளை அகராதி, தமிழ்ச் சொல்லகராதி, தமிழ்ப் பேரகராதி, இராமநாதன் தமிழ் அகராதி, காரனேஷன் தமிழ் அகராதி, ஜுபிலி தமிழ்ப் பேரகராதி, ஆனந்த விகடன் அகராதி, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பெருஞ்சொல்லகராதி (3 தொகுதிகள் மட்டும்) முதலியன.

## சிறப்பகராதிகள்:

ஒவ்வொரு அறிவுத்துறைக்கும் சிறப்பகராதிகள் பிறமொழிகளில் தோன்றி வருகின்றன. தமிழில் இதுவரை தோன்றியுள்ள சிறப்பகராதிகளுள் குறிப்பிடத்தக்கவை,

பெர்சிவல் பழமொழி அகராதி (1842), லாசரஸ் பழமொழி அகராதி, ஹெர்மன் ஜென்சன் பழமொழி அகராதி, சிறப்புப் பெயரகராதி (ஈக்காடு இரத்தினவேலு முதலியார் இயற்றியது), ஞானப்பிரகாச அடிகளாரின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, பரோ, எமினோ ஆகியோரின் திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி (ஆங்கிலத்தில்), தேவ நேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி (ஒரு மடலம் மட்டும்) முதலியன.

## மு.ச. சிவம் இயற்றிய சிறப்பகராதிகள்:

பன்மொழிப்புலவர் மு.ச. சிவம் எண்ணிலாத சிறப்பகராதிகளைத் தொகுத்துள்ளார். உலக அகராதி அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

அடுக்குமொழி அகராதி, எதிர்ப்பத அகராதி, ஒலிக்குறிப்பகராதி, ஐம்பொறி அகராதி, பெண்ணின் பெயர்கள் (தமிழில் பெண்ணைக் குறிக்கும் ஆயிரம் பெயர்கள்) முதலியன வெளி வந்துள்ளன. 'மனம்' என்ற சொல்லுடன் இணைந்து வரும் பத்தாயிரம் சொற்களைக் கொண்ட 'மன அகராதி'யும் ஐம்பொறிகளின் சொற்களைக் கொண்ட பத்தாயிரம் தொடர்கள் கொண்ட 'ஐம்பொறி அகராதி'யும் தமிழ்ச் சொல்வளத்தை உலகுக்குக் கட்டியங்கூறவல்லவை. இன்னும் வெளிவராத பல சிறப்பகராதிகள் உள்ளன. செந்தமிழ்ச் செல்வம் (25 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஒரு பொருட்பன்மொழிகள்), சொற்றொடர் அகராதி, காரணப்பெயர் அகராதி, விகுதி அகராதி, இலக்கணச் சொல்லகராதி, மொழியியல் சொல்லகராதி, முற்றெதுகை அகராதி, எதுகை இன்பம், பேச்சுவழக்கு அகராதி, வட்டார வழக்கு அகராதி, பெண்ணோவியம், இணைச்சொல் அகராதி, மேற்கோள் அகராதி, வேர்ச்சொல்லகராதி, மரபுச்சொல்லகராதி, இலக்கியப் பழமொழி அகராதி, அறிவுரை அகராதி, உவமை அகராதி, உருவக அகராதி, கற்பனை அகராதி, வசைச்சொல் அகராதி, பரந்தையர் அகராதி, வருணனை அகராதி, பண்பாட்டு அகராதி, அடைமொழி அகராதி, சுருக்கச் சொல்லகராதி, சிலேடை அகராதி முதலியவை அவை. நிகண்டில் உள்ள தெய்வப் பெயர்த் தொகுதியை ஒன்பது தொகுதியாக விரிவாக்கித் தொகுத்துள்ளார். இன்னும் பற்பல நூல்களை அகரவரிசையிலேயே தொகுத்துள்ளார். எடுத்துக்காட்டுகள்: திருக்குறள் நொடி வினாவிடை, வள்ளுவரின் அறிவுரைகளும், கட்டளைகளும், வள்ளலாரின் பொன்மொழிகள், வள்ளலாரின் உபதேசங்கள் முதலியன. ஆங்கிலத்திலும் பல அகராதிகளை வெளியிட்டுள்ளார். தொகுத்து வைத்துள்ளார்.

## அறிவியல்நெறியில் தொகுத்தல்:

சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி ஒன்றுதான் அகராதியியலின் நெறிமுறைகளைப் பெரும்பாலும் பின்பற்றியுள்ளது. மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி, ஆனந்தவிகடன் அகராதி முதலியவற்றில் பல்வேறு குறைகள் உள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டு வரும் பெருஞ்சொல்லகராதி அறிவியல் நெறிக்குப் பெரிதும் மாறுபட்டுள்ளது. அகராதித்துறையில் அனுபவமோ, ஈடுபாடோ இல்லாதவர்களே இதுவரை இப்பெருஞ்சொல்லகராதியைத் தொகுத்து வந்துள்ளனர். இக்கால அறிவியல் முன்னேற்றத்தைப் பயன்படுத்தாமல் பழம்போக்கிலேயே பெருஞ்சொல்லகராதி

தொகுக்கப்பட்டு வருவதால் பயனற்ற ஓர் அகராதி அமைப்பைப் பெற்றுள்ளது. இதன் அடிப்படை அமைப்பையே மாற்ற வேண்டியுள்ளது.

### வரலாற்றுப் பேரகராதி:

தமிழில் வரலாற்றுப் பேரகராதி இன்னும் வெளிவரவில்லை. ஆங்கில வரலாற்றுப் பேரகராதியைப் போலப் பல்லாயிரம் பேர் ஈடுபட்டால் தான் வரலாற்றுப் பேரகராதியை உருவாக்க முடியும். அதற்கு முன் மக்களிடையே அகராதி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்றபடுத்த வேண்டும். இப்போதுள்ள நிலையில் அகராதிகளைப் பயன்படுத்துவோர் மிகக்குறைவு. பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் ஆங்கில அகராதியைப் போல் தமிழ் அகராதியைப் பயன்படுத்தவேண்டும் என்று ஆசிரியர்கள் கூறுவதில்லை. ஆசிரியர்களே அகராதிகளைப் பயன்படுத்துவதில்லை.

### சொற்பிறப்பியல் அகராதி:

ஞானப்பிரகாச அடிகளாரும், தேவநேயப் பாவாணரும் சொற்பிறப்பியல் அகர முதலியின் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். இவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தமிழறிஞர்கள் ஒன்றாகச் சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். தமிழ் உலகத்துப் பிற மொழிகளுடன் கொண்டிருந்த தொடர்பை வேர்ச்சொல்லகராதியே (சொற்பிறப்பியல் அகராதியே) வெளிப்படுத்தும்.

### கூட்டு முயற்சி:

மேலை நாடுகளில் பல அறிஞர்கள் ஒன்று சேர்ந்து அகராதிகள் தொகுக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். நம் நாட்டில் தனி மனித வழிபாடே தலையோங்கி நிற்கிறது. இந்த நிலை மாறி ஒவ்வொரு துறையிலும் அறிஞர்கள் ஒன்று கூடி ஆய்வு செய்வதும், நூல்களை உருவாக்குவதும் வேண்டும். ஒவ்வொரு துறையிலும் தலைவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து பணி செய்யும் பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். விண்வெளி மையங்களில் பல அறிவியலறிஞர்கள் சேர்ந்து பணி செய்வது போலவே ஆய்வு மையங்களிலும் ஆய்வாளர்கள் பணி செய்யவேண்டும்.

### நிறுவனங்கள், செல்வர்களின் உதவி:

மேலை நாடுகளில் அறிவியல் ஆய்வை மேற்கொள்வதற்குத் தனிப்பட்ட நிறுவனங்களும், செல்வர்களும் முன்வருகின்றனர். அதுபோலவே நம் நாட்டிலும் பல்வேறு ஆராய்ச்சியை மேற்கொள்வோருக்கு நிறுவனங்களும், செல்வர்களும் பொருளுதவி வழங்க முன்வரவேண்டும். பன்மொழிப் புலவர் மு.ச. சிவம் தொகுத்து வைத்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட நிறுவனங்கள் அல்லது செல்வர்கள் முன்வரவேண்டும். இதனால் தமிழுக்குத் தொண்டு செய்த அழியாப்புகழ் அவர்களுக்குக் கிடைக்கும்.

### முடிவுரை:

ஒரு மொழியின் வளத்தைக் காட்டும் கண்ணாடிகள் அகராதிகளே. தமிழில் துறைதோறும் நூல்கள் வெளிவருவதுடன் அவ்வத்துறையின் சாரத்தைப் பிழிந்து தரும்

padippakam

அகராதிகளும் தோன்றவேண்டும். தமிழில் இன்றும் நூற்றுக்கணக்கான துறைகளில் அகராதிகள் தோன்றவேண்டும். அகராதிகளைப் பயன்படுத்துவோர் தொகை அதிகமானால்தான் அகராதிகளை வெளியிடுவோர் ஆர்வத்துடன் முன்வருவர். அகராதி பற்றிய விழிப்புணர்வைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஊட்ட வேண்டும். அகராதிகள் வெளிவருவதன் முக்கியத்துவம் பற்றி அரசும் அறிந்து கொள்ளவேண்டும். தமிழ் வளர்ச்சிக்கெனத் தனி அமைச்சகம் ஒன்று உருவாக வேண்டும். இப்போது அகராதித் துறையில் மிகவும் பின்தங்கியுள்ள தமிழகம் விழிப்புணர்ச்சி உற்றால் உலகிலேயே அகராதித் துறையில் முன்னணியிடத்தைப் பெறமுடியும். ஒலிம்பிக்கில் சாதனை புரிவது போலவே அறிவுத்துறைகளிலும் தமிழகம் சாதனை புரிவதற்குத் தன்னை அணியப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இக்கட்டுரை எழுதத் துணைநின்ற நூல் "அகராதியில் வரலாறு", வ. ஜெயதேவன், சென்னைப் பல்கலைக்கழகம்.

# நாம் வழுத்தும் பொங்கல்!

*பிரகா*

அறுவடையின் நிறைவேதான் பொங்கல் என்றார்
அருமையுற இயற்கைக்கு நன்றி சொன்னார்!
அறிவடைதல் தாமின்று பொங்கல் என்போம்!
அருளார்ந்த கொள்கைகளே பொங்கல் என்போம்!
செறிவடைந்த வாழ்க்கையையே பொங்கல் என்போம்
செந்தமிழின் உயர்வேதான் பொங்கல் என்போம்!
அறிவியலின் வளர்ச்சியைத்தான் பொங்கல் என்போம்
அனைவருக்கும் பொதுமைநிலை பொங்கல் என்போம்!

எல்லாரும் எல்லாமும் எய்தப் பட்டே
ஏற்றத்தாழ் வென்பதெல்லாம் நீங்கப் பட்டே
நல்லவண்ணம் நயன்மைநிலை நாட்டப் பட்டே
நலமிக்க தொழில் வளங்கள் பெருக்கப்பட்டே
கல்லாமை இல்லாமை களையப் பட்டே
கருத்தாலும் கரத்தாலும் உழைக்கப் பட்டே
வல்லமையை உருவாக்கிப் பெருமைப் பட்டே
வாழ்கின்ற பொன்னாளே பொங்கல் நன்னாள்!

உள்ளதெலாம் உலகத்தில் பொதுவாய்ப் போனால்
உனக்கெனக்கு என்பதற்கு வகையே யில்லை!
கொன்வாரும் கொடுப்பாரும் இருக்க மாட்டார்
கொள்ளைக்கும் பதுக்கலுக்கும் வேலை யில்லை!
எள்ளளவு தயவுக்கும் தேவை யில்லை
எவருக்கும் நாமடிமை கட்ட வேண்டாம்!
வெள்ளமென விரைந்து வரும் அந்நன் னாளே
விருப்பமொடு நாம் வழுத்தும் பொங்க லாமே!

padippakam

# தமிழில் பெண்ணியம்

முனைவர் இரா. பிரேமா,
*அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்-2.*

உலகெங்கும் பெண் விடுதலை சிந்தனையே பெண்ணியத்தின் தொடக்க நிலையாக இருந்திருக்கிறது. தமிழகமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. தமிழகத்தில் பெண் விடுதலை சிந்தனைக்கு மாயூரம் வேதநாயகம் பிள்ளை வித்திட்டார். பாரதியார் அச்சிந்தனையை ஆழ வேரூன்ற வைத்தார். பெரியார் பெண் விடுதலையின் தீவிரத்தை அதிகப்படுத்தினார்.

'பெண்ணியம்' **(Feminism)** என்பது மேலைநாட்டுக் கருத்தாக்கம் என்றாலும், அது மனித குலத்தின் நிலைமாற்றத்திற்கு வித்திடும் கோட்பாடு என்பதால், அஃது உலக அளவில் எழுச்சி பெற்றது. ஏற்கனவே, பெண் விடுதலைச் சிந்தனைகளில் ஆர்வம் காட்டிய தமிழ்ச் சிந்தனையாளர்கள் பெண்ணியத்தை வரவேற்றனர்.

'யுனஸ்கோ' நிறுவனம் 1975 முதல் 1983 வரையிலான காலகட்டத்தைப் "பெண்கள் பத்தாண்டாக" அறிவித்தது. அதுமுதல் உலகெங்கும் மகளிர் பற்றிய சிந்தனைகள் பல துறையிலும் எழுச்சி பெறத் தொடங்கின. தமிழகத்திலும், தொடர்பு சாதனங்கள் பெண்கள் பற்றி செய்திகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தொடங்கின. அரசின் புதிய திட்டங்கள் பெண்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்டன. தன்னார்வக் குழுக்கள் பெண்கள் துயரைப் போக்க எழுச்சி பெற்றன. எழுத்தாளர்கள் பெண்ணுரிமைக்காக அதுமுதல் தீவிர குரல் ஒலிக்கத் தொடங்கினர்.

பெண்கள் பத்தாண்டின் முடிவாக தமிழக அரசு 1984-ல் மகளிர் பல்கலைக்கழகத்தைத் தொடங்கியது. அன்னை தெரசாவின் பெயரில் தொடங்கப்பட்ட அப்பல்கலைக்கழகம் 'மகளிரியல்' **(Women's studies)** கல்வியில் ஆர்வம் காட்டியது. அதற்கேற்ப, அப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினர் பெண்ணிய நோக்கில் பாடத் திட்டங்களை அமைத்தும், ஆய்வுகளை மேற்கொண்டும், ஆய்வரங்கங்களை நடத்தியும், பெண்ணியச் சிந்தனைக்குத் தமிழில் எழுச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தித் தந்தனர். இதன் மூலம் தமிழ் ஆய்வாளர்களிடையே இச்சிந்தனை பரவலாக வேரூன்றத் தொடங்கியது.

தமிழில், பெண்ணியச் சிந்தனைகள் பரவ சிறு பத்திரிகைகளும் துணைபுரிந்து வருகின்றன.* பெண்ணியக் கோட்பாடுகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தும், பெண்ணியம் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டும் பெண்ணியம் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களுக்கு இடமளித்தும் வருகின்றன.

தமிழில் 'பெண்ணியம்' பற்றி இன்று வரை விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே வெளி வந்துள்ளன.

படிப்பகம்

padippakam

அன்னைத்தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 'பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு' என்ற நூலை 1992-ஆம் ஆண்டு வெளியிட்டது. பெண்ணியம் பற்றித் தமிழில் வெளி வந்த முதல் நூல் இந்நூலே. அகராதி வடிவமான இந்நூல் பெண்ணியம் பற்றிய கருத்தாக்கங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. மகளிரியலில் உயராய்வு செய்பவர்களுக்குப் பயன்படத்தக்கவிதத்தில் இந்நூல் அமைந்துள்ளதேதவிர, பெண்ணியத்தின் தோற்றம், வரலாறு, போக்குகள், செயல்பாடுகள் பற்றி வரன்முறையாக அறிய விரும்புபவர்களுக்குத் துணை செய்யும் விதத்தில் அமையவில்லை.

'பெண்ணியம்' என்ற தலைப்பில் 'காவ்யா' வெளியிட்டுள்ள நூல் ஏழு கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூலில், பேராசிரியை தேவதத்தாவின் கட்டுரை, பெண்ணியத்தின் சுருக்கமான வரலாற்றை முன்வைத்துள்ளது. இக்கட்டுரை பெண்ணியத்தின் அடிப்படையைப் பேசுகிறது. பெண்ணியத்தை முதன் முதலாக புரிந்து கொள்ள முற்படுபவர்களுக்கு ஓரளவு துணை செய்வதாக உள்ளது. பஞ்சு, அருணா, ராஜ் கௌதமன் போன்றோரின் மொழிப்பெயர்ப்புக் கட்டுரைகள், எடுத்துக்கொண்ட அந்தந்த பெண்ணிய நோக்குகளை விளக்குகின்றன என்றாலும், எதிர்வு சிவக்குமார் எழுதிய கட்டுரை உட்பட மேற்கூறிய கட்டுரைகளைப் புரிந்துகொள்ள அடிப்படை பெண்ணிய அறிவு தேவை. அடிப்படை தெரியாதவர்களுக்கு இக்கட்டுரைகளினால் பயனில்லை.

இ ப த ம வெள்ளிவிழா மலராக வெளிவந்திருக்கும் பெண்ணியம் என்ற நூலும் கட்டுரைகளின் தொகுப்பே. இந்நூலில், பெண்ணியம் பற்றிய எதிர்வு சிந்தனைகளும் இடம் பெற்றுள்ளன. ஒரு சில பெண்ணிய கருத்துக்களை, தமிழ் இலக்கியங்களில் புகுத்தி ஆராயும் இக்கட்டுரைகளும் அடிப்படைத் தளத்தைப் பேசவில்லை. தவிர, ஓரிரு கட்டுரைகள் பெண்ணியத்தின் அடிப்படை புரியாமல் எழுதப்பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து வெளிவந்துள்ள டாக்டர். சு.வேங்கடராமனின், 'என்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்' என்ற நூல் புனைகதை இலக்கியங்களில் காணப்படும் பெண்ணியப் போக்குகளைக் கண்டுரைக்கும் நோக்கினதாக அமைந்துள்ளது.

'ப்ரேம்' என்பவர் எழுதி வெளியிட்டிருக்கும் ஒரு சிறு அச்சுப்பிரதியும், 'நிறப்பிரிகை'யில் வெளியான பெண்ணியம் பற்றிய உரையாடல்களும் 'பெண்ணிய'த்தின் ஒரு சார்பு போக்கை' அதாவது தீவிரப் போக்கை, அதிலும் குறிப்பாக 'ஓரின கலவி அரசியலை'ப் பெண்ணியத்தின் முதன்மை போக்காக எண்ணிப் பேசும் தவறான கணோட்டங்களாகும். மேலை நாட்டிலேயே இன்று ஓரின கலவி பெண்ணியம் **(Lesbian Feminism)** இயற்கைக்கு முரணானதாக மறுக்கப்பட்டு வரும்போது, (பார்க்க: **The second stage-betty frieden**) அது முதன்மை பெண்ணியப் போக்காக அடையாளம் காட்டும் விவாதங்கள்மூலம் தமிழில் பெண்ணியச் சிந்தனைகளை உறுதியாக வளர்த்துவிட இயலாது.

இவை தவிர, ஈழத்திலிருந்து (தமிழில்) சில பெண்ணிய நூல்கள் வெளிவந்துள்ளன. கணேசலிங்கத்தின் 'பெண்ணடிமை தீர' என்ற நூலில் மார்க்சிய அடிப்படை கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மார்க்சிய பெண்ணியத்தைப் புரிந்து கொள்ள இந்நூல் பெரிதும்

துணை செய்யும். செல்வி திருச்சந்திரன், சித்ரலேக மௌன குரு போன்றோர் எழுதியுள்ள நூல்களும் மார்க்சிய போக்கினதே. பின்னவர் இருவரின் நூல்களில் ஈழப் பெண் பிரச்சனைகளே முன் வைக்கப்பட்டுள்ளன. அதாவது, ஈழ நாட்டுச் சூழலில் பெண்ணியம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இப்படியாக, தமிழ் ஆய்வாளர்கள் மத்தியிலும், சிறு பத்திரிகையாளர்களிடையேயும் சில ஆண்டுகளாக பெண்ணியச் சிந்தனைகள் கால் கொண்டிருந்தாலும், இன்றளவும் தமிழில் 'பெண்ணியம்' சரியாக எடுத்துச் சொல்லப்படவில்லை. பெருபான்மையோரால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவும் இல்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1) பெண்ணியக் கட்டுரை மொழிபெயர்ப்பவர்கள், பெண்ணியம் பற்றி ஆய்வு செய்பவர்கள், பெண்ணிய விவாதங்களில் பங்கு கொள்பவர்கள்-இவர்களில் பலர் பெண்ணியத்தை முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் அல்லர்.

2) மேலை நாட்டுப் பெண்ணியச் சிந்தனையாளர்களிடையே பல கருத்து முரண்பாடுகள் உண்டு. அம்முரண்பாடுகளைச் சரியாக உள்வாங்கிக்கொள்ள 'பெண்ணியம்' பற்றிய வரலாற்று அறிவு தேவை. பெண்ணியம் பற்றிய முழுமையான புரிதல் இல்லாது, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கட்டுரைகளை மொழிப்பெயர்த்துத் தரும் போக்கே இன்று நிலவி வருகிறது.

3) பெண்ணியம் பற்றி எழுதும் மற்றும் சிலர், பெண்ணியத்தின் ஒரு சில போக்குகளை முதன்மையானதாக எண்ணி, அதையே பெண்ணியம் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். இதனால், தமிழில் பெண்ணியம் பற்றிய தவறான கண்ணோட்டங்களும் புரிதல்களும் ஏற்பட்டு, எதிர் சிந்தனைகள் தலைதூக்கி நிற்கின்றன.

4) பெண்ணியத்தைப் புரிந்து கொள்ளவும் எடுத்துரைக்கவும் பெண்ணைப் பெண்ணாக அறியும் மனப்பக்குவம் தேவை. அஃது, பெண்ணியம் பற்றி எழுதிய எல்லோரிடமும் இருப்பதாக கூற இயலாது.

5) பெண்ணியம் என்பது நாட்டுக்கு நாடு பண்பாட்டுப் பாதிப்புகளுக்கு ஏற்ப விளக்கப்பட வேண்டிய ஒன்று. ஒட்டுமொத்தமான விளக்கம் எல்லா நாட்டுக்கும் பொருந்தும் என்று கூற முடியாது. பெண்ணியம் இந்தியச் சூழலுக்கு ஏற்ப விளக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவ்வியக்கம் சாதாரண மக்களிடையேயும் எழுச்சி பெற முடியும்.

6) பெண்ணியத்தைப் பற்றி பெண்கள் அதிக அளவு எழுத முன்வரவேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் எழுதும் போது மட்டுமே, சரியான புரிதலோடு உணர்த்த இயலும். இத்தகைய புரிதல் உணர்வோடு எழுதப்பட்ட தமிழ்ப் பெண்ணியக் கட்டுரைகள் ஒரு சிலவே.

7) மற்ற எல்லா இயக்கங்களையும் பெரும்பாலும் அந்தந்த இயக்கவாதிகள் அல்லது அதில் ஈடுபாடுடையவர்கள் விளக்குகின்றனர். ஆனால், 'பெண்ணியம்' மட்டும் பெரும்பாலும் அவ்வியக்கம் சாராதவர்களால் விளக்கப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. அதனாலும், 'பெண்ணியம்' சரியாக எடுத்துச் செல்லப்படவில்லை எனலாம்.

8) தமிழில் இதுவரை வந்த பெண்ணிய எழுத்துக்கள் நூற்றுக்கும் குறைவானவையே. அவற்றில், பெண்ணியத்தை வரலாற்று அடிப்படையிலும், கோட்பாட்டு அடிப்படையிலும்,

padippakam

விளக்கியுரைக்கும் நூல் ஒன்றுகூட இல்லை என்பதும் பெண்ணியம் சரியாக புரிந்து கொள்ளப்படாததற்கு அடிப்படைக்காரணமாக அமைகிறது.

தமிழில் பெண்ணியம் பெரும் இயக்கமாக வளராததற்கும் சில முக்கிய காரணங்கள் உண்டு.

பெரும்பாலும், மேலைநாட்டு பெண்ணியக் கல்வியாளர்கள் செயல்பாட்டாளராகவும் இருக்கின்றனர். செயல்பாட்டாளர்களாக இல்லாத ஒரு சில கல்வியாளர்கள் கூட, செயல்பாட்டாளர்களுடன் இணைந்து செயல்படுகின்றனர். நம் நாட்டைப் பொறுத்தவரை பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் வேறாகவும், பெண்ணியக் கல்வியாளர்கள் வேறாகவும், இருப்பதும், இருவரும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளாமல் விலகி நிற்பதும் ஒரு பெரும் குறையாக அமைந்துள்ளது. கல்வியாளர்களும் செயல்பாட்டாளர்களும் ஒன்று சேரும்போதே பெண்ணியம் சமூக அளவில் எழுச்சி பெற இயலும்.

மகளிர் இயக்கங்கள் வரதட்சணை கொடுமை, பெண் சிசுக்கொலை, கற்பழிப்புக்கு எதிரான போராட்டங்கள், ஆபாச பத்திரிக்கைகள் எதிர்ப்பு போன்ற சில நடவடிக்கைகள் அளவிலேயே நின்று விடுகின்றன. 'பெண்ணியம்' என்பது இதுமட்டுமல்ல. இதற்கு அப்பாலும் வளர்ந்துவிட்ட ஒன்று.

இன்றைய காலகட்டத்தில், 'பெண்ணியம்' என்பது குடும்பத்தளத்திலும் சமூகத்தளத்திலும் சமத்துவம், விடுதலை, மதிப்பு இவற்றின் அடிப்படையில் பெண்கள் தங்கள் வாழ்க்கையைச் சுயமாக நிர்ணயித்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது; பெண்ணடிமைத்தனம் எந்தவடிவத்திலும் தலைகாட்டக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது'. அதற்கான சுய விழிப்புணர்வை எல்லாத்தரப்பு பெண்களிடையே ஏற்படுத்தவும் இவ்வியக்கங்கள் முன்வரவேண்டும்.

இன்றைய தேவைக்கேற்ப, 'பெண்ணியம்' தமிழில் சரியாக விளக்கப்பட வேண்டும். அதற்கு முதற்படியாக, பெண்ணியக் கோட்பாடுகள், கோட்பாட்டாளர்கள், பெண்ணிய வரலாறு, பெண்ணியக் கருத்துரை நூல்கள்-இவை மொழிப்பெயர்க்கப்படவேண்டும். அத்துடன் 'பெண்ணியம்' இந்தியச் சூழலில் எப்படி வளர்ந்துள்ளது. இந்தியப் பண்பாட்டு அடிப்படையில், பெண்ணியத்தை எப்படி இனம் காண முடியும் என்ற நோக்கில், இந்தியப்பெண்ணிய வரலாறு எழுதப்படவேண்டும். இத்தகைய அடிப்படை நூல்கள் இல்லாமல், தமிழில் பெண்ணியத் திறனாய்வு பற்றிப் பேசுவதும், தமிழ் இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனையை ஒட்டிய ஆய்வை மேற்கொள்வதும், அடித்தளம் இல்லாத கட்டிடமாக ஆட்டம் கண்டுள்ளது. இந்நிலையை மாற்ற, மகளிர் பல்கலைக்கழகமும், தமிழ் ஆய்வாளர்களும், பத்திரிகையாளர்களும் முன்வரவேண்டும்.

---

* மேலும், நிகழ், ஆய்வு, இலக்கிய வட்டம், சுட்டும் விழிச்சுடர், நிறப்பிரிகை போன்றவை,

* நூல்களும் கட்டுரைகளும் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளன,

padippakam

# தமிழில் தலித் இலக்கியம்....

## -சமூக நோக்கில்

### உஞ்சை ராசன்

"தீண்டாமை ஒரு பாவச்செயல், ஒரு பெருங்குற்றம், மனிதத் தன்மையற்ற செயல்" என்று தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தனது பாட நூல்களின் முகப்பிலேயே அறிவுறுத்துகிறது. தொடர்ந்து இதே நூல்களில் (தமிழ்) தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியில், "சமயம், மொழி, வட்டாரம் முதலியன காரணமாக எழும் வேறுபாடுகளை" சுட்டிக்காட்டி உறுதியெடுக்க வைக்கிறது. இவ்விரண்டு அறிவுரைகளிலும் "சாதி" மிகவும் சாமர்த்தியமாக கைகழுவப்பட்டிருக்கிறது. சாதியின் குழந்தைதான் தீண்டாமை என்பதை மறைத்துவிடுகிறது.

இவ்வாறு காந்தி தொடங்கி இன்றுவரை தீண்டாமை ஒழிப்பு பற்றி பேசாத நபர்களில்லை... இயக்கங்களில்லை. ஆயினும் தீண்டாமையும், சாதியும் முன்னிலும் வலுவாக வேர்கொள்கின்றன. எனவேதான் சாதியிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்ட தீண்டாமையை சாதியின் வேரைக்கிள்ளி எளிவதன் மூலம் ஒழிக்க முடியும். தீண்டாமையை ஒழிக்கப் புகுதல் வேர்கொண்ட மரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு ஒப்பாகுமேயொழிய மரத்தை வெட்டுவதாகாது.

இந்தப் புரிதல் அம்பேத்கார் அவர்களுக்கு ஏற்பட்டு அவரால் அவர் பிறந்த மண்ணில் விதைக்கப்பட்டது. மகாராட்டிரத்தில் அதற்கான விளைவு ஓரளவு கிட்டியது. அம்பேத்காரின் சாதியொழிப்புப் போர்க்குரலை பல தளங்களிலுமிருந்து ஒலிக்கத் தொடங்கினர் தலித் விடுதலைப் போராளிகள். இவர்களின் போர்க் குரலின் ஒருவகைதான் தலித் இலக்கியமாகப் பரிணமித்தது.

வளர்நிலையில் இன்று தமிழகத்தில் 'தலித் இலக்கியம்' தனது போர் முழக்கத்துடன் களம் புகுந்திருக்கிறது. இவ்வகை இலக்கியத்தின் (தமிழில்) வயது மிகவும் குறைவு. இக்குறுகிய காலத்திலும் இவ்விலக்கியம் பெற்றிருக்கிற அனுபவம் பெரிது. ஏனெனில் இரண்டாயிர வருடத்திய அடக்குமுறை அனுபவம் காரணமாக இதை எள்ளுபவர்களையும், கிள்ளுபவர்களையும், தொட்டிலை ஆட்டுபவர்களையும், பாலூட்டுபவர்களையும் மிக நன்றாகவே அனுமானிக்க முடிகிறது. எனவே, இவ்விலக்கியத்தின் எதிர்காலம் சுட்டிக்காட்டியபடி நிரம்ப எதிரிகளைச் சந்தித்தே ஒளிபெற வேண்டியுள்ளது. (அதிலும் பாலூட்டுகிற தாயையும் சந்தேகித்து அதாவது பால் சுரந்ததால் ஊட்டுகிறாளா.... குழந்தை அழுததால் ஊட்டுகிறாளா... என்பதை உணர்ந்து கொண்டு).

இப்படியொரு விசயத்தைப் பொத்தாம் பொதுவில் சொல்வதைவிட கொஞ்சம் ஆழப்படுத்தி பார்ப்பதிலிருந்தே இன்று... நாளை.... என்பதை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்.

padippakam

தலித் இலக்கியம்... தமிழில் விதை விழுந்ததிலிருந்தே.. தலித் இலக்கியம் என்றால் என்ன? தலித் இலக்கியப் படைப்பாளிகள் யார்? தலித் அல்லாதவர்கள் தலித் இலக்கியம் படைக்கக் கூடாதா? பாட்டாளி வர்க்க இலக்கியத்திலிருந்து ஏன் வேறுபட வேண்டும், தலித் உணர்வு என்பது என்ன? தலித் இலக்கியம் தலித் பண்பாட்டை, தலித் அரசியலை, தலித் தலைமையை உயர்த்திப் பிடிக்குமா? ... எனில் ஒவ்வொன்றையும் பிரிவுபடுத்திக் கொள்வதன் மூலம் தனிமைப்பட்டு விடாதோ? இதன் மூலமாக விரைவில் கரைந்து போகுமே... இவ்விலக்கியப் போக்கு காலவகைப்பட்டதாகும்... கொச்சையான, இழிவான (சொற்களை) மொழியை கையாளுவதால் இலக்கியக் கோட்பாடுகள் சிதையாதா.. தலித் பண்பாடு என்று சொல்லி பெண்களை எல்லா விசயத்துக்குமானவர்களாக்க முடியுமா... இருக்கிற முறைமைகளையெல்லாம் நொறுக்கிவிட்டு எப்படி புதிய முறைமைகளை உண்டாக்க முடியும்... இப்படி இன்னும் இதன்மீது தொடுக்கப்பட்ட கேள்விகள் ஏராளம். என்றாலும் இக்கேள்விகள் அனைத்துக்கும் ஓரளவு பதிலளிக்கப்பட்ட போதிலும் இவ்விலக்கியம் முன்வைத்த சில முழக்கங்களை இன்று எவ்வாறு செயல்படுத்துகிறது என்பதையும் இதிலிருந்து நாளை எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் துல்லியப் படுத்தியாக வேண்டியது நமது நடமை.

**“இந்துப் பாசிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கான உள்ளார்ந்த பலமும் நியாயமும், வரலாற்றுக் கடமையும் கொண்டதாக விளங்கும் தகுதி தலித் இலக்கியத்துக்கே உண்டு”. - ராஜ்கௌதமன்**

ஏகாதிபத்திய வருகையினாலும் அதன் அசுரபலத்தினாலும் நாளுக்கு நாள் அழுத்தப்படுபவர்கள் அடித்தட்டு உழைக்கும் மக்களாவர்... என்று ஏகாதிபத்தியத்தின் கொடுமையை படிநிலைப்படுத்திக் கூறுகிறோம். அதேபோல் இந்துப் பெருமதத்தின் பாசிசக் கொடுங்கரம் படிநிலையில் ஆகக் கீழாக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்டவர்களையே நெறிக்கிறது. எனவே இந்துப்பாசிசத்தின் எந்த வடிவத்தையும் எதிர்க்க வேண்டிய கடமை தாழ்த்தப்பட்ட மக்களையே சார்ந்து விடுகிறது. அல்லாமல் மற்றவர்கள், படிநிலையில் தங்களை உயர்ந்தவர்களாகவும் தனக்குக் கீழிருக்கிறவர்களைப் பார்த்து ஆறுதலடைந்து அமைதியாகிப் போதலையுமே வரலாறாகக் காணமுடிகிறது. எனவேதான் இந்துமத நிறுவனத்தின் எவ்வகை வெளிப்பாடும் இறுதியில் சாதிக்கும் தீண்டாமைக்கும் ஊட்டமளிப்பதாகவே மாறிவிடுவதை எதிர்த்தாக வேண்டியுள்ளது. இந்த வகையில்தான் இந்துப் பாசிசம் பரப்பி வைத்திருக்கிற பார்ப்பனீயப் பண்புகள் எதுவாயினும் அதை மீறியாகவேண்டும்... அவ்வாறு மீறுவதிலிருந்தே அதை எதிர்கொள்ளும் தெம்பைப் பெறமுடியும் என்பதை தலித் இலக்கியம் உணர்கிறது. எனவேதான்... அத்துமீறு... எனக் கட்டளைப் பிறப்பிக்கிறது.

இந்தப் போக்கு இன்று தலித் இலக்கியத்தில் வளர்ந்திருக்கிறதா?

இந்திய அரசியலில் தாழ்த்தப்பட்டவர்களின் மீது அக்கறை கொண்டவர்களாகக் காட்டி கொள்வது ஒரு அரசியல் மரபு என்பதைப் போல தலித் இலக்கியம் உருக்கொண்டவுடனே தங்களைக் காட்டிக்கொண்டவர்கள் ஒரு சிலர். தாழ்த்தப்பட்டோரின் பொருளியல் வாழ்வைச் சுட்டிக் காட்டிய வடிவங்களிலிருந்து நானும் தலித் இலக்கியந்தான் படைத்துள்ளேன் என்று கூறிக் கொண்டவர்களும் ஒருசிலர். முன்பு வர்க்க இலக்கியம்

படிப்பகம்

என்ற கோட்டுக்குள் நின்று படைத்ததெல்லாம் தலித் இலக்கியந்தான் என்று சுட்டிக் காட்டியவர்களும் ஒரு சிலர். இதைவிட பலபடி மேலே போய் இவர்தான் தலித் இலக்கிய முன்னோடி என்று பார்ப்பனீயப் பவிசுகளைப் பற்றி இழுத்துக்காட்டியவர்களும் இதையும் இதையும் சொல்ல வைத்தேன் என்று பூநூலின் முறுக்குடைத்துக் கொண்டவர்களும் உண்டு.

இவர்களிலும்... என் வாழ்வைச் சொல்லுகிறேன்... என்று தன் வரலாற்று உள்ளடக்கமாக முயன்றவர்களும் மீறல் போக்குடைய உள்ளடக்கததுடன் வடிவமைத்தவர்களும் உண்டு. இப்படி தலித் இலக்கிய வளர்ச்சிக்கு படைப்பு வழி நின்றவர்களின் வெளிப்பாடுகள்... தலித் இலக்கியம் குரலொலித்த அத்துமீறுதலை... வெளிப்படுத்தியதா? முழுமையாக ஆம்... என்று கூறமுடியவில்லை.

நிலவுடமை, முதலாளியம், ஏகாதிபத்தியம் இவைகளின் கூட்டுக்கலவையான இந்திய அரசியல் சூழல், வறுமை, பிணி, அறியாமை இவைகளை ஒருவகை ஏற்ற இறக்கங்களுடன் வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த அரசியல் வகைப்பாடுகள் எதையும் தன் வாழ்வுக்கே சாதகமாக்கிக் கொள்ளும் இந்துப் பார்ப்பனீயம் விதைத்த சாதியும் தீண்டாமையும் எவ்வித ஏற்ற இறக்கங்களுமின்றி ஒரே தன்மையுடையனவாய் இன்றுவரை நிலவுகிறது. எனவேதான் அரசியல் வகைப்பட்டவைகளை எதிர்த்து இலக்கியம் படைக்கிற அதே தன்மையுடன் சமூக வகைப்பட்ட இந்து மதத்தையும் பார்ப்பனீயத்தையும் எதிர்த்து இலக்கியம் படைக்க வேண்டிய அவசியம் உணரப்படுகிறது. இந்த வாழ்வியலுக்குள்ளும் ஊடுருவி தன்னை கொம்பேறி மூக்கனைப் போல் இருப்பதே தெரியாமல் இருப்பதும் இலைகள் அசைந்து வெளிப்பட்டால் எதிரே இருப்பவனின் கண்களை கொத்துவதுமான கொடூரம் நிறைந்த இந்தப் பார்ப்பனீயப் பாம்பை மரத்தைக் கலைத்து கீழே விழச்செய்து ஓடவிட்டு அடித்துக்கொல்லும் உக்கிரத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. எனவேதான் சாதியின் பெயரால் சுமத்தப்பட்டுள்ள எதையும் எடுத்தெறியும் வழக்கத்தைக் கற்றுத்தர வேண்டும். ஆக அத்துமீறுதல் என்பது தீண்டாமைக்கும் சாதிக்கும் எவையெல்லாம் முட்டுக்களாக அமைகின்றனவோ அதை வெட்டியாக வேண்டியதாகும். அதை இன்று தலித் இலங்கிய வடிவங்களிலொன்றான கட்டுரைகள் சாதித்ததைவிட, கவிதைகள் சாதித்ததைவிட, சிறு கதைகளோ... நாவல்களோ சாதிக்கவில்லை என்றே சுயமதிப்பீடு செய்துகொள்ளவேண்டும்.

"சாட்டையடிக் காரனென்ற கழைக் கூத்தாடி தன் சாட்டையால் தன் உடம்பின் மீது அடித்துக் கொள்வான். தன்னை அடித்துக்கொள்ளும்போது ஆவேசமாகவும்... பார்வையாளர்களிடம் காசோ, தானியமோ கேட்கும்போது... எண்சான் உடம்பையும் ஒண்டிச் சுருக்கி... சலாமிட்டு கேட்பான். இவ்வாறு தன்னைத்தானே துன்புறுத்திக் கொண்டு தன்மீது கழிவிரக்கம் ஏற்படச் செய்வதா... அல்லது அந்தச் சாட்டையால் தன் வாழ்வைப்பறித்தவர்கள் மீது சொடுக்குவதா... என்கிற கேள்வியின் பதிலை பொருத்ததே தலித் இலக்கியம்" -ரவிக்குமார்.

தலித் இலக்கியம் இன்னொரு போர்க்குரலாக "கலகம் செய்" ... என்றது. இங்கு இந்தியப் பண்பாடு என்றும் தமிழ்ப் பண்பாடு என்றும் பொதுமைப்படுத்திக் கூறுகின்றனர். பல தேசிய இனச் சிக்கலுடையது இந்தியா என்பதுபோல் பல சாதிச் சிக்கலுடையது தேசியம். இங்குள்ள ஒற்றைத் தன்மையுள்ள இந்துப் பார்ப்பனீயத்தை மையப்படுத்தி இந்தியப் பண்பாடு என்பதைப்போலவே தமிழகத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் கூறுகின்றனர். வரலாற்று உண்மைகளினடிப்படையில் தமிழ்ப் பாண்பாடு என்பது சாதியற்ற, பெண்ணடிமையற்ற, உழைப்பை, இயற்கையை முதன்மைப்படுத்திய பண்பாடாகவே இருந்தது. மாறாக, இவையெல்லாவற்றையும் பொய்யாக்கும் பார்ப்பனீயப் பாதந்தாங்கிகளைக் கொண்டிருக்கிறது. பண்பாட்டையும், இவைகளை முற்றாக எதிர்ப்பவர்களின் பண்பாட்டையும் இணைத்து பின்னதை மறைத்துக் கூறுகிற பண்பாட்டை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். எனவே தமிழ்ப் பண்பாடு என்பது பார்ப்பனீயம், இந்துமதம் ஒழிந்த பண்பாடாகவே இருக்கும். அகநிலை வாழ்முறைகளில் பல்வேறு ஒற்றுமைகளைக் கொண்டிருக்கிற தமிழ்ச் சமுதாயத்துக்குள்ளும் சாதியையும் தீண்டாமையையும் திணித்ததை வாய்ப் பிளந்து ஏற்றுக்கொண்டு சொந்த சகோதரர்களுக்கு சுடுகாடு மறுத்து, அண்ட இடம் மறுத்து, தவிச்ச வாய்க்கு தண்ணீர் மறுத்து, தொட்டாலும் பார்வையில் பட்டாலும் தீட்டு என்ற தூர ஒதுக்கி, வெட்டுமை வேலை செய்ய மறுத்தவரின் கட்டைவிரலை வெட்டி, பெண்களை பாலியல் பலாத்காரப்படுத்தி... இப்படி எத்தனை மனிதம் மீறிய செயல்களோ அத்தனையும் புறநிலையில் செய்து கொண்டு அகநிலைப்பட்டதனால் புற நிலையை மறைத்துவிட்டு பழைய மொந்தையில் புதிய கள் குடிக்க தலித்துகள் தயாராக முடியாது. எனவேதான் புறநிலை எதார்த்தங்களிலிருந்து அகநிலைக் கூறுகளையும் ஆராய்ந்து பார்க்கிற குணத்தை வளர்ப்பதே கலக இலக்கியம். இப்படி இன்று நிலவும் எதிர்ப்புத் தன்மை என்பது கலகமாக மாறுகிற வளர்ச்சியை எட்டவேண்டும்.

**"இந்து சமூக அமைப்பைத் தகர்க்க வேண்டுமெனில் முதலாவதாக இந்தச் சமூக அமைப்பைத் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளாக்க வேண்டும். இரண்டாவதாக இந்தச் சமூக அமைப்பைத் தாக்க சிந்தனையிலும் செயலிலும் இந்து மதத்திலிருந்து விடுபடவேண்டும்".** - அம்பேத்கார்

இங்கு இன்னொன்றை நாம் இணைத்துக் கொள்ளவேண்டும். அம்பேத்கார் கூறுவதைப்போல இந்து மதத்திலிருந்து விடுபட்டு கிறித்தவ மதத்திற்குச் சென்றோம். இந்து மதத்திலிருந்து இசுலாம் மதத்திற்குச் சென்றோம். அம்பேத்கார் கட்டளைகளில் இறுதியானதை தெரிந்தோ தெரியாமலோ நிறைவேற்றி விட்டோம். ஆனால் தெரிந்தே... இந்துச் சமூக அமைப்பை தாக்குதலுக்குள்ளாக்கவில்லை. இந்துச் சமூக அமைப்பு என்பது இந்து மதத்துடன் நின்றுவிடுவதல்ல. மாறாக இந்துமதத்தைப் பலப்படுத்தும் பார்ப்பனீயத்துடனும் தொடர்புடையது. பார்ப்பனீயம் கிளை பரப்பிய இடங்களிலெல்லாம் இந்துச் சமூக அமைப்புள்ளதாகவே கொள்ளவேண்டும். அந்த வகையில் மேல் கீழ், உயர்வு தாழ்வு என்று கூறுகின்ற கிறித்தவமாயிருந்தாலும் இசுலாமாக இருந்தாலும் இந்துச் சமூகத்தின்பாற்பட்டதே. எனவேதான் இந்துமதத்தை விட்டு வெளியேறுதல் என்பது கிறித்தவத்துக்கோ இசுலாத்துக்கோ செல் என்பதாகாது. ஆதிப்பண்பாடாகிய தலித் பண்பாடென்னும் தமிழ்பண்பாடாகிய மதமற்ற, சாதியற்ற, சமூகத்தைப் படைப்பதிலடங்கும்.

ஆக, தலித் இலக்கியம் என்பது தீண்டாமையை, சாதியைப் பார்ப்பனியத்தை உயர்த்திப்பிடிக்கிற எதனுடனும் சமரசமற்ற வகையில் கலகம் செய்யும். அவ்வாறில்லாத சமரசமுடைய இலக்கியம் தலித் இலக்கிய வகைப்பட்டதாக இருக்க முடியாது. ஏனெனில் தலித் இலக்கியத்தின் அடிக்குரலே தீண்டாமை, சாதி எதிர்ப்பிலிருந்து... இவைகளை ஒழிப்பது வரை நீளுவது.

**"தலித் இலக்கியம் தலித் தலைமையை உருவாக்குவது"** .... இன்குலாப்

**"தாழ்த்தப்பட்டோரிடமுள்ள குற்ற உணர்ச்சியை நீக்கி தலைமையை வளர்த்தெடுக்கும் பண்பாட்டுப் பணியே தலித் இலக்கியம்"** .... அ. மார்க்ஸ்

'தலித் இலக்கியம்' தோன்றிய பொழுதே இல்லை... இல்லை 'ஒடுக்கப்பட்டோர் இலக்கியம்' என்றே கூறவேண்டும் என்ற போக்கு எழுந்தது. இன்னும் சில பகுதியிலிருந்து தீண்டாமைக்கு உட்பட்டவர்களன்றி இன்னபிற ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்கள் அனைவரும் 'தலித்' துகளே என்ற போக்கும் வளர்ந்தது. இந்த இரு போக்குகளிலுமே "தலித் உணர்வு" என்பது அற்றுப்போய் இருப்பதையே காணமுடிகிறது. இந்த இலக்கிய வகைகளிலேயே இப்படியான முரண் தென்படுகிறபோது அரசியலில் கேட்க வேண்டியதில்லை.

எனவேதான் இப்பிரச்சினைகளை இரண்டாம் பட்சமாகவோ துணையானதாகவோ காணுகிற போக்கினாலேயே புரட்சிகர அமைப்புகள் என்பவர்களும் "தாழ்த்தப்பட்டோர் அணி"யைக் கட்டி உள்ளூர உள்ள சாதி மனோபாவத்தையும் தங்கள் தலைமை என்பது உங்களுக்கானதில்லை என்பதையும் நிரூபிக்கின்றனர். எனவே தலித் விடுதலைக்கும் இதை உள்ளடக்கிய தேசிய விடுதலைக்கும் தங்கள் ஒப்புக்கொடுத்து போராடும் தாழ்த்தப்பட்டவர்களின் தலைமையை நிறுவுகின்ற மனோ வளர்ச்சியை தலித் இலக்கியம் ஊட்டும். அதன் தொடக்கமாக தங்களுடைய பண்பாட்டு விழுமியங்களை உயர்த்திப் பிடிக்கும்

**"தமிழ்ச் சான்றோர்களை அன்னிய நாகரிகத்தில் மோகம் கொண்டு தமிழைச் சிதைத்தபோதும் தங்கள் சுகபோகங்களுக்காக தமிழைச் சீரழித்த போதும் ஏகாதிபத்திய அடிவருடிகள் தமிழை மறுத்து நையாண்டி செய்தபோதும் பண்டித வித்துவ பரம்பரையினர் தமிழன்னையை மூடி முக்காடிட்டு இருட்சிறைக்குள் வைத்தபோதும் தமிழ் அன்னையைச் சிறைமீட்டு தேறுதல் கூறிப்பாதுகாத்தவர்கள் இந்தப் பஞ்சமர் கூட்ட மக்களேயாவர். இவர்களே தமிழுக்கு எசமானர்களுமாவர். இந்த எசமானர்கள் பேசிய "இழிசனர் வழக்கை"யே தமிழென ஏற்றுக் கொள்கிறேன்."** .... கே. டானியல்

தலித் மொழி பற்றிய உரையாடல் ஆழப்படுத்தப்படவில்லையெனினும் கொச்சையான சொற்களைப் பயன்படுத்தலாமா என்கிற கேள்வி முன்வைக்கப்பட்டது. ஒன்பது வயதுப் பையன் தொண்ணூறு வயது கிழவரைப் பார்த்து 'டேய்...' என்பதற்கான அங்கீகாரத்தை ஆதிக்க சாதி வழங்கியுள்ளது. இதே தொண்ணூறு வயதுக் கிழவர் ஒன்பது வயதுப் பையனை 'டேய்' என்றால் மரபை மீறியதாக அந்தச் சிறியவனின் காலில் விழச்

padippakam

செய்யும் ஆதிக்கம் நிறைந்தது இச்சமூக அமைப்பு. எனில் இங்கு கையாளப்படும் ஒரு சொல் கையாளப்படுபவனின் சாதியின் தன்மையோடு சேர்த்து பொருள் தருகிறது. அடிமைச் சாதியான் ஆதிக்கச் சாதியானை 'அய்யா' என்றால் பெருமைப்படுத்துவது. ஆதிக்கச் சாதியான் அடிமைச் சாதியானை 'அய்யா' என்றால் சிறுமைப்படுத்துவது. இச்சொல்லின் தொனி மாறாமலே சாதி மட்டுமே இதன் தொனியை மாற்ற வல்ல சக்தி படைத்தது. இந்த உதாரணம் தமிழ்மொழி முழுமைக்கும் பொருத்திப்பார்க்க முடியும். மொழி... பேச்சு... எழுத்து இவை மூலமாகக் கூட சாதியைப் பிரித்தறியும் வகையில் ஊடகங்கள் கையாளப்பட்டன. இந்த ஊடகங்கள் பொதுமைப்படுத்தப்படும்போது எந்த ஊடகத்தின் மூலம் பிரித்தெடுக்க முடிந்ததோ அதே ஊடகத்தின் மூலம் இணைத்தேற்ற முயலுவதே தலித் இலக்கியத்தின் மொழியாக இருக்கும்.

**"நீக்குரோனியம்... குறிப்பிட்ட முறையில் தன்னை இந்த உலகோடும் மற்றவற்றோடம் இணைத்துக் கொள்வதாகும்".** ... ஜான்ரீட் - கிளைவேக்

இந்துத்துவம் சாதிய ஒதுக்கல் ஒடுக்கு முறைகளின் மூலம் சுரண்டலை மேற்கொள்வதைப் போலவே, ஏகாதிபத்தியம் இன ஒதுக்கல், ஒடுக்கு முறையின் மூலம் தனது வல்லாண்மையை நிருவி சுரண்டி வருகிறது. எனவே தலித்தியம் இந்துவத்தை எதிர்ப்பதைப்போல ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் எதிர்க்கவேண்டிய சூழலை... இந்திய அரசு அகலத் திறந்த கதவுகளை அடைப்பதன் மூலம் நிறைவேற்றியாக வேண்டும். எகாதிபத்திய ஒடுக்குமுறையை எதிர்ப்பதில் பிரதான சக்தியான இன ஒதுக்குதலுக்கு உள்ளாகிப்போன உழைக்கின்ற கறுப்பர்களுடன் பல வகையில் ஒத்துப்போகிற தலித்தர்கள் ஒன்றிணைய வேண்டியது அவசியம். அந்த வகையில் நீக்ரோவியமும் தலித்தியமும் நிறைய ஒத்துப்போகும். நீக்ரோவியம் அதன் தன் மண்ணுக்காகப் போராடுவதைத் போலவே தலித்தியமும் இழந்த மண்ணின் பெருமைகாக்கப் போராடுகிறது.

தலித் இலக்கியம் இன்று மிகவும் குறைந்த வயதையுடையதாயிருப்பினும் சுயமதிப்பீடு செய்து கொண்டு, நாளை சமரசமற்ற வகையில் பார்ப்பனீயத்துக்கு எதிரான தலித்தியத்தை உயர்த்திப் பிடிக்கும். இந்தப் போருக்குத் தன்னை தகவமைத்துக் கொள்ளும் அனைத்து சக்திகளுடனும் தோழமை கொண்டு சாதியற்ற சமூகத்துக்காகப் போராடும்.

தலித் இலக்கியம்... கலகம் செய்யும்... அய்க்கியமாகும்.... அத்துமீறும்.... புரட்சி செய்யும்.

***

படிப்பகம்

padippakam

# தமிழில் தலித் இலக்கியம்

## -இலக்கியப் நோக்கில்

இரா.நடராசன்.,
கடலூர்

"உனது குச்சிகளை வீணாக்காதே....
எண்ணெய் இல்லா என்னை எரிக்கும் உனது எத்தனிப்பு
என்திரி கருகியபுகை நெடியில்
உன் சுவாசம் சிக்கி சூன்யமாய் உறையும்
காற்றுச் சுழலும் பெரும்வெளியில்
என்னை மூட்டித் தவிக்கிறாய்
உன் விரல்கள் கொப்பளிக்க
நிறுத்திவிடு... .. ....
இருளில் இருப்போம்
நீயும் நானும் யார் யாராக என்பதின் பேதமின்றி...."

-பிரேதா-பிரேதன்
(புதைக்கப்பட்ட பிரதிகளும்
எழுதப்பட்ட மனிதர்களும்) பக்-77.

I

அ) மகராட்டிரத்தில் தலித்சாஹித்யா (ஒடுக்கப்பட்டவர்களின் இலக்கியம்) தோன்றியது. சாதீய முறையில் தீட்டுக்கு ஆட்பட்டவர்கள் பிறவியிலேயே இழிந்தவர்களாக கருதப்பட்டவர்கள் குறிப்பாக மேல் சாதியினரின் கண்களில் பட்டாலே பாவம் என்று ஊருக்கு வெளியே தூக்கியெறியப்பட்டு இரவில் மட்டுமே இடுப்பில் துடைப்பம் கட்டிக்கொண்டு வெளியே வர முடிந்த மகார் சாதியரின் போர்குணத்தை தலித்சாஹித்யா பதிவு செய்தது. தலித் கவிஞர்கள் ஒன்றுகூடி ஒருகுழுவாக இயங்கினர். 50-களின் இறுதியில் வித்ரேஹா, அஷமிததர்ஷா ஆகிய பத்திரிகைகள் தலித்துகளின் இழிநிலையையும் சாதிய ஆதிக்கத்தையும் எதிர்த்து போர்க் குணத்துடன் கவிதைகள் வெளியிட்டன. பிறகு அம்ஹி, சாதான போன்ற இதழ்களும் சேர்ந்து கொண்டன.

ஆ) காலப்போக்கில் கட்டுரைகளும் ஏராளமான கதைகளும் வாழ்க்கை நூல்களும் கொண்டு வீசிய மராத்திய தலித் இலக்கிய புயல் பிறமொழி இலக்கியங்களையும் பாதிக்கத் தொடங்கியது. மகாத்மா பூலே நூறு ஆண்டுகளுக்கு முன் தலித் என்ற சொல்லாடலை அறிமுகப்படுத்தினார். பஞ்சமர் என்னும் இழிபெயருக்கு மாற்றாக அண்ணல் அம்பேத்காரும் தலித் என்ற சொல்லையே முன் வைத்தார். இதையே மராட்டிய ஒடுக்கப்பட்ட சாதி இளைஞர்கள் அடையாளமாக பிடித்துக்கொண்டனர். தலித் எனும் பொது அடையாளத்திற்குள் சாதியின் பெயரால் பிறப்பின் பெயரால் ஒடுக்கப்பட்ட எல்லா தாழ்த்தப்பட்ட சாதி எழுத்தாளர்களும் அவர்களது இலக்கியமும் அடக்கம். தலித் எனும் சொல்லுக்கு மண்ணின் வேராக எனும் பொருளைத் தருவதாக அறிகிறோம்.

படிப்பகம்

padippakam

## II

அ) தமிழில் தலித் இலக்கியம் எனும் அடையாளமானது புதிதானாலும், சாதிய சுரண்டலுக்கும் தீண்டாமைக்கும் வித்திட்ட பார்ப்பனியத்திற்கு எதிரான போராட்டம் திராவிட இயக்கமாக தோன்றி வளர்ந்த நூறாண்டு கால வரலாறு நமக்கு உண்டு.

ஆ) பார்ப்பன எதிர்ப்பையும் நாத்திகத்தையும் பொது அம்சமாய் கொண்ட இலக்கியங்கள் இங்கு ஏராளம். தமிழ்மொழிக்கான போராட்டத்தினையும் இன ஒடுக்கலுக்கு எதிரான அடையாளத்தையும் பார்ப்பவருக்கும் பார்ப்பன அரசியலுக்கும் எதிரான புரட்சிகர வடிவத்தையும் தாங்கியதாக தமிழ் இலக்கியம் விளங்கி வந்துள்ளது.

இ) பார்பனிய எதிர்ப்பு இலக்கியம் என்பது தமிழில் மராத்தியைவிட முன் தொடங்கி நீண்ட வரலாறு ஒன்றை தன்னகத்தே கொண்டதாக உள்ளது. சாதீய எதிர்ப்பு என்பது தமிழில் எவ்வளவு தொன்மையான ஒன்று என்பதற்கு நிறப்பிரிகையின் இலக்கிய இணைப்பு 1-ல் அ. மார்க்சும் வேல்சாமியும் இணைந்து எழுதியுள்ள கட்டுரையில் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஈ) ஆனால் சாதீய எதிர்ப்பு இலக்கியம் தலித் இலக்கியம் ஆகா. பெரும்பாலும் பார்ப்பனியத்திற்கு எதிராக இயக்கம் கட்டிய பிற்படுத்தப்பட்ட சாதிகளை சேர்ந்த அறிவு ஜீவிகளால் இந்த இலக்கியம் புனையப்பட்டது. வேள்ாள மரபின் பதிவுகளாக அவற்றை கொள்ளலாம். வானம்பாடி எனும் கவிதை இயக்கம் இப்படிப்பட்ட பார்ப்பனிய எதிர்ப்பு கனலை தமிழனுக்கு ஊட்டியது.

உ) **ஆண்டாண்டுகாலமாக சமூகத்தின் மிகவும் கீழான தட்டில் வைக்கப்பட்டிருந்தோரின் வாழ்க்கை நேர்மையான விதத்தில் இலக்கியத்தில பதிவுசெய்யப்படவில்லை.** அவர்தம் **அவலங்கள் அவர்களின்** மீது பார்ப்பனியம் **கட்டவிழ்த்துவிட்ட** இரக்கமற்ற வன்முறை, தீட்டு சம்பிரதாயங்கள் போன்றவை-அவற்றை எதிர்த்து அந்த அப்பாவி மக்கள் செய்த கலகங்கள் போராட்டங்கள் போன்றவை திட்டமிட்டு மறைக்கப்பட்டன. இலக்கியங்களில் அவர்கள் அடிமைகளாய் மூடர்களாய் அருவருப்பானவர்களாய் சித்தரிக்கப்பட்டு வந்துள்ளார்கள். காரணம் அவ்விலக்கியங்களை அவர்கள் படைக்கவில்லை. தங்களது கலை ஆர்வத்தினையும் அவல வாழ்வுக்கு எதிரான போராட்டத்தையும் எழுத்தில் பதிவு செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டதில்லை.

## III

அ) தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த அறிவு ஜீவிகளின் ஒப்பற்ற பங்களிப்பின் காரணமாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தலித்துகள் பாடசாலைகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர். இதன் காரணமாக எழுத்தறிவு பரவலாக்கப்பட்ட நிலையில் மொழியறிவின் உச்சமான இலக்கிய மொழியை கற்றுத் தேர்ந்து இலக்கியம் படைக்க அவர்கள் புகுந்தபோது அதுவரை இலக்கியமாக அறியப்பட்ட யாவும் அடையாளமிழந்து தூள்தூளாவதை **மராட்டியத்தில்** கண்டனர்.

ஆ) அவ்வப்போது ஒன்றிரண்டு நாவல்கள், சிறுகதைகள் தலித்துகளின் வாழ்வை பிரதி பலிக்கும்வண்ணம் பிற வகுப்புகளை சேர்ந்த மானுடநேய படைப்பாளிகளால் படைக்கப்பட்டு வந்தாலும் தங்களது இலக்கியத்தை படைக்க தமிழக தலித் மக்கள் கடந்த

padippakam

ஆறு ஏழு ஆண்டுகளாக உற்சாகத்துடனும் கோபக்கனலுடனும் எதிர் கலாச்சார வேகத்துடனும் எழுதுகின்றனர்.

இ) பல இலக்கிய அரசியல்துறைகளுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்ததை போலவே தமிழில் தலித் இலக்கியத்திற்கும் ஈழத்தமிழ் மக்களே விதை விதைத்தனர். தமிழ்த் தலித் இலக்கிய பிதாமகராகவும் முன்னோடியாகவும் கே. டானியலை குறிப்பிடுகிறார்கள். 1927-ல் யாழ்பாணத்தில் பஞ்சமராக பிறந்த இவர் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகி அவற்றிற்கு எதிராக போராடியவர். பிரக்ஞை பூர்வமான தலித்திய அடையாளங்களுடன் இவரது படைப்புகள் திகழ்ந்தன. 'பஞ்சமர்' ஜனநாயக உணர்வுகளுடன் பஞ்சம சாதியை சேர்ந்தவர்கள் இயக்கம் அமைத்து திட்டத்துடன் திரண்டெழுந்து சாதி இழிவுகளுக்கெதிராக போராடத் தொடங்குவதை சித்தரிக்கும் நாவல் 1982-ல் வெளிவந்த இந்த நாவல் தமிழின் முதல் தலித் இலக்கிய நாவலாக கருதப்படுகிறது.

ஈ) இந்த நாவலின் பிரதானபாத்திரம் அய்யாண்ணன். இந்த பாத்திர சித்தரிப்பு குறித்து கே.டானியல் குறிப்பிடும்போது ஒரு நாவலுக்கு தலைச்சனாக கொள்ளப்படும் ஒரு பாத்திரம் சகல நிறைவுகளும் கொண்ட அப்பழுக்கற்ற பாத்திரமாக இருக்கவேண்டும் என்பது தமிழில் வழிவழி வந்த ஒன்று. எனது நாவல்கள், சிறுகதைகள் சகலத்திலும் இது மீறப்பட்டுள்ளது... பஞ்சமரின் அய்யாண்ணன். ஒரு கள்ளுக்கடையின் வாடிக்கைக்காரராகவே பிறப்பிக்கப்படுகிறார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சூது விளையாடுவதும், வேறோர் சந்தர்ப்பத்தில் அவர் குடிகாரர்களுடன் கூடிக்கூழ் காய்ச்சி குடித்து மகிழ்வதும், பல சந்தர்ப்பங்களில் அவர் கொச்சைகள் பேசி வம்பளப்பதும் பலருக்கு பிடிக்கவில்லை. இவர்களுக்கெல்லாம் நான் அப்போது சொன்ன மொட்டையான பதில், எனது அய்யாண்ணர் அப்படிப்பட்டவர்தான் என்கிறார் டானியல் (கே.டானியல் என் கதையில்) இது தலித் இலக்கியத்தின் குணம் ஆகும்.

உ) நீங்களெல்லாம் கெட்டவர்கள். கெட்ட பழக்கம் உடையவர்கள் என்றும் தலித்துகளை திருத்துகிற வேலையை தாமெடுத்துக்கொள்ளும் பார்ப்பனீயத்திற்கு எதிராக குற்ற உணர்ச்சியை தூக்கியெறிந்து அதையே அடையாளமாக மாற்றிக் கொண்டு காட்டுவது தலித் விடுதலையின் முதல்படியாகும். அதைத்தான் தலித் இலக்கியமும் எதிரொலிக்கும் -எதிரொலிக்கிறது.

ஊ) நளவன், பள்ளன், வண்ணான், அம்பட்டன், பறையன் என்ற அய்ந்து சாதியினரையும் உள்ளடக்கிய பஞ்சமர் எனும் இந்த நாவலில் இயக்கம் கட்டி போராட கிளம்பும் மக்களது வாழ்வை தான் உட்பட பல வாழும் மாதிரிகளை வைத்து கட்டமைத்த டானியல் இழிசனர் மொழியை கொண்டே சொல்லிப் போகிறார். தமிழிலக்கிய அழகியலுக்கு எதிராக இழிசனர் மொழியை முன் வைத்ததன் மூலம் தலித் இலக்கிய பிதாமகராக டானியல் விளங்கினார். கானல், அடிமைகள் மற்றும் கோவிந்தன் போன்றவை இவரது குறிப்பிடத்தகுந்த பிற நாவல்கள்.

எ) கானல் நாவலில் மதமாற்றமடைந்த தலித்துகளின் அவலம் சித்தரிக்கப்படுகிறது. இந்த நாவலுக்கான முன்னுரையில் டானியல் குறிப்பிடுகிறார்: நாவல் என்பது ஒரு கதை என்றும் அதற்கு தலைமகன், தலைமகள் இருக்கவேண்டுமென்றும், அந்தத் தலைவன் தலைவியை சுற்றிச்சுழன்றே சம்பங்களும், ஏனைய பாத்திரங்களும் வரவேண்டுமென்றும், தொடக்கம், உச்சம், முடிவு என்ற விதத்தில் உருவம் அமைக்க வேண்டுமென்றும்

படிப்பகம்

padippakam

இலக்கணம் கூறப்பட்டு நாளடைவில் அதுவே மரபாகிவிட்டது. இந்த மரபினை ஏற்றுக் கொள்ளாதவன் நான். எனது முன்னைய நாவல்களில் இந்த குறிப்பிட்ட அளவு மீறப்பட்டுள்ளது. கானலிலோ அது முற்று முழுதாக மீறப்பட்டுள்ளது. மனித இனத்தை பாவங்களில் இருந்து மீட்டெடுத்து மோட்ச இராச்சியத்தில் சேர்த்து விடுவது என்று வந்த கிருத்துவ மதம் சாதியின் முன்னே எப்படி தோற்றோடுகிறது என்பதை நாவல் அற்புதமாக சித்தரிக்கிறது. பஞ்சமர், தண்ணீர், பஞ்சகோணங்கள் மூன்றும் அலைகள் வெளியீடாக இவ்வாண்டு மீண்டும் வெளிவந்துள்ளன. கே.டானியல் எனும் பிதாமகரை தமிழுக்கு அறிமுகம் செய்தமைக்கு சிந்தனையாளர் அ. மார்க்சுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஏ) கே. டானியலின் மூலம் தொடங்கிய தமிழ் தலித் இலக்கியம் 80களின் இறுதியில் வேர் விட்டு 1990-லிருந்து கடந்த நான்காண்டுகளாக கிளை பரப்பி பெரும் புயலை கிளப்பிவிட்டிருக்கிறது.

ஐ) 1990-ல் மனுசங்க எனும் இதழ் தமிழின் முதல் தலித்திய இதழாக வெளிவந்தது. உஞ்சை ராஜன் அதன் ஆசிரியர். தலித் இலக்கியம் புதிய வேகம் கொண்டது. கவிதைகள் கதைகள் மட்டுமின்றி தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்த புள்ளி விபரங்களும் போராட்ட செய்திகளும் மடமடவென வெளிவரத் தொடங்கின.

ஒ) தமிழக கிராமப்புறங்களில் வறுமையில் வாடும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தலித் துகளுக்கும் இடையிலான சாதீய மோதல்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் நிறப்பிரிகை இதழ் நடத்திய கூட்டு முயற்சிகள் புள்ளி விபர சேகரிப்பு களப்பணிகள் தலித் இலக்கிய ஆர்வலர்களுக்கு உற்சாகம் ஊட்டியது என்றே சொல்லவேண்டும்.

ஓ) அவ்விதமாய் தொடங்கிய தலித் இலக்கியம் இதுவரையில் நிலவிய மரபு இலக்கியம், முற்போக்கு இலக்கியம் இவைகளைக் கேள்விக்குள்ளாக்கியது. தொடக்கத்தில் தலித் துகளுக்கு ஒரு இயலா என்று இலக்கிய மேதாவிகள் பலர் எள்ளி நகையாடினர். தமிழ் ஆர்வலர்களோ தலித் என்னும் சொல் குறித்து சர்ச்சைகளை கிளப்பினர்.

## IV

அ) தலித் எனும் பெயர் அடையாளம் தமிழ்படுத்தப்படவேண்டுமென்பது இவர்களது வாதம். இந்த சர்ச்சை இப்போதும் உள்ளது. தேவகோட்டை சிறுவாச்சியில், உள்ளூர் ஆதிக்க சாதிப்பெண் தன்னைவிட வயது முதிர்ந்த தாழ்த்தப்பட்ட ஆணை செருப்பால் அடித்த பொழுதும், கர்நாடகத்தில் கோயிலுக்குள் நுழையவேண்டும் எனக் கோரியதற்காக தாழ்த்தப்பட்ட இரண்டு ஆசிரியர்கள் வெட்டிக்கொல்லப்பட்டபோதும், பீகாரில் நிலப்பிரபுக்களின் குண்டர்களால் தாழ்த்தப்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானபோதும் இன்னும் இவை போன்ற ஆதிக்க வெறியர்களின் தாக்குதல்களிலி ருந்து தற்காத்துக் கொள்ள பல்வேறு தேசிய இனங்களை சார்ந்த தாழ்த்தப்பட்டோர் இணைந்த அமைப்பு தேவை. இந்த நிலையில் இந்திய அடையாளம் தேவை. தாழ்த்தப்பட்டோர் சிக்கல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருவதும், இந்திய பகுதிகளில் பரவலாக அறிமுகமாகியுள்ளதுமான ஒரு சொல்லைத் தேடினால் அது மராத்திய மொழியிலான தலித் என்பதாகவே உள்ளது என்று கோ.கேசவன் கூறுவது கருதத்தக்கது. (சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும் - பக்கம் 28-29).

படிப்பகம்

padippakam

## V

அ) தமிழ் தலித் இலக்கியம், தலித்துகளை பற்றிய இலக்கியம், தலித்களால் படைக்கப்பெற்ற தலித் படைப்பு இலக்கியம் என்ற இரண்டாகப் பிரித்து காணத்தக்கது... தலித் அல்லாதார் தலித் மக்களை குறித்து அக்கறையுடனும் மானுட நோக்கிலும் பதிவு செய்துள்ளனர்.

ஆ) பூமணியின் 'பிறகு' நாவல் அவ்வகையில் தலித்துக்களை பற்றியதாகும். சக்கிலியரின் பேச்சும், செயலும் ஏதோ ஒன்றால் வரையறுக்கப்பட்ட மாதிரி இயங்குவதை பூமணி இந்த நாவலில் கண்டுள்ளதாக தலித் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரும் தலித்திய அறிவுஜீவியுமான ராஜ்கௌதமன் குறிப்பிடுகிறார் (எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம் பக்கம் - 109).

இ) அறிவழகனின் 'கழிசடை' அவ்வகையில் தலித்துகளின் வாழ்வை சித்தரிக்கிறது. கழிசடை எனும் பாத்திரம் சாக்கடை கழுவுதல் முதற்கொண்டு வாழ்வின் ஒவ்வொரு படியிலும் எங்ஙனம் சாதீய இழிவுமுறைக்கும் அதுகிளப்பும் வன்முறைக்கும் உட்படுத்தப்படுகிறது என்பதை ஆழமாக படம் பிடித்துக் காட்டுகிறார் அறிவழகன். தேவிபாரதியின் பலி, இரா. நடராசனின் மிச்சமிருப்பவன், குமார் செல்வாவின் 'உக்கிலு' ரத்தின-புகழேந்தியின் மண் கவுச்சி போன்ற தொகுதிகளில் உள்ள சிறுகதைகள் தலித் மக்களின் வாழ்வை சித்தரிப்பவையே.

ஈ) ஆனால், மேற்சொன்னவர்களின் படைப்புகள் அமைப்பில் தலித் குறித்தவையாயினும் இயல்பில் தலித்துகளின் மனநிலையை அவ்வளவு ஆழமாக படம் பிடித்துக்காட்டுகின்றன என்பதோ, அவர் தம் போராட்டத்தை இயல்பானதொருவகையில் பதிவு செய்ய இவர்களால் எந்த அளவுக்கு முடியும் என்பதையோ யோசிக்க வேண்டியுள்ளது. அவ்வகையில் டேனியலைப்போலவே ஒரு தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்து சாதிய ஒடுக்க முறைகளுக்கு ஆளாகி அவற்றிற்கு எதிராக செயல்படுவதோடு தங்களது அனுபவங்களையும் அடையாளங்களையும் இலக்கியமாக பதிவு செய்தவர்களை பற்றி பார்க்க வேண்டியுள்ளது.

## VI

அ) 1982-லிருந்து தமிழிலக்கிய வட்டாரத்திற்கு அறிமுகமானவர் விழி.பா.இதயவேந்தன். விழுப்புரத்தில் நெம்புகோல் அமைப்பின் மூலம் இலக்கிய உலகிற்கு தெரியவந்துள்ள இவரது சிறுகதை தொகுதி 'நந்தனார் தெரு' 1991-ல் வெளிவந்து பெரும் ஆதரவு பெற்றது. இதை தமிழின் முதல் தலித் சிறுகதை தொகுதியாக கொள்ளலாம். இவரது கதைகளில் நந்தனார் தெரு, இழிவு, தலைபிரசவம் போன்றவை தலித் சமூகத்தின் வாழ்வை அற்புதமாக பதிவு செய்திருக்கின்றன. புதிய பல படைப்புகளும் செயல்பாடுகளும் இதயவேந்தனிடம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. வெறும் கதைகளுடன், இலக்கியத்துடன் நின்றுவிடாமல் களப்பணிகளிலும் தலித் போராட்டத்திலும் பங்கு கொள்ளும் விழி.பா.இதயவேந்தன் விழுப்புரம் சீராளன் எனும் பெயரிலும் எழுதி வருகிறார்.

கடலூரில் குரல் இலக்கிய அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் கே.டானியல் தலித் இலக்கிய விருது என்ற ஒன்றை கொடுத்து தலித் எழுத்தாளர்களை கௌரவித்தும் ஊக்குவித்தும் வருகிறது. விழி.பா.இதயவேந்தன் 1993-ம் ஆண்டான கே.டானியல் தலித் இலக்கிய விருது பெற்றவராவார்.

படிப்பகம்

padippakam

ஆ) மராத்திய தலித்துகளை போல இங்கும் தலித்துகள் தங்களது வாழ்க்கை நூலை எழுதியுள்ளார்கள். புதுவையை சேர்ந்த பாமா எழுதிய 'கருக்கு' எனும் வாழ்வில் நூல் 1992-ல் வெளிவந்தது. சாதிய வன்முறைக்கு தப்பவும் தம் மக்களை விடுவிக்கவும் நினைத்து கிருத்துவ ஆயச்சியாக மாற முடிவெடுத்து அவ்விதமான பிறகு அங்கும் அதே விதமான தீட்டுகளுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகிய தனது வாழ்வை தலித்திய தன்மையுடன் பதிவு செய்துள்ளார் பாமா. இவரது நூலை வெளியிட்ட மதுரை அய்டியாஸ், பிறகு யாத்திரை எனும் தலித் கிருஸ்துவ விடுதலை இயக்கம் குறித்த நாவலையும் வெளியிட்டது.

இ) அய்.ஏ.எஸ். அதிகாரியான சிவகாமி படைப்புகளும் குறிப்பிடவேண்டியவை. 'பழையன கழிதலும்' தொகுப்பும் ஆனந்தாயி போன்ற நாவல்களும் தலித்தியம் என்பதிலிருந்து பெண்ணியம் நோக்கி விரிகின்றன எனலாம். அதேபோல் சென்ற ஆண்டிற்கான கதா விருதுபெற்ற சோ. தர்மன் பெயரையும் குறிப்பிடவேண்டும்.

ஈ) 1993-ல் தாமரை செல்வி பதிப்பகம் அபிமானி எனும் தீவிர படைப்பாளியின் 'நோக்காடு' சிறுகதை தொகுதியை கொண்டு வந்தது. தலித் சிறுகதைகள் எனும் அடைபெயரோடு நெஞ்சு நிமிர்த்திக்கொண்டு வெளிவந்த முதல் தொகுதி என்று இதை குறிப்பிடலாம். அம்பேதகார் அணிக்கும் முத்துவீரன் அணிக்கும் இடையிலான கபடி ஆட்டம் சாதி கலவரமாகி தாழ்த்தப்பட்ட மக்கள் தாக்கப்படுவதை "பொங்கலும் சில எச்சில் பருக்கைகளும்" கதையில் சித்தரிக்கிறார் அபிமானி. மீன் வாங்கப்போய் உதை வாங்கித் திரும்பும் கீழச்சேரி வெள்ளைச்சாமி (ருசி) மூணாங் கிளாஸ் படிக்காது ஆடு மேய்ச்சு கோணாரிடம் வாங்கிக் கட்டிக்கொள்ளும் மகராசன் (சில மேய்ப்பர்கள்) ஆகியோர் மூலம் தலித் வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. இவரது நோக்காடு கதையிலிருந்து ஒரு பகுதி....

எல்லோருக்கும் அவசியமாயிருந்தது

"என்ன இந்த கருத்தாயி.. ரெண்டாவது கக்கூசுக்குள்ளத்தண்ணியும் தொரட்டியுமாய் அப்பவே போனவ.. இன்னும் ஆளு அனக்கத்தக் காணோம்".

மழைத்தூறிக்கொண்டிருந்தது போல அவர்களின் மனசுகளும் தூறிக் கொண்டிருந்தன. சூன்யமாய்த் தெரிந்தது மனோகரிக்கு. கழுவுற சத்தத்தையும் காணோம்.... வழிக்கிற சத்தத்தையும் காணோம்...

"ஏய்... கருத்தாயி.... என்ன பண்ற? அனக்கத்தக் காணோம்.... தூங்கறியா?"

சற்று நேரத்துக்கு பதிலில்லை கருத்தாயிடமிருந்து.... ரொம்பவும் தளர்வாய், தயக்கமாய் அப்புறந்தான் சன்னமாய் குரல் வந்தது.

"கொஞ்சம் பொறுங்கம்மா... வவுறு வாணால வாங்குது. மொத்தமா கழுவி விட்டுட்டுப்போறேன். இப்ப... செத்த நாளியில வந்திருதேன்...."

ரொம்பவும் நொம்பலப்பட்டுக்கொண்டுதான் கருத்தாயி பதில் சொன்னாள். வயிற்றைப் புடுங்கிக் கொண்டு போனதில் அவளுக்குக் கண்ணீர் கூட வந்திருந்தது.

படிப்பகம்

padippakam

அவ்வளவுதான் உடனே பத்திரகாளி ஆகிப்போனாள் மனோகரி. அவளின் பக்கத்தில் நின்றிருந்த மற்ற வாடகை வீட்டுக்காரிகளெல்லாம் மூக்கைச் சுளித்துக்கொண்டு அவரவர்களின் வீட்டுக்குள் நுழைந்துக்கொண்டார்கள்...

"ச்செ.... பொம்பளயப்பாரு... ஒரு சக்கிலிச்சிக்கு நம்ம வீட்டுக் கக்கூசு கேக்கிதாக்கும்.... எளவெடுக்க"

பட்டென்று கக்கூசின் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் மனோகரி.... (நோக்காடு - பக்கம் - 94,95).

உ) தமிழ் தலித் இலக்கியத்தின் அழகியல் என்பது பாசாங்குகளை தோலுரித்து சாதியத்தின் முகத்தில் இப்படித்தான் மலம் பூசுகிறது. அக்டோபரில் க்ரியா வெளியிட்டுள்ள கோவேரிக் கழுதைகள் சிறந்த தலித் நாவலாகும்.

ஊ) பாடல்களாக விடுதலை பாடி தலித் மனநிலையை வெளிப்படுத்தி அவ்வகையில் அப்பாடல்களை இலக்கியமாய் பதிவு செய்து வரும் தலித்துகள் உண்டு. சுப்பையா அவர்களில் முதன்மையானவர். தொட்டாலே தீட்டுப்படுமா... நாங்க தொடாத பொருளெதுவாம்.... மற்றும் இந்துமத சிறையினிலே அரிசனங்க நாங்க, இயற்கை படைப்பினிலே... சரிசனங்க தாங்க போன்ற பாடல்களில் தெறிக்கும் போர்க்குணம் யாரையும் கலங்கடித்துவிடும். இவர்தம் பாடல்களில் பொதிந்துள்ள கலகக்குரல் எத்தனையோ கிராமிய தாழ்த்தப்பட்ட இளைஞர்களை கிளர்ந்தெழ வைத்துள்ளது கண்கூடு.

எ) தலித் நாடகத்தின் (Dalit Theatre) ஆரம்ப முயற்சிகள் முனைவர் கே.ஏ.குணசேகரனால் எடுக்கப்பட்டவை. அவ்வகையில் 'பலியாடுகள்' முதல் தலித் நாடகமானது. மனிதர்களையே பலியிடுவதை காலங்காலமாக பார்ப்பனீயம் எப்படி நியாயப்படுத்தி வந்துள்ளது என்பதை அற்புதமாய் விளக்கும் இந்த நாடகம் பறையையும் பாட்டையும் பின்னணியாகக்கொண்டது. தமிழ் நாடகத்தின் புதிய முகமாய் தலித் நாடக அரங்கம் திகழ்கிறது. சமீபத்திய நாடகமான 'அறிகுறி' அவ்வகையில் சிறந்த ஒன்றுதான். உடல் ரீதியான தீட்டு என்பது கருத்தியல் ரீதியான தீட்டாக மாறியுள்ளதை இந்நாடகம் வெளிப்படுத்துகிறது. பலியாடாக இருக்கும்வரைதான் தாழ்த்தப்பட்டவனுக்கு அநீதி. 'புலி யாக உருவெடுத்தால் தவளை பலம் ஊரை ஆளக்கூடியது' எனும் நாடகத்தின் முடிவு தலித்திய விடுதலை நோக்கை காட்டுகிறது. முனைவர் கே.ஏ.குணசேகரனின் தன்னானே பாட்டுக்குழு தலித்திய பாடல் அரங்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக முன்னோடியாக விளங்குகிறது. அவரது குழுவில் அனைவருமே தாழ்த்தப்பட்ட வகுப்பு தோழர்கள். தலித்திய கலை வடிவ இயல்புடன் போர்க்குணம் கலக்கும்போது தீப்பொறியாக பாடல்கள் தெறிக்கின்றன. 'மனுசங்கடா' ஒலிநாடா பட்டிதொட்டிகளிலெல்லாம் முழங்கிக் கொண்டிருக்கிறது.

ஏ) தலித் இலக்கியம் தமிழகத்தில் கால்பரப்ப பல கட்டுரையாளர்கள் மொழிப்பெயர்ப்பாளர்கள் சிந்தனையாளர்கள் சிறுபத்திரிக்கையாளர்கள் பரவலாக செயல்பட்டு வருகிறார்கள். தலித்திய பார்வையோடு பழந்தமிழ் இலக்கியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும் முனைவர் ராஜ்கௌதமன் அவர்களில் முதன்மையானவர். தலித் பண்பாடு பற்றியும்

படிப்பகம்

padippakam

தலித் இலக்கிய இயக்கம் குறித்துமான இவரது கட்டுரைகள் தலித் இலக்கியத்திற்கே முதுகெலும்பாக விளங்கக்கூடியவை என்றால் அது மிகையாகாது. கல்யாணி, பிரேம், உஞ்சை ராஜன், அ. மார்க்ஸ், ரவிக்குமார் போன்ற சிந்தனையாளர்களின் பணியும் கருதத்தக்கது. மதுரை இறையியல் கல்லூரி தலித் ஆய்வு மய்யம் தலித் விடுதலை இயல் எனும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளதோடு தலித்தியல் குறித்து பல்நோக்கு ஆய்வுகள் மேற்கொண்டும் வருகிறது. தாமரைச்செல்வி பதிப்பகம் 'தலித் இலக்கியம் - போக்கும் வரலாறும்' எனும் அர்ஜுன் டாங்கேயின் நூலை தமிழில் வெளியிட்டுள்ளது. தமிழாக்கம் செய்தவர் கட்டுரையாளர் தி.சு.சதாசிவம். இவை தலித்தியல் பரவலாக உதவுகின்றன.

ஐ) தமிழ் தலித் இலக்கியத்திற்கு பெருமளவில் உதவுபவை சிறு பத்திரிகைகளேயாகும். பெரிய நடுஏடுகளான சுபமங்களாவும், புதியபார்வையும் தலித் படைப்புகளை அவ்வப்போது வெளியிடுகின்றன. மற்றபடி நிகழ், முன்றில் கவிதாசரண், களம்புதிது, கிழக்கு, அரங்கேற்றம், நிறப்பிரிகை ஆகிய இதழ்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

ஒ) இவற்றில் நிறப்பிரிகையின் பங்களிப்பை தனியே பார்க்கவேண்டியுள்ளது. தொடக்கத்திலேயே எங்ஙனம் தனது களப்பணிகளின் மூலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடையிலான முரண்பாடுகளை களைய ஒரு நியாயமான நடுவாதியாக (Middle Man) அது இருந்தது என்பதை விளக்கியுள்ளேன். தலித் பண்பாடு குறித்து மட்டுமல்ல.. தலித் அரசியல் குறித்தும் முழுமையான அக்கறையுடன் சிறுபத்திரிகையாளர்களை வழிநடத்த நிறப்பிரிகையின் தலைமை தேவைப்படுகிறது என்று கூட சொல்லலாம். தலித் இலக்கிய சிறப்பிதழ் ஒன்றையும் வெளியிட்டு இதுபோன்ற முயற்சிகளுக்கு முன்மாதிரியாகவும் இருக்கிறது நிறப்பிரிகை.

ஓ) தலித் இலக்கியம் குறித்த கட்டுரைகள் விவாதங்கள் கவிதைகள் கதைகளென தனது நியாயமான பங்களிப்பை வழங்கி வரும் இன்னொரு சிற்றிதழ் நிகழ் ஆகும்.

## VII

அ) மராத்திய தலித் சாகித்யா தலித் விடுதலை அரசியலோடு தீவிர தொடர்புடையது என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். தலித் சாஹித்யாவின் இலக்கிய படைப்பாளிகள் தான் பிறகு தலித் பாந்தர் (தலித் சிறுத்தைகள்) அமைப்பை 1972-ல் அமைத்தனர். நாம்தேவ் தசால், அர்ஜுன்டாங்ளே, ஜே.டி.பவார் போன்ற தலித் பாந்தர் நிறுவனர்கள் யாவரும் படைப்பாளிகளே யாவர்.

ஆ) தமிழ் தலித் இலக்கியமும் தலித் விடுதலை இயக்கங்களுடன் தீவிர தொடர்பு உள்ளதாக இருக்கவேண்டும். 1991-ல் உருவாக்கப்பட்ட தலித் பண்பாட்டுப்பேரவை, ஒருங்கிணைக்கின்ற தலித் விடுதலை இயக்கம் போன்றவை தலித் விடுதலை இயக்கங்களாகும். இவற்றோடு சேர்ந்து தலித் இலக்கியம் விளங்கவேண்டியுள்ளது. அது காலத்தேவையாகும். அதற்கு தலித் இயக்கியம் தனது தனித்தன்மையை தக்கவைத்துக் கொண்டாகவேண்டும்.

இ) அவ்வாறில்லாமல் பிரதிகளை லட்சக்கணக்கில் உருவாக்கிட வல்லவர்களான மேல்சாதி இலக்கியவாதிகள் தலித் இலக்கிய அரங்கையும் கைபற்ற முயன்று வருகிறார்கள். தலித் இலக்கியத்தை தலித்துகள்தான் எழுதவேண்டுமா என்றெல்லாம் கேள்விகள்

படிப்பகம்

விஷமத்தனமாக அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. பிராமண தலித், வேளாள தலித் என்று பேசுகிறவர்கள் உண்டு.

ஈ) தீட்டை ஏற்படுத்துவதாகக் கருதப்படும் சாதிகளை சேர்ந்தவர்கள்.... எவரது பிறப்பு - இறப்பு நிகழ்வுகளில் பிராமணர்களும் மற்றவர்களும் கலந்து கொள்ள மறுக்கிறார்களோ... பொது சாலைகள், குளங்கள், பள்ளிகள், கிணறுகளை தொடுவது தீட்டு என்று யார் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்களோ; யாருடைய கைகளால் தண்ணீர் குடிப்பதை சாதி இந்து மறுக்கிறானோ.... எந்த கீழ்சாதியின் படித்தவர்களை தங்களுக்கு சமமானவர்களாக நடத்த படித்த சாதி இந்து மறுக்கிறானோ; எந்த சாதியின் மக்கள் தங்களது பெயருக்கு பின்னே சேர்க்கவும் கேவலமான சாதிப்பெயரை தாங்கியவர்களோ அவர்கள்.. அம்மக்களின் அவலங்களை தாங்கிய இலக்கியமே தலித் இலக்கியம். பொங்கி எழுகிற எரிமலை போல தலித்துகள் தங்களது சொந்த அடையாளங்களை இலக்கியமாக்குவர். தலித் விடுதலைக்கு அந்த இலக்கியமே தளமாக அமைய முடியும். அதை படைக்க சகல நியாயங்களும் படைத்தவர்கள் அவர்களேயாவர். ஆண்டாண்டு காலமாக மின்சார கம்பிக்கும் விஷத் தண்ணீருக்கும் பஞ்சாயத்து சாட்டைக்கும் பலியானவனின் இலக்கியத்தை படைக்கும் நியாயமான சுதந்திரம் அவனுக்கே வழங்கப்படவேண்டும். அவ்வாறின்றி ஜோடனைகளிலும் அழகுபடுத்தலிலும் வல்ல அலங்கார எழுத்து மேதாவிகள் எழுதும் தலித் சம்பந்தமான கதைகள் கால வெள்ளத்தில் அழிந்து போகுமெனினும் அழகு சொட்டசொட்ட எழுதுதலே இலக்கியம் என்று தலித் எழுத்தாளர்களையும் நம்ப வைக்கும் பிரதிகளை ஆயிரக்கணக்கில் பெருக்கி விடுகிற மேல் சாதி எழுத்தாளர்கள் வெற்றியடைவார்களேயானால் தமிழிலக்கியத்திடமிருந்து தலித்தை மீட்பதே பெரும் போராட்டமாகிவிடும் என்பது திண்ணம்.

உ) தலித் இலக்கியம் முடைநாற்றம் வீசுகிற இலக்கியம். சாக்கடையை சுத்தமாக்கும்போது வரும் நாற்றமும்.... கழிவறைகளை கிளரும்போது வரும் குமட்டவைக்கும் நெடியும் செத்த உயிர்களிலிருந்து வீசுகிற பிண நாற்றமும் அவைகளிலிருந்து வெளிவரும். கலகத்தை ரத்த ஓட்டமாக கொண்டிருக்கும் அவை இலக்கியம் குறித்த இதுவரையிலான அனைத்து ஜோடனைகளையும் கிழித்தெரியும். தங்களது பெரிய எழுத்தாளர்களையும் இலக்கிய புனிதர்களையும் இந்தப்புயலிலிருந்து காப்பாற்ற முடியாமல் பார்ப்பானீய இலக்கிய எஜமானர்கள் திணறிப்போய் வீழ்வார்கள்.

நாளை தலித் இலக்கியம் என்பது தமிழில் அதைநோக்கி நடைபோடும்-போடுகிறது

ஊ) தலித் இலக்கியம் என்பது என்ன? காலம் காலமாக ஒடுக்கப்பட்டு அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு இனத்தின் ஓலம் அது. தங்களது விடுதலைக்காக மண்ணின் உள்ளேயிருந்து எழும் விதையின் வீரியம் அது. அவ்விலக்கியப் படைப்புகளை வாசிக்கும் சாதி இந்துக்கள் அவமானங்களுக்கு உட்படுவர். ஆத்திரத்திற்கு உட்படுவர். எங்கே சென்று ஒளிந்து கொள்வது என்று திணறுவர். எல்லா திக்குகளிலிருந்தும் எழுகிற அந்த ஓலமும் விடுதலை கீதமும் தமிழ் இலக்கியத்தின் உண்மையான சாயலை உலகிற்கு காட்டும். அவ்விலக்கியத்தின் மூலம் எம் இனவிடுதலையை எம்மக்கள் எழுதுவர்.

padippakam

# பழந்தமிழ் இலக்கியங்கள்

## - இன்று நமக்குத் தேவையான பார்வை -

- யுகசிற்பி -

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமான பதினெண்மேல்கணக்கு, திருக்குறள், நாலடியார் போன்ற நீதி இலக்கியங்களான கீழ்க்கணக்கு ஆக முப்பத்தாறு நூல்கள் மட்டுமே பழந்தமிழ் இலக்கியங்கள் என்பர் பலர். சிலர் பின்னர் வந்த காப்பியங்கள், பத்தி இலக்கியங்களையும் சேர்த்துச் சொல்வர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் வள்ளலார் முதலாக, பாரதியார், பாரதிதாசன் போன்றோர் படைத்த இலக்கியங்களின் உள்ளீடாக அமைந்த புதிய சமுதாயப் பார்வையைக் கணக்கிலெடுத்துக் கொண்டால், இன்றைய சமுதாய - உலகச் சிக்கல்களுக்கு இடையே புத்துலகம் படைக்க விழையும் இலக்கியங்களைப் புதுத்தமிழ் இலக்கியங்கள் என்றும், மற்றவையனைத்தும் பழந்தமிழ் இலக்கியங்கள் என்றும் சொல்ல நேரும். ஆனால் காலம், அல்லது பொருள் அமைதி, அல்லது படைப்பின் நோக்கம் கருதி பழந்தமிழ், புதுத்தமிழ் இலக்கியங்கள் என்றொரு துல்லியமான வரையறையைச் செய்துவிட முடியாது. பழந்தமிழ் இலக்கியங்கள் என்று வரையறுக்கப்படுவனவற்றுள்ளும் இன்று நமக்குப் பயன்படுவன உண்டு. அதாவது புதிய உலகம் படைப்பதான இலக்(நோக்கிய)கியங்கள் அவற்றில் உண்டு.

மனித இனம் கடந்துவந்த பாதையை, அதன் நாகரிக வளர்ச்சியின் தடயங்களைத் திரும்பிப் பார்த்தால் பிரமிப்பு ஏற்படுகிறது. வேட்டையாடி வாழ்வதைவிட விவசாயம் சார்ந்து வாழ்வது-இனக்குழுக்களாக வாழ்தலைவிட ஒரு அரசனுக்குத் திறை செலுத்திக் குடிமக்களாக வாழ்வது-இடி, மின்னல், மழை, நெருப்பு என்று இயற்கை நிகழ்ச்சிகளைக் குறித்த யாகங்கள் செய்வதைவிட்டு, இயற்கைப் பொருட்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் மூலமான ஆற்றலைத் தெய்வமென வழிபடுவது கொலையும் களவும் வாழ்வதற்கான வழிகள் என்ற நிலையை விட்டு நீங்கிக் களவு ஒரு களங்கமாகவும் பிறர் பொருளை அபகரிப்போம் என நினைப்பதே நாகரிகமற்றதாகவும் கருதுவது காதல், வீரம், புகழ் போன்ற உணர்வுத்தளங்களில் வாழ்வதற்கு மாறாக, வெற்று ஆடம்பரங்கள், பொருட்களின் பெருக்கம் கேளிக்கைகளுக்குள் தம்மை இழப்பது-நால்வருணக் கோட்பாட்டுக்கும், நான்கு ஆஸ்ரம தர்மங்களுக்கும், மனுநீதிக்கும் கட்டுப் பட்டு வாழ்வதற்கு மாறாக - நாடு மொழி, இனங்கள் சார்ந்த வேற்றுமைகளுக்குள் ஒற்றுமை பேணி, கல்வி, தொழில், புதிய கலாச்சாரப் போக்குகள், அறிவியல் வளர்ச்சி, அரசியல் நெறிகளுக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொள்வது- சாதிச் சங்கங்கள், மதங்களுக்குள் தம்மை ஒடுக்கிக்கொண்டு வாழ்க்கையைத் தேடுவது மதமாற்றத்தால் சமூக அந்தஸ்தும் - வாழ்க்கை நிலையில் மேம்பாட்டையும் தேடுவது-இவைகளுக்கு நேர்மாறாக பிரபஞ்சமுழுமையைத் தரிசிக்கும் தியான நெறிக்குள் தம்மை இணைத்துக் கொண்டு உலக அமைதிக்காகவும் உலகையே ஒரு குடும்பமாக்கும் முயற்சியிலும் ஈடுபடுவது- ஆன்மா, கடவுள், ஆன்மீகப் பாதைகள் அனைத்தையும் கேலிக்குரிய போலிப்புரட்டுகள் எனத் தள்ளி, விடுதலை வேண்டி ஆயுதபாணிகளாகி ஆர்ப்பரிப்பது என்றிவ்வாறெல்லாம் கால வளர்ச்சியின் ஊடே மனித

நாகரீகமும், சிந்தனையும் செயற்பாடுகளும் மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி, நூற்றாண்டுகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் காட்டும் கடிகாரமுள் என்பதால் மேற்குறித்த மாற்றங்கள் அனைத்தும் இலக்கியவாதிகளின் கற்பனைகள், நிகழ்வுகளின் பதிவுகள், ஆசைகள், ஏக்கங்கள், போர்க்குரல்களின் வடிவில் பல்வேறு இலக்கியங்களாய்ப் பரிணமித்துள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களை இத்தகைய வரலாற்றுப் போக்குகளுக்கு இடையே ஊன்றிக் கவனித்தாலொழிய இன்றைக்கு அவை பயன்பாடற்றவைகளாகி விட வாய்ப்புக்கள் உள்ளன.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இயற்கைப்பொருட்களின் வருணனை இன்றைய மாந்தர்க்கும் கனவுகளே-காதல் வாழ்வினைப் படம்பிடிக்கும் இலக்கியக் காட்சிகளோ வெறும் கற்பனையே-புறப்பொருள் பகரும் வீரமும் இன்றைய போர்த்தளவாடங்கள் போர்முறைகளுக்குமுன் வெற்றுக் காகிதங்களே என்னும் அளவுக்குக் காலச் சக்கரம் சுழன்றுவிட்டது. காலத்தைப் பின்னோக்கி நகர்த்த முடியாது. நகர்த்தும் முயற்சியில் பழந்தமிழ் இலக்கியங்களைக் கையேந்தி மாபெரும் இயக்கங்கள் வரலாற்று வெள்ளத்தில் கரை சேரவில்லை. இன்று நமக்குத் தேவை முற்றிலும் புதிய பார்வை.

மணிமேகலை அட்சய பாத்திரத்தைப் பெற்றவுடன் ஆதிரை என்னும் பெருங்கற்புடைய பத்தினிப் பெண்ணிடம் பிச்சை ஏற்றாள். ஒரு பத்தினிப் பெண்ணிடம் முதன் முதலாகப் பிச்சை ஏற்கவேண்டுமென்பது நியதியாக இருந்தது. “பாரகமடங்கலும் பசிப்பிணியறுக” என்று சொல்லி அவளிட்ட உணவு பெருகிற்று. உலகம் பசிப் பிணியிலிருந்து 21-ஆம் நூற்றாண்டிலாவது விடுபடவேண்டும். இன்று நம்மிடம் இருப்பது பிச்சைப் பாத்திரம்தான்.

வரைமுறையற்ற பாலுறவு மயக்கம் பண்பட்ட வாழ்க்கையை அமைத்துக்கொள்ள உதவாது என்று சீவக சிந்தாமணி பறை சாற்றுகின்றது. இன்றைய சமுதாயம் இத்தகைய இலக்கியங்களிலிருந்து புதிய எழுச்சி பெறலாம். திரைப்படங்களும், தொலைக்காட்சியும், பத்திரிகைகளும் திட்டமிட்டுப் பரப்பும் பாலுணர்வு வெறித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

காலனி ஆதிக்கம் தன் கொடிய கரங்களை உலகின் பல்வேறு பகுதிகளிலும் நீக்கமற நீட்டியகாலம் வள்ளலார் காலம். போரும், பகையும் மலிந்து மக்கள் திசைத்தெரியாமல் போர்வெறியில் தம்மை இழந்து கொண்டிருந்தகாலம் வள்ளலார் காலம். தேசிய இனம் சார்ந்த மக்கள்தம் கலாச்சார வேர்களை இழக்க நேர்ந்தகாலம். வள்ளலாரின் பிள்ளைப்பெரு விண்ணப்பம், சிறு விண்ணப்பம் இவற்றைப் படித்தாராய்ந்தால் பழந்தமிழ் இலக்கியங்களில் பக்தி என்னும் முத்திரையிட்டு மூடிவிடமுடியாத உணர்ச்சிப் பெருக்கைக் காணலாம்.

“மறைமுடி வயங்கும் ஒரு தனித்தலைமை
வள்ளலே உலகரசாள் வோர்
உறை முடி வாள்கொண்டு ஒருவரையொருவர்
உயிர் அறச் செய்தனர் எனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோதெல்லாம்
தளர்ந்து உள்ளம் நடுங்கி நின்று அயர்ந்தேன்.”

padippakam

"கள்ளவாதனையைக் களைந்து அருள்நெறியைக்
காதலித்து ஒருமையால் கலந்தே
உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று
ஓங்குதல் என்று வந்துறுமோ
வள்ளலே அதுகண்ட அடியேன் உள்ளம்
மகிழ்தல் என்றோ"

என்றெல்லாம் போரையும் நாடுகளுக்கிடையிலான சுரண்டலையும் பொறாமல் அருள்நெறியை உலகப் பொது நெறியாக்க விழையும் வள்ளலார் பழந்தமிழ் இலக்கியங்களுக்குள்ளிருந்துதான் வருங்கால உலகுக்கான புதிய பார்வையைப் படைத்தார் புலால் மறுத்தல் என்று உடலில் தொடங்கி உலகம் முழுமையையும் நேசித்து ஒருலக ஆட்சியை நோக்கி விரியும் ஆன்மீகப் புரட்சியே அவருடையப் பாதை. இது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் புறநானூற்றுக்காட்சியின் பெருக்கம் அல்லவா?

"ஒன்றே குலம்; ஒருவனே தேவனும்" என்னும் திருமூலர் நெறியின் விரிவாக்கம் அல்லவா?

பழந்தமிழ் இலக்கியங்கள் வரலாற்று வளர்ச்சியின் ஊடே தூவிய விதைகள் ஏராளம். அவை முளைவிடவும், பூக்கவும், கனி தரவுமான பார்வையே இன்று நமக்குத்தேவை. தனி மனிதன் உடல் நலமும், மனவளமும் பெற்று நல்வாழ்வு பெறவும், உலக மானுடத்தை ஒரு குடும்பமாய்க்காணும், போருக்கும், அழிவுகளுக்கும், மூடத்தனங்களுக்கும் இடமற்ற மனிதகுல விடுதலைக்கும் வழியமைக்கும் கொள்கைகள் பழந்தமிழ் இலக்கியங்களில் படிந்துள்ளன. இவையே நமது தொன்மங்கள். வேடர்களோடும், விலங்குகளோடும் ஆன்மார்த்தமாய் உறவுகொள்ளும் ராமன், வேட்டுவப் பெண் வள்ளியை தன் துணைவியராக்கிக் கொள்ளும் முருகன் போன்ற பழந்தமிழ் இலக்கியக்காட்சிகளை சாதியவரம்புகளை உடைத்தெறிந்து புத்துலகம் படைக்கும் நோக்கத்தின் தொடக்கங்களாகவே நாம் பார்க்கவேண்டும்.

அட்சய பாத்திரக் கனவுகளையும், சத்திய தருமச் சாலைகளையும் படைத்தோம். பசிப்பிணியற்ற உலகம் இன்னும் அமையவில்லை. இனி என்ன செய்யப் போகிறோம்? என்ற கேள்வியே இன்று நமக்குத் தேவையான பார்வை.

களவியல் கண்டோம்-கற்பியல் படைத்தோம்-காமத்துப்பால்-காவியங்கள் செய்தோம். திருமண உறவுகள் இன்னும் கடைச்சரக்காகவே உள்ளன. மாற்றுவழி தேடுவதே இன்று நமக்குத் தேவையான பார்வை. ஏழேழு சொற்களுக்குள் அரசியலுக்கு இலக்கணம் சொன்னோம். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்று பின்னாளில் இலக்கியம் படைத்தோம். அல்லற்பட்டு ஆற்றாது அழும் கண்ணீரைத்தான் இன்றும் காண்கிறோம். இனி என்ன செய்யவேண்டும்? என்னும் சிந்தனைக்கு வந்து சேரும் தெளிவே பழந்தமிழ் இலக்கியங்களின் வழியே பயணிப்பவருக்கு – இன்று தேவையான பார்வை.

பழந்தமிழ் இலக்கியங்களில் தொடங்கிய மனிதவாழ்வின் கலைப்பயணம் நெடியது. இலக்குகளை அடைவது இன்று நமக்குத் தேவையானது.

படிப்பகம்

padippakam

# டங்கலும் தமிழும்

## ஞானி

உலக வங்கி அனைத்துலக நிதிநிறுவனம் ஆகியவற்றின் விதிப்புக்களை இந்திய அரசு ஏற்று செயல்பட்ட நாள் முதலே டங்கல் திட்டம் செயல்படத் தொடங்கியது என்று கூறிவிடலாம். இந்தியாவின் பொருளியல் அடிப்படையை முழுமுற்றான முதலாளிய அடிப்படைக்கான திட்டமாக மாற்றுகிறது டங்கல் திட்டம். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறைக்கு தாரை வார்க்கவேண்டும். முதலாளியப் பெருக்கத்திற்கான தடைகளை முற்றாக நீக்கவேண்டும். வங்கி, ஆயுள் காப்பீடு, மக்கள் தொடர்பு, போக்குவரத்து முதலிய சேவைத்துறைகள் உட்பட பெரும்பாலான நிறுவனங்களை தனியார் துறைக்குத் தரவேண்டும். பன்னாட்டு நிறுவனங்களை தங்குதடையில்லாமல் இந்தியாவிற்குள் அனுமதிக்கவேண்டும். இந்தியாவின் இயற்கை மற்றும் மக்கள் வளங்களை வேண்டுமளவு சுரண்டுவதற்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு உரிமை உண்டு. சுற்றுச் சூழல் மாசுப்படுவதை தடுக்க வேண்டியதில்லை. உள்நாட்டுத் தேவைகளுக்காக அல்லாமல் ஏற்றுமதித் தேவையை ஒட்டி வேளாண்மை முதலிய துறைகளில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அனைத்துலகச் சந்தையில் தேவைகளுக்காக இந்தியத் தொழில்கள் அமையவேண்டும். தோல் பதனிடும் தொழில்கள், சாயப்பட்டறைகள், இறால் பண்ணைகள், தேயிலை மற்றும் காபி உற்பத்தி முதலியவற்றின் தேவைகளுக்காக நிலமும் நீரும் நாசமாவதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மூலதனத்தின் ஆட்சிக்கு முழுமுற்றான உரிமை உண்டு. சோசலிசத்திற்கு இனி இடமில்லை. நவீன அறிவியலும் தொழில் நுட்பங்களும் தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர்களை வெளியேற்றத்தான் செய்யும். தொழிற்சங்க உரிமைகளைக் குறைக்கத்தான் வேண்டும். வேளாண்மை கல்வி முதலியவற்றுக்கான மானியங்களை ஒழித்துவிடவேண்டும்.

இப்படி செல்லுகிறது டங்கல் திட்டம், காட் உடன்படிக்கை. இந்திய அரசு இருகரம் நீட்டி டங்கல் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறது. இவ்வாறு ஏற்றுக் கொள்வதன் மூலம் உலக அளவில் ஏகாதிபத்தியத்தின் மூலதனத்தின் ஆளுகைக்கு இந்திய அரசு தலைவணங்குகிறது. இந்திய மக்களை ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்துகிறது. இந்தியாவின் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கிறது. இந்திய மக்கள் தொகையில் இருபது சதம் மட்டும் போதும் என்கிறது. அறுபது சதம் மக்கள் இந்தியாவுக்குத் தேவை இல்லை. நகரங்களின் தேவைக்காக கிராமங்கள் அழியலாம். பம்பாய், டெல்லி முதலிய பெருநகரங்களின் தேவைக்காக சிறுநகரங்கள் நாசமாகலாம். வாஷிங்டன், இலண்டன் தேவைகளுக்காக பம்பாயும் நாசமாகலாம். அமெரிக்காவில் விளையும் கோதுமை மேலும் பலநாடுகளுக்குப் போதுமானது. இந்தியாவில் கோதுமை உற்பத்தி தேவையில்லை. நெல்லுக்குப் பதிலாக இறால் பண்ணைகள் அமைக்கலாம். அனைத்து கல்வி வாய்ப்புகளும் மேட்டுக் குடியினர்க்குத்தான் உரிமை உடையவை. நவீன மருத்துவ வசதிகளும் அவர்களுக்கே உரியவை. ஏழைகளுக்கு வாழ்வுரிமை இல்லை. சோசலிசம் பகற்கனவு. சோவியத் யூனியன் தகர்ந்த பிறகு சோசலிசம் பற்றிய சிந்தனை பிற்போக்குச் சிந்தனை. ஜனநாயகம் இந்தியாவைப் பொறுத்தவரை வேண்டாத வெற்று அலங்காரம்.

படிப்பகம்

padippakam

1995 முதற்கொண்டு காட் உடன்படிக்கை இந்தியாவில் தீவிரமாக செயல்படும். இந்தச் சூழலில் தமிழகத்திற்கு, தமிழ்மொழிக்கு என்ன நேரும் என்பது பற்றி இங்கு சிந்திக்கலாம். நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள் ஆண்டுக்காண்டு வேகமாக வளர்ச்சி பெறுவதோடு நுட்பங்களும் கூடுகின்றன. இதற்கு நிகரான முறையில் தமிழில் கலைச் சொற்களை உருவாக்க முடியாது. அனைத்துலகச் சமூகத்துடன் அறிவியல் தொழில் நுட்பத் துறையிலும் இந்தியாவை/தமிழகத்தை இணைக்கவேண்டும். அய்ரோப்பியரும் அமெரிக்கரும் இங்கு வந்து செல்ல தடை இருக்கக்கூடாது. ஆகவே அறிவியல், தொழில்நுட்பக் கல்வி தமிழில் தேவை இல்லை. சாத்தியமும் இல்லை. கல்விப் பயிற்சிக்காக அரசுசெலவு செய்யமுடியாது. இராணுவம், ஏவுகணைகள் என நிறைய செலவு செய்ய வேண்டிய சூழலில் கல்வித் துறையை தனியார்களிடம் மாற்றுவதுதான் அறிவுடைமை. முதலாளிகளுக்கு தமிழ் தேவையில்லை. ஆகவே கல்வி மற்றும் ஆய்வுத் துறைகளிலிருந்து தமிழ் நீக்கப்படும். மேட்டுக் குடியினர்க்குத்தான் கல்வி வாய்ப்புக்கள் கூடுதலாகக் கிடைக்கும் என்ற அடிப்படையில் தொழில் நிர்வாகம், அரசு நிர்வாகம், நீதி நிர்வாகம் முதலியவற்றில் ஆங்கிலத்திற்குத்தான் இடமுண்டு. இந்தியும் இந்த இடங்களில் வசதிக்கேற்றவாறு அமர்ந்து கொள்ளலாம். ஆக, பெருகிவரும் தனியார் துறைகளில் மற்றும் அரசுத் துறைகளிலிருந்து தமிழ் வெளியேறிவிட வேண்டும். தமிழில் திரைப்படங்கள், பொழுதுபோக்கு இதழ்கள் மற்றும் செய்தித்தாள்கள் கதைப்புத்தகங்கள், கவிதை நூல்கள் பொதுமக்களின் நுகர்வுக்காக இருந்தால் போதும். உயர்விடங்களில் தமிழுக்குத் தேவை இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள், உழவர்கள், கைவினைஞர்கள் பெண்கள் மத்தியில் தமிழ் 'உயிர்வாழும்'. உயர் மட்டங்களில் தமிழுக்கு வாழ்வில்லை. அறிவாளர் மற்றும் ஆய்வாளர்களின் மொழியாக தமிழ் இருக்கவேண்டியதில்லை. மேற்கத்திய கலைகள் மற்றும் நுட்பங்கள் தமிழின் வழியாக மக்களுக்குச் சேர வேண்டியதில்லை. தமிழில் நுட்பங்கள் சொல்லவேண்டியதில்லை. தமிழ் மொண்ணையாக. மொட்டையாக இருந்தால் போதும். அலங்காரமான மற்றும் ஆர்ப்பட்டமான மேடைத் தமிழுக்கு, சட்டசபை சண்டைகளுக்கு, தெருச் சண்டைகளுக்கு தமிழ்போதும்.

டங்கல் திட்டத்தால் தமிழ் நாட்டுக்கு என்ன நேரும்? மூலதனத்தின் ஆட்சிக்கு இந்தியாவை மைய அரசு அடிமைப்படுத்தும் சூழலில், தமிழ்நாட்டின் தன்னுரிமைக்கு இடமில்லை. ஏகாதிபத்தியம் இந்திய அரசின் மூலம் தமிழ் நாட்டின் தன்னுரிமையை ஒடுக்கிவைக்கும். பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனத்தேவைக்காக தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை, தமிழக அரசு ஒப்படைக்க வேண்டும். எதிர்த்து நிற்பவர் யாவராயினும் அவர்கள் ஒழிக்கப்படுவார்கள். கலவரங்கள் கடுமையாக ஒடுக்கப்படும்.

தொன்மையும் இலக்கணவளமும் இலக்கிய மேன்மையும் கொண்டிருக்கும் காரணத்தால் தமிழ் இன்றுவரை சமஸ்க்கிருதத்திற்கோ, இந்திக்கோ கட்டுப்படாமல் திமிறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தமிழின் ஆற்றலை ஒடுக்கியாக வேண்டும். தமிழ்மொழி சார்ந்த இயக்கங்கள் மெல்ல மெல்ல நசுக்கப்படும். இந்தியின் ஆக்கம் கருதியும், ஆங்கிலம் வழியே செயல்படும் ஏகாதிபத்தியத்தின் தேவையை ஒட்டியும், மையஅரசு இதை மகிழ்ச்சியோடு செய்யும். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு திராவிட இயக்கங்கள் எப்பொழுதுமே இடையூறு செய்கின்றன. தமிழை தனக்குயிரெனக் கூறும் திராவிட இயக்கங்களை ஒடுக்கியாக வேண்டும். தமிழகத்திற்குள் வந்த அந்நியர்கள் பற்றி தமிழ்

படிப்பகம்

இனம் தொடர்ந்து கேள்வி எழுப்புகிறது. வடவர்களை வெளியேற்றக் கோருகிறது. கொள்ளையடிக்கும் முதலாளிகளும் அதிகாரிகளும் தமிழர்கள்தானா என்று கேள்வி எழுப்புகிறது. பண்டைத் தமிழ் நிலம் பற்றிய கனவுகள் தமிழ் மக்களிடம் ஓய்வு ஒழிவு இல்லாமல் எழுகின்றன. தமிழர்களின் இன உணர்வை ஒழித்தாக வேண்டும். உள்ளிருந்தே இதைச் செய்யமுடியும். சில கட்சிகள் இந்தக் கடமையை முழுமூச்சுடன் நிறைவேற்றும். தேவைப்படும் பொழுதெல்லாம் மைய அரசு நேரிடையாக தலையிடலாம். இராணுவமும் வந்து செல்லலாம். தமிழர்கள், தமிழ் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு செல்லும் திசையறியாது அகதிகளாகி அலையட்டும். காவிரி, வைகை, பவானி முதலிய ஆறுகளையும், தஞ்சையின் வயல்நிலங்களையும், உதகை கொடைக்கானல் முதலிய மலைச்சாரல்களையும் நாற அடித்து நாசமாக்கிய பிறகு, தமிழ் நிலக்கனவு என்று எவை மிஞ்சியிருக்கமுடியும்? மத்தியதர வர்க்கப்படிப்பாளிகளின் சிந்தனையிலிருந்து தமிழை வெளியேற்றிய பிறகு தமிழின் பெருமை சொல்ல இங்கு யார் எஞ்சியிருப்பார்கள்! அமெரிக்கா, அய்ரோப்பா முதலிய நவீன நாகரிகங்களோடு, தமிழகத்தின் மத்தியதர படிப்பாளிகள் மற்றும் அறிவாளிகளை இழுத்துக்கட்டிய பிறகு, இவர்களின் நெஞ்சில் தமிழ்க்குருதி எங்கே கொப்பளிக்கும்? பணமும் அதிகாரமும் வாழ்வின் ஆதாரங்கள் என நிலைபெற்ற பிறகு இவர்களிடம் எந்த ஆன்மா மிஞ்சியிருக்கும்? தேவாரம், திருவாசகம், திருக்குறள், சிலப்பதிகாரம் என இவர்கள் எதற்காகப் பேச வேண்டும்?

மூலதனத்தின் தேவைகளை ஒட்டி அனைத்துச் சக்திகளும் செயல்படும் சூழலில் உழவர்கள், கைவினைஞர்கள் மற்றும் கிராமத்து மக்கள், வேளாண்மை, மற்றும் கைவினைத் தொழில்களில் எந்தப் பாரம்பரியத்தில் நிலை கொள்ள முடியும்? சுரண்டல் பல பத்துமடங்கு அதிகரிக்கின்ற அளவுக்கு, ஒடுக்குமுறைகளும் இவர்கள் மீது திணிக்கப்படும். மைய அரசின் மற்றும் முதலாளியத்தின் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைக் கொடுமைகள் தொடர்ந்து அதிகரிக்கும் சூழலில், பெண்களும், தலித் மக்களும் கடுமையான அடிமைத் தளைக்குள் இன்னும் அதிகமாகத் தள்ளப்படுவார்கள். வறுமையும், நோய்நொடிகளும், அறியாமையும், கோழைத் தனமும் பலமடங்கு அதிகரிக்கும். மக்களின் படைப்புத்திறன் அழியும். கலாச்சார உணர்வுகள் மங்கும். கிராமங்கள் நிறமிழக்கும். ஊழல் பெருகும். மதவாதிகளின் கொட்டங்கள் அதிகரிக்கும். பொழுதுபோக்கும், காமமும் போக்கிரித்தனங்களும் கொட்டமடிக்கும். எங்கும் வெடியோசைகள் கிளம்பும், விபத்துக்கள் அதிகரிக்கும். வாழ்வில் அச்சமும் சந்தேகங்களும் அதிகரிக்கும். மனித உறவுகள் நாசமாகும். கொள்ளைகள், தற்கொலைகள் கூடுதலாகும். தெருவில் செத்துக் கிடப்பவரைக் கண்டுகொள்ளாமல் கால் இடறாமல் நடக்க நேரிடும். தமிழை, தமிழ் இனத்தை, தமிழரின் தொன்மைக் காலத்தை தமிழரின் தனியாட்சியை நினைத்துப் பார்க்க நெஞ்சம் நடுங்கும்.

இவையெல்லாம் அடுத்த 25, 50 ஆண்டுகளில் முற்றாக நிறைவேறும். பணம், ஆட்சியதிகாரம் என்ற இலக்குகள் மீதே கண்வைத்து தமிழினத்தலைவர்கள் செயல்படுவார்கள் என்றால், தற்பெருமை, அலங்காரம், ஆரவாரம், இன்பவாழ்வு என்ற இலக்குகளிலேயே மனம் புதைத்து அறிவாளிகளும் படிப்பாளிகளும் செயல்படுவார்கள் என்றால், தமிழரின் நிலம், இயற்கை வேளாண்மை பொருளியல் முதலியவை பற்றிய சிந்தனை இல்லாமல் தமிழின் மேன்மை, தொன்மை, இலக்கியப் பெருமை

padippakam

என்பனவற்றிலேயே தம் சிந்தனைகளை முடக்கி, தமிழ்க்கல்வியாளர்களும், பட்டிமன்ற வீரர்களும் செயல்படுவார்கள் என்றால் இறுதியில் எல்லா அதிகாரமும் மக்களுக்கே என்ற கொள்கையில் உறுதி குலைந்து, அலங்கரிக்கப்பட்ட அதிகார பீடங்களில் தம்மை அமர்த்திக் கொள்ளவே தமிழின அரசியல்வாதிகள் தொடர்ந்து செயல்படுவார்கள் என்றால், நவீன அறிவியலுக்கும் தொழில் நுட்பங்களுக்கும் தம்மை இழந்து கணிப்பொறிகளும், கலைச்சொல் அகர முதலிகளும் தமிழைக் காப்பாற்றுமென்று அவிவியலாளர்கள் சிந்திப்பார்கள் என்றால், தமிழன் தொல் மரபுகளை உடைத்து நொறுக்கி, தூசாக்கி காற்றில் பறக்க விடுவதையே தம் கடமை என திறனாய்வாளர்கள் தொடர்ந்து செயல்படுவார்கள் என்றால், டங்கல் திட்டம் தீவிரமாக செயல்படும் அடுத்த நூற்றாண்டின் இறுதிக்குள் தமிழ் அழியும். தமிழினம் என்ற ஒன்று வரலாற்றிலிருந்து வெளியேற்றப்படும். அருங்காட்சியகத்தில் ஒரு மூலையில் தமிழுக்கு இடம் கொடுக்கப்படும்.

இது இன்றைய சூழல். தமிழினம் விழித்துக்கொள்ள வேண்டும். தமிழ் அறிஞர்கள், தமிழினத் தலைவர்கள் தமக்குள் நாறும் குருதியை வெளியேற்றிக்கொள்ள வேண்டும். தமிழனுக்கு வரலாற்றில் இது கடைசி வாய்ப்பு. டங்கல் உலகை அழிக்கும். அழித்து விட்டு தானும் அழியும். டங்கலிடமிருந்து உலகை மீட்பது மக்களின் கடமை. தமிழ் மக்களின் கடமை.

## முன்னேற்றம்

தொகுப்பு வியாதிகள்
ஒன்றன்பின் ஒன்றாய்
அடுத்தடுத்து அணிவகுப்பு நடத்தி
படுத்தி எடுக்கின்றன
விருப்பங்களும் இலக்குகளும்
எட்ட வழி புலப்படாததால்
புத்தம் புதியனவாய்
எட்டியே இருக்கின்றன
கனவுகள் பெருமூச்சு சூறாவளியில்
காணாமலேயே போய்விட்டன
நிகழ்கால நிஜ தளத்தில்
வேர் பதிய மறுக்கும் மனது
நெருக்கியடித்து, முண்டியடித்து
ஓடுவதுதான் எதை நோக்கி?

*-தி. கமலி-*

padippakam

# தமிழ் வளர்க்கும் வழி முறைகள்

## கவிக்குரிசில்: இரா. பெருமாள்

உயர்தனிச் செம்மொழி, ஆதியில் தோன்றிய மொழிகளில் முதல்மொழி, சிந்துவெளி நாகரீகம் கண்ட சீர்மிகு பைந்தமிழ், குமரிக் கண்டத்தில் கோலோச்சி குமரியாய் இன்றுவரை இருக்கும் கன்னிப்பூந்தமிழ் என்றெல்லாம் சிறப்புறப் பாராட்டப்படுகின்ற தமிழ், பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் கால நிலைக்கு ஏற்ப நிமிர்ந்து நின்று பெருமை சேர்க்கும் தமிழன் பெற்றியை யாரோ கூற வல்லார்!

ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவி நின்று கால வெள்ளத்தை வென்று,அன்னிய மொழிகளின் சூழ்ச்சியில் சிக்காமல் தன் தனித்தன்மையை "உயர்தனிச் செம்மொழி" என பறைசாற்றி வருவதும் கண்கூடு.

**"பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"** - என்பதற்கு இணங்க சுமார் 5,000 ஆண்டு காலம் குமரிக்கண்டம் என்ற கண்டத்திலே சுமார் 3,500 கிலோ மீட்டர் பரப்பளவில் சுமார் 49 நாடுகள், இன்றைய நாகரீகம் தோன்றி வளர்வதற்கு முன்பே தோன்றித் தழைத்துள்ளதை இலக்கியங்கள் சாற்றுகின்றன. எனில், தமிழர்கள் இத்தகைய அற்புதமான மனித நாகரீகம், சமூகநீதி, மனிதப் பண்பாடு, கலாச்சாரம், பொது நீதி, நூல்வகைப் பட்டியல் என்று பலவற்றை கண்டவர்கள் என்பதை யூகிக்க முடிகிறது.

அதனால்தான் முதல் மனிதன் "லெமோரியா கண்டத்திலிருந்து" பிறந்தவனென்றும், இந்த மனிதனே ஆதி மனிதனென்றும், அந்த ஆதிமனிதனே தமிழனென்றும், மொழி ஞாயிறு தேவநேய பாவாணர் அறுதியிட்டு, இறுதியாக உறுதிப்படுத்துகிறார். அங்கும் முதல் தமிழ்ச் சங்கம் வைத்து தமிழ் வளர்த்ததும் கூறுகிறார். அதுமட்டுமா? நம் குமரிக்கடல் கடல்கோள் கொண்ட பின்னர் இரண்டாம் தமிழ்ச்சங்கம் "தென் மதுரையில்" தோன்றியதும் தென் மதுரையும் கடல்கோள் கொண்ட பின்னர், "கபாடபுரம்" என்ற இடத்தில் கடைச் சங்கம் நிறுவி சுமார் 9,999 ஆண்டுகள் தமிழ் வளர்க்கப்பட்டதாகவும் கூறப்படுவதிலிருந்து இன்றைய தமிழின் தொன்மை தெள்ளெனத் தெரிகிறது அன்றோ?

பாண்டியர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த காலத்திலிருந்தே பல அரிய நூல்கள் தோன்றிய போதிலும் இந்த நூல்களுக்கு எல்லாம் முதன்மை இலக்கிய நூலாக விளங்குவது தொல்காப்பியமே எனலாம். அப்படிப்பட்ட தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றினைப் பற்றி முழுமையான இலக்கணத்தைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு நல்கியதெனினும், இத்தகைய சிறந்த இலக்கண நூல் எழுதுவதற்கு முன்பே பல மூலநூல்கள் இருக்கவேண்டுமல்லவா?

அப்படிப்பட்ட நூல்கள் வளர்ந்த காலம் எது என்றெல்லாம் வினாக்கள் தொடுப்பதற்கு இடமில்லாமல், தொல்காப்பியத்திலேயே, தொல்காப்பியம் தோன்றுவதற்கு

padippakam

முன்பே பல நூல்கள் இருந்தன என்பதற்குச் சான்றாக **"என்ப, என்மனார் புலவர்"** என்ற மேற்கோள்களைக் காட்டுவதிலிருந்து பல உண்மைகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இப்படி தொன்மைக்குத் தொன்மையாய் பழமைக்குப் பழமையாய் வளமைக்கு வளமையாய் வன்மைக்கு வன்மையாய் வானுயர உயர்ந்து வான்புகழ் கொண்ட தமிழன் இன்றைய நிலை என்ன வென்ற கேள்வியை **"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"** என்ற கனியன் பூங்குன்றனாரின் கருத்துக்கு ஒப்ப பல மொழிகளையும், பல மதங்களையும், பல நாடுகளையும் சார்ந்த மொழிகளோடு தமிழ் மொழியின் நிலை என்னவென்றும் ஒரு ஒப்பாய்வு செய்யும் போது **"தமிழினைத் தமிழனே மறந்தான், தன்னிலை மறந்தான், பிறமொழி ஆட்சியில் தன்னையே விற்றான்"** என்ற நிலையிலேயே இன்று தமிழ் தேயத் தொடங்கியதோ என்று கூட ஐயுறத் தோன்றுகிறது. கால வெள்ளத்தைக் கடந்து தனித்தன்மையோடு பூத்து நிற்கும் கன்னித் தமிழ் யாண்டும் நிலைத்திட தமிழ்நாடும் தமிழ் அறிஞரும் ஆற்ற வேண்டிய கடமை என்னவென்று ஒரு கேள்விக்களை தொடுக்கும்போது தான் தமிழை மேம்படுத்த சில வழிமுறைகளை நாம் பின்பற்றுவது சாலப் பொருத்தம் என்று காணமுடிகிறது. அந்த வழிமுறைகளை அரசும் மக்களும் ஏற்றுப் போற்றுதல் கடமையாகும்.

## அவையாவனவாயின்

1. இன்றையத் தமிழக அரசு, தமிழையும் தமிழ் அறிஞர்களையும் பாராட்டுவதைத் தமிழை வளப்பதென்றே கருதலாம். அப்படித் தமிழை வளர்க்க பிறந்ததுதான் மூன்று கடை சங்கங்கள் என்று நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் தான் நவீன காலத்தில் பல விருதுகளைத் தமிழக அரசு அறிஞர்களைப் புரக்கும் நோக்கால் தோற்றுவித்துள்ளது. அவைகளில் சிலவேதான் ராஜராஜ சோழன் விருது, திரு.வி.க. விருது, பாரதிதாசன் விருது போன்றவையாகும். இந்த விருதுகள் போதுமா? இன்றைய தமிழ்நாடு விரிந்து பல்கி இருக்கின்ற காலத்திலே இந்த விருதுகள் குறைவே. இதனை அதிகப்படுத்துவதோடு சிறந்த அறிஞர்களிடையே சாதி, மத, கட்சி, பேதம் பார்க்காமல், மனுநீதி சோழன் நிலையிலே நின்று நெறிதவறாமல் விருதினை வழங்குவது முதல் கடமையாகும்.
2. ஆங்கில கல்வியின் மோகம் அதிகரித்திருக்கிற இந்நாளில் பட்டித் தொட்டிகளிலே எல்லாம் பைந்தமிழின் வாடை குறைந்து ஆங்கில பள்ளிக்கூடங்கள் எழுந்துள்ளமையை யாவரும் அறிவோம். இதற்கு முதல் காரணம் தமிழ் கற்றவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு இல்லாமையும், அப்படிப்பட்டவர்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்காமலி ருப்பதுமேயாகும். அதற்காகத் தமிழக அரசு தமிழ் பள்ளிகளை அதிகப்படுத்தவதோடு. சிறந்த தன்னலமற்ற ஆசிரியர்களை அமர்த்துவதும் முதன்மை பாட மொழியாக தமிழை முதன்மை படுத்துவதும் கடனாகும்.
3. **"ஞானபீட பரிசுகள்"** தமிழக அறிஞர்கள் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது என்ற கேள்வி எழும்போது தமிழ் அறிஞர் ஒருவருக்கு மாத்திரமே கிடைத்திருக்க, சுமார் 800 ஆண்டுகளுக்குப்பின் தோன்றிய கன்னட மொழிக்கு இந்த குறுகிய காலத்தில் 5 ஞானபீட பரிசுகள் கிடைத்திருக்கிறதென்றால் இதனைக் காழ்ப்புணர்ச்சி என்பதா? புதிய முயற்சிகள் தமிழில் வளரவில்லை என்பதா? என்று ஒப்பீடு செய்கிறபோது கன்னட மண்ணில்

padippakam

கன்னடம் அறிந்தவர்கள் எல்லாம் கன்னடர்கள். அவர்கள் பள்ளிகளிலே கல்லூரிகளிலே கன்னட மொழியைத் தாய் மொழியாக பயிற்றுவிப்பதும், கன்னடம் வளர எல்லா வகையிலும் உறுதுணையாக இருப்பதோடு தங்களால் ஆன இலக்கிய பணியும் காழ்ப்புணர்ச்சி இன்றி செவ்வனே செய்கிறார்கள் என்பதும் நாம் நினைவுகூற வேண்டும். ஆனால் தமிழ் நாட்டிலோ, தமிழ் அறிந்தவர்களெல்லாம் தமிழர்களென்று தமிழ் இலக்கியம் படித்த அறிஞர் பெருமக்கள் ஒப்புக் கொள்வதில்லை. தமிழை எந்த ஒரு தமிழனும் கற்று ஒண்டமிழுக்கு பெருமை சேர்க்கமுடியும் என்பதற்குப் பல சான்றுகளை நாம் பகரலாம். சங்க இலக்கியப் புலவர்கள், மொழிநூல் அறிஞர்கள் எந்த கல்லூரியில் படித்தார்கள்? அவர்கள் நூல்கள்தானே நமது வாழ்க்கை பாடம். ஆயின் தமிழ் ஆசிரியப் பெருமக்கள் **"தமிழ் வளர்ப்பதாகத் தம்மையே வளர்த்துக்கொள்ளும் சான்றோர்கள்"** இந்த நிலையிலிருந்து விடுபட்டு, எந்த துறையிலிருந்து சிறந்த தமிழ் நூல்கள் வருகிறது என்றாலும் அதை வரவேற்க தங்கள் மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த பொறுப்பு இன்று தமிழ்மொழி இலக்கியம் சான்ற சான்றோர்களையும் அரசையும் சாரும்.

4. ஆண்டாண்டு தோறும் **"தமிழ்நாடு பிறந்த தினத்தை"** ஒரு மாத காலம் சுதந்திரதினம் போல் விழா எடுத்து அந்நாட்களில் தமிழ் வளர்க்கும், தமிழ் பணிபுரியும் யாவரே ஆயினும் அன்னார்க்கு மாவட்டம் தோறும் சிறப்பு விழாக்கள் எடுத்துத் தமிழ் மொழியினைத் தமிழ்நாடு பிறந்த விழாவினை நினைவு கூறுவது தமிழரின் தலையான கடமைகளில் ஒன்றாகும்.

5. இன்றைய காலத்தில் பலர் பல்வகையாலும் தமிழுக்குத் தொண்டாற்றுகிறார்கள். பலர் பல அரிய இலக்கியங்களை, புதினங்களை, கவிதைகளை அன்னை தமிழுக்கு அணியாரம் செய்கிறார்கள். ஆயின் எல்லா நூல்களும் சிறந்த நூல்களா என்று ஆய்வு செய்ய ஒரு ஆய்வு குழுவினை அமைத்து பண்டை தமிழகம் கண்ட சங்கப் பலகை மீண்டும் தோன்ற ஆவன செய்ய வேண்டும்.

6. இற்றை நாளில் வாழ்வதே கடிதெனும் கொடூர நாளில் வயிற்றுப் போராட்டத்தில் வறுமை புரட்சி செய்கின்ற வசந்த நாளில் வயிற்றைப் பார்ப்பதா தமிழை வளர்ப்பதா என்ற கேள்விக்கு இலக்காகி அநேக தமிழ் அறிஞர்கள் தமிழ் வளர்க்க தயாராக இருந்தாலும் போதிய அரசு நிதி உதவி இன்மையால் தங்களுடைய அரிய நூல்களை வெளிக்கொணர முடியாத நிலையில் வாடுகின்றார்கள். அப்படிப்பட்ட தமிழ் அறிஞர்களின் நூல்களை 'செல்லரித்த நூல்களெல்லாம் புல்லரிக்கும் நூல்கள்' என்பதற்கு இணங்க, செல்லரிக்குமுன் அரசே நூல் வெளியீட்டுக் கழகம் அமைத்து சிறந்த நூல்களைத் தேர்வு செய்து மலிவு விலையில் அச்சிட்டு வெளிக்கொணர்வது தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

7. சுதந்திர போராட்டத்திற்காகத் தியாகம் செய்த செம்மல்களைத் தியாகிகள் என்று ஏற்றிப் போற்றி மாத உதவித்தொகையோடு, பல சலுகைகளை அன்னார்க்கு நடுவண அரசும் மாநில அரசுகளும் கொடுத்து வருவது போல் தமிழக அரசு தமிழ் பணிக்குத் தொண்டாற்றிய சிறந்த, தேர்ந்த அறிஞர் குடும்பங்களுக்கு மாத உதவித் தொகை கொடுப்பது சாலப் பொருந்தும். அதனால் உண்மையில் தமிழ் வளரும்.

8. தமிழ், தமிழக அரசில் கோலோச்சி இருக்க தமிழ் எல்லா துறைகளிலும் ஆட்சி மொழியாகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு **"தமிழறிஞர் ஆட்சி மொழி**

padippakam

**கண்காணிப்பு குழு"** அமைக்க வேண்டும். அக்குழு வட்ட, மாவட்டங்கள் தோறும் தமிழ் மொழி ஆட்சியில் உள்ளதா என்பதனை மாதந்தோறும் பரிசீலனை செய்து பரிந்துரை செய்வதோடு நிறைகுறைகளை அரசுக்குத் தயங்காமல் சுட்டிக்காட்டுவதோடு செயல் வடிவம் எடுக்க அரசு உதவி புரிய வேண்டும். இங்கு ஆட்சி மொழி ஒன்றே ஆட்சியில் நிலைக்க வேண்டும் என்பதன்றி, கட்சி குறுக்கீடுகள் என்ற சூழ்ச்சி வலையில் இந்தக் கண்காணிப்பு குழு விழக்கூடாது-வீழ்த்தப்படக்கூடாது என்பதில் அரசும், மக்களும் கண்காணிப்பாக இருக்க வேண்டும்.

9. தமிழக அறிஞர்களும் கட்சி சார்பற்ற நடுநிலையாக, அதே சமயத்தில் மொழி உணர்வு உள்ள **"சான்றோர் குழுவாக"** நின்று தமிழக அரசும் நடுவண அரசும் மக்களும் தண்டமிழுக்குக் கேடு இழைக்கின்ற காலை **"சூல் கொண்ட மேகம் தன்னை சூழ்ந்திடும் சூறாவளிபோல்"** மாறி மாறி வரிப்புலியெனப் பாய்ந்து தமிழை வளர்க்க தங்களை அர்பணித்துக்கொள்ள வேண்டும்.

10. முன்னேறி வருகின்ற விஞ்ஞான உலகத்தில் தமிழுக்கென்றே தங்களை ஈடு கொடுக்க முடியாத கால கட்டத்தில் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் முழுமையாக கவனம் செலுத்த முடியாத இயந்திர உலகத்தில் தொலை காட்சியிலேயே முழுமையாக கவனம் செலுத்துகின்ற மக்கள் தமிழை எங்கே வளர்க்கக் கூடும்? எனவே, தொலை காட்சியில் வருகின்ற தமிழ் கூட தமிழர் கைக்கு மாற வேண்டும். இதற்குத் தூயத் தமிழே தொலை காட்சியில் வரவேண்டுமென்றோ, சங்கக்கால நூல்கள் போல் கருத்தாழமும் பொருளாழமும் இருப்பது போல் பொருள் புரியா புலவர் மொழியாக தொலை காட்சியில் வர வேண்டுமென்றோ விழையவில்லை. மக்களுக்கு எளிதில் பொருள் புரியும்படியும் கூடுமானவரை தமிழின் வேர் சொற்கள் வேரற்று போகாமல் பார்த்துக் கொண்டு, இதன் பண்பாட்டை வளர்த்துக் கொள்வது இதன் அடிப்படை காரணமாகும். அதோடு மக்கள் எளிதில் எழுத படிக்க புதுமுறைகளை நன்னூல் கூறியது போல். **"பழையன கழிதலும் புதியன புகுதலும்......."** என்பதற்கு இணங்க புதுமைக்குரிய இடத்தைக் கொடுத்து உயர் தமிழுக்கு உயரிய எல்லா முறைகளிலும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

11. இப்படி மேலே குறிப்பிட்ட சில செய்திகளோடு எங்கெங்கு தமிழர்கள் வாழ்கிறார்களோ அவர்கள் கூட தமிழுக்கு எல்லா வகையாலும் தமிழ் பணி புரிந்திருப்பின் அதற்கென்றே சிறப்பு விருதினை ஆண்டுதோறும் கொடுத்துச் சிறப்பு செய்வது சாலப் பொருத்தமாகும்.

12. எந்த நாட்டிலும் எந்த மாநிலத்திலும் தமிழன் வாழ்ந்தாலும் அவரின் நூல்களைத் தமிழக நூல் நிலையங்களில் வாங்க அரசு ஆவன செய்ய உரிய நடைமுறை திட்டங்களை விருப்பத்தோடு கொடுத்தும், தொலை காட்சியிலும், வானொலி நிலையங்களிலும் உரிய இடத்தைக் கொடுத்தும். தமிழ் வளர்க்கும் பெற்றியைப் பெருமைப்படுத்த வேண்டும்.

13. அண்மை காலத்தில் தமிழக அறிஞர்கள்தான் தமிழ் அறிஞர்களென்றும், அன்னாருக்கு அரசும், பிற நாடுகளும் முதன்மை கொடுப்பதும் சரியே ஆயினும், பிற மாநிலங்களிலும், நாடுகளிலும் வாழுகின்ற சிறந்த தமிழ் அறிஞர்களையும், தமிழ் அறிஞர்கள் என்றே கருதி அவர்களுக்கும் உரிய இடத்தை கொடுக்க வேண்டும். உதாரணமாக தமிழ் சான்றோர்கள் சொற்பொழிவு என்றால் தமிழக பல்கலைக் கழக பேராசிரியர்களையே அழைத்துப் பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் சொற்பொழிவு செய்கிறார்களேயன்றி,

padippakam

போராற்றலைப் பாராட்டி இடைக்குன்றூர்கிழார், கல்லாடனார் போன்ற புலவர்கள் பாடியிருக்க, அவ்வரசனின் பெருமதிப்புக்குரிய கவிஞர், அப்போருக்குப்பின் பலகாலம் காத்திருந்து, வாழ்க்கையின் மதிப்புக்களைக் காஞ்சித் திணையின் வாயிலாக அவனுக்கு அறிவுறுத்துகின்றார். இங்கு மருதனார், 'நிலையாமை' என்னும் கருத்தைக் காலத்தின் அளவில் கொள்ளாமல், மதிப்புக்களின் அடிப்படையில், 'நீ மெய்யுணர்ந்து நிலை பெற்றிருக்க வேண்டு' மென்று கூறுவது, அதாவது, போர்த்தொழிலல்லாமல், நல்லன ஓம்பி, அவன் வரலாற்றில் இடம்பெற வேண்டுமென்பது ஒரு புதிய கண்ணோட்டம். நிகழ்கால இன்பங்களை நீக்கி, வருங்கால நிலைபேற்றை மட்டும் அவன் மனத்தில் கொள்ள வேண்டுமென்று அவர் கூறவில்லை; 'இலங்கிழை மகளிர் பொன் கலந்தேந்திய மனங்கமழ் தேறல் மடுப்ப'தோடு மட்டுமன்றி, அவன் இறுதிப் பொருள் தேர்ந்து பற்றற்றவனாய் வாழ்தல் வேண்டுமென்று வாழ்த்துகிறார். வரைவின் மகளிர் மாயப் பொய் முயக்கும் செயலும் இச்செய்யுளில் கடுமையாக விமர்ச்சிக்கப்படுவதும் சங்க காலத்தை ஒட்டியெழுந்த நீதி நூல்களுக்கு அடிகோலின என்று கூறலாம்.

சங்க காலத்துச் செய்யுட்களில் கணியன் பூங்குன்றனார் குரலும் தனித்து ஒலிக்கின்றது. சாதல் ஒரு செய்தியன்று; ஆனால் சாதலை முன் நிறுத்தி, இறப்பதற்குள் வாழ்க்கையைப் பற்றி நாம் கொள்ளவேண்டிய கோட்பாட்டை உளவியல் மனப்பாங்கில் அவர் எடுத்துக் கூறியிருப்பது, அடுத்து வருங்காலத்துக்கு முன்னறிவிப்பாயிருக்கிறது. நீதி நூல்கள் காலம், களப்பிரர் காலத்தில் ஏற்பட்ட சமூக மதிப்புக்களின் நசிவு காரணமாக உண்டான எதிர்விளைவு என்று கூறப்படுகிறது. களப்பிரர் காலத்தைப் பற்றி உறுதியான வரலாற்று முடிவுகள் இருப்பனவாகத் தெரியவில்லை. ஆனால் நீதி நூல்களைப் படிக்கும்போது, சங்க கால வாழ்க்கை முறைமைக்கு எதிர்க்குரல் ஒலிப்பதுபோல் நமக்குப் படுகிறது. கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், பரத்தமை விலக்கல் போன்ற கருத்துக்கள், சங்க காலத்தில் பரவலாக அறியப்பட்டிருந்த, நிகழ்கால சிற்றின்ப வாழ்க்கை நெறிப் (Epiurean way of Life) பாதையைக் கண்டிப்பன போல் தெரிகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இக்குரல் ஓங்கி ஒலிக்கக் காண்கின்றோம்.

நீதி நூல்களில் பெரும்பான்மையானவை சமண, பௌத்த சமயச் சார்புடையன. இலக்கியத்தைக் கலை வடிவமாக அர்த்தப்படுத்திக் காட்டும் அழகுணர்ச்சி இந்நூல்களில் (திருக்குறளைத் தவிர) இல்லை என்ற காரணத்தால், உலகையும், உலகை ஆக்கியவனையும் அழகுணர்ச்சியின் அடிநாதமாகிய இசையாகக் கண்டு, இவ்வுலக வாழ்க்கையின்பால் ஈடுபாட்டையுணர்த்தும் பக்தி நூல்கள் பல்கிப் பெருகின. திருநாவுக்கரசர் ஆடலரசனின் நடனத்தை என்றும் கண்டு ரசிக்க 'மனிதப் பிறவி' வேண்டுகிறார். தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருவரங்கத்துப் பெருமானின் அழகில் ஈடுபடுவதைக் காட்டிலும், இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெரிதன்று' என்று கூறுகிறார். ஆழ்வார்கள், நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தும், யாக்கை நிலையாமையை வற்புறுத்திய நீதி நூல்களின் எதிர் விளைவு என்று கூறலாம். இந்தக் காலத்தில்தான் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊரும் வாழ்க்கைக்குப் பொருள் கற்பிக்கும் முக்கிய இடமாக ஆகி, பாடல் பெற்ற தலங்கள் என்ற சிறப்பை அடைந்தன.

தன்னேரில்லாத் தலைவரைக் கதையின் மூல மாந்தராகக் கொண்டு எழுந்த காவியங்கள் இக்காலத்தை ஒட்டி எழுந்தன. சிலப்பதிகாரக் கால ஆராய்ச்சியில் நான்

படிப்பகம்

padippakam

இறங்க விரும்பவில்லை. ஆனால் சிலப்பதிகாரம் காவியம் என்ற அளவில் தனித்து ஒலிக்கிறது என்பது நான் கூற விரும்புகிறேன்.

எல்லா மனக் குறைகளையுமுடைய இயல்பான மனிதன் கோவலன். ஒரு மனிதனைத் தன்னேரில்லாத தலைவனாக்கி அவனைத் தெய்வ நிலைக்கு உணர்த்துவதைக் காட்டிலும், மனிதனை மனிதனாகவே கண்டு பாத்திரப் படைப்பில் வெற்றி காண்கிறார் இளங்கோவடிகள்.

பக்தி நூல்கள் தெய்வத்தை மனித நிலைக்குக் கொண்டு வந்து, அம்மனித நிலையிலிருந்துகொண்டு மற்றைய மனிதர்களை தெய்வமாக்கும் முயற்சியில் இறைவன் ஈடுபடுவதாகக் கூறின. இதன் அடிப்படையிலெழுந்த கம்ப ராமாயணத்தில், இராமனின் வெற்றியைச் சிறப்பித்துக் கொண்டாடும் கம்பன், 'மானுடம் வென்றதம்மா' என்று பாடுகிறார்.

கம்ப ராமாயணமும், சிலப்பதிகாரமும் இந்திய இலக்கியங்களில் முதல் முறையாகத் தோன்றிய 'குடிமக்கள் காப்பியம்' என்று கூறுவதில் தவறில்லை. அரசனை உடலாக்கி, மக்களை உயிராக்குகிறான் கம்பன்! எப்பேர்ப்பட்ட மிகச் சிறந்த அரசனாக இருந்தாலும், நியாயம் தவறினால், அவன் தண்டனைக்குரியவன் என்று வற்புறுத்துகிறது சிலப்பதிகாரம்.

வரலாற்று வழியாகப் பார்க்கும்போது, ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்துக்குச்செல்லும் இவ்விலக்கியப் பயணம், அந்தந்தக் காலத்தின் மதிப்புக்களுக்குட்பட்டும், உள்ளீடான தர்க்க நியாயங்களைப் பிறழாமலும் இருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

காவிய காலத்தை ஒட்டி எழுந்தவை உரை நூல்கள். பெரும்பான்மையான இலக்கண நூல்களும் இக்காலத்தில்தான் இயற்றப்பட்டன. தமிழ்நாட்டின் புறச் சூழ்நிலையைப் பார்க்கும்போது, வட நாட்டிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகளுக்குட்பட்ட காலம் இது என்று கூறலாம். இந்நிலையில் ஆக்கப்பூர்வமான படைப்புக்கள் தமிழில் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாமல் போயிற்று. ஆகவே, முன்னோர் கண்ட நூல்களுக்கு உரை கண்டவர்கள் அதிகமாக தோன்ற இதுவுமொரு காரணமாக இருக்கலாமென்று தோன்றுகிறது.

அரசியல் சூழ்நிலையின் காரணமாகப் படைப்பாளர்கள் தங்கள் உவகையையோ அல்லது கோபத்தையோ அறிவிப்பதின் மூலம் சமூகத்தில் தங்களை அடையாளம் காட்டிக்கொள்வது மேல்நாட்டு இயல்பு. அனால் இந்தியாவில் இத்தகைய அரசியல் பிரக்ஞை இருந்ததாக வரலாறே கிடையாது. தாங்கள் பிணைத்துக்கொண்ட அரசர்களின் வெற்றியைப் பாராட்டிப் பாடிய கவிஞர்கள்தாம் உண்டே தவிர, தோல்வியடைந்த மன்னர்களின் நாட்டின் நிலைக்காக வருந்தி, ஆக்ரமிப்பு நடத்திய அரசனைக் கண்டித்துப் பாடிய புலவர்களே இல்லை என்று கூறலாம். ஆகவேதான், இடைக்காலத்தில் இஸ்லாமியப் படையெடுப்பைப் பற்றியோ அல்லது மேல்நாட்டுக்காரர்கள் நாட்டைக் கைக்கொண்டபோது, அதை எதிர்த்தோ பாரதி தோன்றியவரை எந்தக் கவிஞனும் முரண்பட்டு எதிர்க்குரல் எழுப்பவில்லை.

படிப்பகம்

padippakam

இக்கால கட்டத்தில், சமயம் சார்ந்த இலக்கியம், நடப்பு உலகத்திலிருந்து படைப்பாளிகள் தப்பித்துக்கொள்ள ஒருவகை சாதனமாகத்தான் இருந்திருக்கிறது. 'தப்பித்துக்கொள்ளுகிறோம்' என்பதைப் பற்றி அவர்களுக்கே பிரக்ஞை இருந்திருக்கிறதா என்றும் உறுதியாகக் கூறுவதற்கில்லை. ஆட்சி முறையைப் பற்றி அரசியல் நோக்கு அவர்களுக்கு அறவே இல்லை என்பதே இதற்குக் காரணம்.

சிற்றிலக்கியங்களும், சித்திரக்கவிகளும், தல புராணங்களும் உள்ளூர்ப் புரவலர்களை ஏற்றி அவர்தம் சுவைக்கேற்பப் பாடும் செய்யுட்களும் இக்காலத்தில் புற்றீசல்கள் போல் தோன்றின.

இச்சூழ்நிலையே பாரதியைத் தோற்றுவித்தது. ஓர் உண்மையான கலைஞன், அவன் பாரம்பரியப் பண்பாட்டுப் பிரக்ஞையோடு மட்டுமல்லாமல், அவனுடைய கல்வித்தரம், சமூகப் புறச் சூழ்நிலை பாதிப்பு ஆகியவற்றால் உருவாகிறான். அடிமைப்பட்டிருந்த பாரத நாடு, சமூகச் சிறுமைகள், மேல்நாட்டுக் கல்வி ஆகியவையே பாரதியை, 'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது போல் வந்த மாமணியாக' இலக்கிய உலகுக்கு அறிவித்தது.

நிகழில் தொடரும் எதிர்காலம் வரலாற்றுக் கட்டாயம். இது பாரதி யுகம். அவன் தோற்றம், எதிர்காலத்துக்குப் பாரதிதாசனைத் தந்தது. சமூகச் சிறுமைகளைச் சாடினார் பாவேந்தர்.

பாரதி செய்த கவிதைப் பரிசோதனைகளே புதுக்கவிதையின் தோற்றத்துக்கும் காரணம். அவராலும் சந்தத்தைப் புறக்கணிக்க முடியவில்லை. வசன கவிதையில் ஓர் உள்ளீடான லய ஒழுங்கு இருப்பதை நாம் பார்க்கிறோம். பிறகு வந்த புதுக் கவிதையாளர்கள் பரிசோதனை செய்வதற்கு பாரதியின் முயற்சிகள் ஊக்கம் அளித்தன.

நாவல், சிறுகதை, நாடகம் ஆகியவை மேல்நாட்டுத் தொடர்பினால் உருவானவை. முதல் மூன்று நாவல்களுக்குப் பிறகு பல ஆண்டுகள் வரை குறிப்பிடத்தக்க நாவல்கள் எழுதப்படவில்லை. வங்க மொழியில் பக்கிம் சந்திரருக்குப் பிறகும் நல்ல நாவல்களுக்கென்று ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி காணப்படுகிறது. ஆனால் தமிழில் முதல் மூன்று நாவல்களுக்குப் பிறகு துப்பறியும் புத்தகங்கள் தாம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

பிரபல இலக்கியத்தின் பிரதிநிதியாக கல்கியும், சிறுபான்மையோர் இலக்கியத்தின் பிரதிநிதியாகப் புதுமைப்பித்தனும் முப்பதுகளில் தோன்றினார்கள். இவ்வரலாற்று உண்மையின் தொடர்ச்சியாகத்தான் இன்றுவரை தமிழ் இலக்கியம் வளர்ந்து வந்திருக்கிறது.

நாளை எப்படி இருக்கும்?

இன்று எப்படி இருக்கிறது? தொடக்கக் காலத்திலிருந்தே நவீன தமிழ்ப் படைப்பிலக்கியத்துக்குக் குறிப்பாக, நாவலுக்கும், சிறுகதைக்கும், ஒரு கொள்கை உறுதிப்பாடோ அல்லது செய்வதென்ன என்றறிந்து செயல்படும் ஒரு பிரக்ஞையோ, ஒப்பீட்டு உணர்வில் சொல்ல வேண்டியவனவற்றைத் தேர்ந்தெடுக்கும் செயல்திறன் ஆற்றலோ இருந்தன என்று கூறுவதற்கில்லை.

படிப்பகம்

வெவ்வேறு வகையாக அமைந்திருந்த முதல் மூன்று தமிழ் நாவல்களில், அவற்றை எழுதிய ஆசிரியர்களின் அடி மனதில் இப்பிரக்ஞை, வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மங்கலாக ஒளி கூட்டும் நிலையில் இருந்திருக்கிறது என்று கூறலாம். காவிய மரபைப் பின்பற்றினார் வேதநாயகம் பிள்ளை; சமூகப் படப்பிடிப்பை யதார்த்தமாகச் செய்து காட்டும்போது, கலையுணர்வுக்கு முக்கிய இடம் தந்தார் ராஜம் அய்யர்; படைப்பாளிக்கும் சமூகப் பொறுப்பு இருக்கிறதென்று உணர்ந்து செயல்பட்டார் மாதவய்யர். ஆனால் இவர்கள் யாவருமே அவர்கள் காலத்திய மேல்நாட்டுப் படைப்பாசிரியர்களின் பாதிப்பினால் எழுதினார்களேயன்றி, இந்திய மண்ணுக்கே உரித்தான கலைப் படைப்புக்கென்றிருக்கும் கொள்கைகளை, மேல்நாட்டுப் படைப்பிலக்கிய மரபு வழி கோட்பாடுகளோடு ஒப்பிட்டு நோக்கிய அநுபவ வெளிப்பாட்டில் எழுதவில்லை. அவர்களுக்கு அத்தகைய ஒரு கொள்கைத் தீவிரம் இருந்திருந்தால், அவர்களை ஒட்டி ஒரு தொடர்ச்சி நிகழ்ந்திருக்கும். வங்க மொழி படைப்பாசிரியர்களான மைக்கேல் மது சூதன் தத், பங்கிம் சந்திரர் ஆகியோர் மேல்நாட்டு பாதிப்புணர்ந்து, இந்தியப் பண்பாட்டு கொள்கைகளோடு அதைப் பிணைக்கும் முயற்சியாகத் தங்கள் கொள்கைகளை முழுப் பிரக்ஞையோடு வகுத்துக் கொண்டார்கள் என்று சொல்வதற்கு இடமிருக்கிறது.

ஒவ்வொரு படைப்பாளிக்கும் ஒரு கொள்கை உறுதிப்பாடு தேவை. அவன் படைப்பு, அவன் கொண்டிருக்கும் கொள்கைகளுக்கு ஒரு முழுமையான சான்றாக இருக்கவேண்டுமென்ற தேவையுமில்லை. 'எது கலை?' என்று ஒரு விரிவான கட்டுரை எழுதியிருக்கும் டால்ஸ்டாயின் கருத்துக்களுக்கு இசைய அவருடைய பல படைப்புக்கள் இல்லை என்பதைச் சொல்லியாக வேண்டும். இதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் கலையைப் பற்றிய அவருடைய கொள்கையைக் கலைஞன் என்ற அவருடைய உள்ளீட்டுத் தோற்றமாகிய மனப் பரிமாணங்களினின்றும் பிரிக்க முடியாது. யோபகில்ஸ், யூரிபைட்ஸ், ஷேக்ஸ்பியர் ஆகிய எல்லாரையுமே சாடும் டால்ஸ்டாய், தம்முடைய கதைகளில் இரண்டைத்தான் கலைப் படைப்பாகத் தேர்ந்தெடுக்கிறார்.

டால்ஸ்டாய் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பீட்டை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் அவருடைய படைப்புக்களைப் படிக்கும்போது, அவருடைய கொள்கை உறுதிப்பாட்டின் அடிநாதம் நம் காதில் ஒலிக்காமலிருக்காது என்பதுதான் முக்கியமான செய்தி. ஆதாரமான கிறித்துவ மனத்தின் நிலைப்பாடு இது.

நம் மேல்நாட்டுக் கல்வியின் பாதிப்பினாலும், பாரம்பரியப் பண்பாட்டு நினைவின் எச்ச உணர்வினாலும், 'அங்குற்றேன் அல்லேன், இங்குற்றேன் அல்லேன்!' என்ற நிலையில், நிராத் செளத்ரி 'கூறுவதுபோல் பண்பாட்டு பறத்தை மகன்களாக' இருந்து வருகிறோம். இம்மனநிலை நம் எழுத்துக்களில் தெளிவாகத் தெரிகிறது.

ஆப்பிரிக்க எழுத்தாளர்களுக்கும் தொடக்கத்தில் இந்தப் பிரச்னை இருந்திருகிறது. மேபல் இம்ட் குடே என்கிற ஆப்பிரிக்கக் கவிஞர் பாடுகிறார்;

'இங்கே நாம் நிற்கிறோம்
இரண்டு பண்பாடுகளுக்கிடையே
அலைக்கழிக்கப்படும்
சிசுக்களைப் போல.

படிப்பகம்

இவ்விரு தலைக்கொள்ளி சமரஸம்
எரிச்சலூ ட்டுகிறது.
ஏதேனும் நிகழ வேண்டுமென்று காத்திருக்கிறோம்,
இருட்டில் மௌனமாக உரையாடும்
எங்களை கை தூக்கி விட
ஒரு கை தேவை.
ஆனால் எதுவுமில்லை இப்பொழுது!
ஆண்டவனே, எனக்கு களைப்பாக இருக்கிறது.
இத்திரிசங்கு நரகம் வேண்டாம்.
வேண்டவே வேண்டாம்'

இதே மனக் குழப்பந்தான் இன்றைய இந்திய எழுத்தாளன் முன் நிற்கும் பிரச்னை. மூடநம்பிக்கைகளும், மத்தியக் கால பிரபுத்வ மனப்போக்கும், ஜனநாயகத்தோடும், பகுத்தறிவோடும் போரிட்டுக் கொண்டிருப்பதை அவன் பார்க்கிறான். தொன்றுதொட்டு வரும் வாழ்க்கை மதிப்பீடுகளை இக்கால அணுகுமுறையில் பார்க்க வேண்டுமென்று அவன் முயலும்போது, பெரும்பான்மையோர் கல்வி வசதியற்றிருக்கும் இந்நிலையில், இக்கண்ணோட்டம், ஓர் ஆன்மீகச் சூன்யத்தை விளைவித்து விடுமோ என்ற அச்சம் அவனுக்கு ஏற்படுவது நியாயந்தான். தமிழ்நாட்டில் இந்த வருந்தத்தக்க நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே ஒரு படைப்பாளி, பழைமையோடு உணர்ச்சிப்பூர்வமான ஈடுபாடு கொள்ளாமல், இப்பழைமையில் பண்பாட்டுச் சாரத்தை நிகழ்காலத்தில் பலன் பெற எப்படிப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. தன்னுடைய எழுத்தின்மூலம் தன் பின்தங்கிய சமூகத்தை எவ்வளவு விரைவாக நவீன உலகத்தோடு தொடர்பு கொள்ளச் செய்யமுடியுமென்று ஒரு படைப்பாளி முயலும்போது, நவீன உலகத்துப் பிரச்னைகள் அவன்முன் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன. விஞ்ஞானமும், எந்திரத் தொழில் நுணுக்கமும் முன்னேற்றமடைந்த அளவுக்கு அரசியல் பெருநோக்கோ அல்லது மனித நேய அறக் கோட்பாடுகளோ முன்னேற்றம் அடையவில்லை. அரசியல், சமய, மொழி வேறுபாடுகள் குறுக்குச் சுவர்கள் எழுப்பி, விஞ்ஞான முன்னேற்றத்தினால் ஒன்றிணைந்திருக்க வேண்டிய மனித சமுதாயத்தைச் சின்னாபின்னமாக்கி விடுகின்றன. நாம் விண்வெளியில் கப்பல் விடக் கற்றுக்கொண்டிருக்கிறோம்; ஆனால் நம் அண்டை வீட்டுக்காரர் நம் மொழி பேசவில்லை என்பதற்காகவோ அல்லது நம் மதத்தைச் சார்ந்தவர் அல்லர் என்பதற்காகவோ சண்டையிடுகிறோம்.

இத்தகையச் சூழ்நிலையில் ஓர் இலக்கிய படைப்பாளியின் பொறுப்பு என்ன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சம காலத்திய இலக்கிய போக்குகளைப் பார்க்கும்போது, தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் எதிர்காலம் குறித்து அஞ்சவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

வெகு ஜனப் பத்திரிகைகள், இலக்கியத்தை மக்களுக்குத் தேவையான ஒரு நுகர்பொருளாகவேக் கருதுகின்றன. அப்பத்திரிகைகளில் வரும் சோப்பு, பவுடர் விளம்பரங்களுக்கும், சிறுகதைகளுக்கும் வேறுபாடு இருப்பதாகவே தெரியவில்லை. அப்பத்திரிகைகள் அப்பொருள்களை விற்பனைக்கு வழங்கும் நுகர்பொருள் அங்காடியாகவே இருந்துவருகின்றன.

padippakam

வெகு ஜனப் பத்திரிகைகளைப் பற்றி ஒரு தீவிர இலக்கியவாதி கவலைப்பட வேண்டியது அவசியந்தானா என்ற கேள்வி எழலாம். ஆனால், நல்ல இலக்கியமென்பது ஒரு உள்வட்டத்துக்குத்தான் உரியது என்பதை நான் என்றும் ஏற்றுக் கொண்டதேயில்லை. இத்தகைய உள்வட்ட, வெளிவட்டப் பாகுபாடுகள், மேல்நாட்டில், தொழிற் புரட்சிக்குப் பின் கல்வியற்ற ஜனநாயகம் படுத்த பிறகு, மேல்தட்டு வகுப்பினர் இழந்து கொண்டிருந்த தங்கள் சலுகைகளை நிலைநாட்டிக் கொள்ளும் ஆயுதமாகக் கலைத் துறைகளில் இப்பாகுபாடுகளை உருவாக்கினர் என்பது வரலாறு. படித்தவர்களும், பாமரர்களும் கண்டு ரசிக்கும் ஷேக்ஸ்பியர் நாடகங்களை எந்த வட்டத்தில் சேர்ப்பதென்பதுதான் பிரச்னை. ஆனால் டி.எஸ். எலியட், எஸ்ரா பவுன்ட், ஜேம்ஸ் ஜான்ஸ் போன்ற படைப்பாளிகள் உள்வட்டந்தான் என்று உறுதியாகக் கூறிவிடலாம்.

வட்டங்களைக் கடந்த நூல்கள் என்ற காரணத்தால் பாரதத்தையும், இராமாயணத்தையும் ஒதுக்கிவிட முடியுமா? ஷேக்ஸ்பியர் சார்ல்ஸ் டிக்கன்ஸ், டால்ஸ்டாய் போன்ற மேதைகளைப் புறக்கணித்து விட முடியுமா?

ஆகவே வெகுஜனப் பத்திரிகைகளில் நல்ல கதைகள் பிரசுரமாகக் கூடாது என்ற இலக்கிய கட்டாயம் ஏதுமில்லை. இந்தியாவில் இந்தச் சாபக்கேடு, தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் இருக்கிறதென்று தோன்றுகிறது. இதற்குக் காரணம் தமிழ் வாசகர்கள்தாம் என்று சொல்லிவிட முடியுமா? பத்திரிகை நடத்துகின்றவர்களைக் கேட்டால், வாசகர்களைச் சிந்திக்க வைக்காமலிருக்கும் பொருட்டு, மிகவும் கவனமாக அவர்கள் செயல்படக் காரணம், அப்படிச் சிந்திக்க வைக்கும் கதை ஒன்று அப்பத்திரிகைகளில் பிரசுரமாகி விட்டால், வாசகர் எண்ணிக்கை உடனே கணிசமாகக் குறைந்து விடுகின்றது என்பதுதானாம். இதனால் தமிழ் வாசகர்கள் கேட்பதைக் கொடுக்கின்றோமென்று, வாசகர்களை அவமானப்படுத்தி விடுகின்றார்கள். நம் எதிர்காலம் இப்படித்தானிருக்க வேண்டுமா என்று தமிழ் வாசகர்கள் யோசிக்க வேண்டும். 'மக்கள் எதற்குத் தகுதியானவர்களோ அந்த அரசாங்கத்தைப் பெறுகிறார்கள்' என்ற அரசியல் தத்துவம், இலக்கியத்துக்கும் பொருந்த வேண்டியது அவசியந்தானா என்று நாம் நம்மை நாமே கேட்டுக் கொள்வோம்.

மேல்நாடுகளில், படைப்பிலக்கியவாதிகள் யார், யார் கதை சொல்லுகின்றவர்கள், யார், யார் என்ற பாகுபாடு வெளிப்படையாக இருக்கிறது. 'சால் பெல்லோ' 'ஃபாக்னர்' போன்றவர்கள் ஒருதரம். ஆர்தர் ஹெய்லி போன்றவர்கள் வேறு வகையான தரம் என்ற வரையறைகள் இருந்து வருகின்றன. ஆனால் தமிழில் எழுதுகின்றவர்கள் அனைவருமே இலக்கியவாதிகள் என்று ஒட்டுமொத்தமான கொச்சை அபிப்பிராயம் பரவலாக இருப்பதைத் தவிர்க்க முடியவில்லை. இலக்கியத்தைத் தீர்மானம் செய்யும் 'விமர்சன அளவுகோல்கள்' நம்மிடம் வெகுஜன நோக்காக இல்லை என்பதுதான் இதற்குக் காரணம். விமர்சன அளவுகோல்கள் எனும்போது, சிச்சாட்ஸையும், லூகாஸையும் படித்துவிட்டுத்தான் இலக்கியங்களைப் படிக்க வேண்டுமென்று நாம் கூறவில்லை. மேல்நாடுகளில், தாங்கள் படிக்கவேண்டிய நூல் சால் பெல்லோ எழுதியதா அல்லது ஆர்தர் ஹெய்லி எழுதியதா என்ற தெளிந்த வெகுஜன நோக்குத்தான் விமர்சன அளவுகோலாகப் பயன்படுகிறது.

padippakam

இந்தப் பாகுபாட்டுணர்வு ஏற்பட்டுவிட்டால், நல்ல இலக்கியத்துக்கு ஒரு மரியாதை உருவாகும் என்பதில் தடையில்லை. எது இலக்கியம், எது இலக்கியமில்லை என்ற தெளிவே நல்ல இலக்கியம் உருவாவதற்கான வரவேற்கத்தக்க அறிகுறி.

தமிழில், இன்று நல்ல எழுத்தாளர் கூட, அவர்கள் நாவல்களையோ, சிறுகதைகளையோ, பத்திரிகைகளில் பிரசுரித்த பிறகுதான், நூல் வடிவத்தில் கொண்டுவரும் நிர்ப்பந்தத்திலிருக்கிறார்கள். இதற்குக் காரணங்களாகப் பத்திரிகைகளில் பிரசுரமானவற்றைத்தான் வெளியிடுவதென்று பதிப்பகத்தார் கொண்டிருக்கும் கொள்கை, எழுத்தாளர் பெறக்கூடிய அதிக சன்மானம் என்று பலவற்றைக் காட்டலாம். ஆனாலும் மலையாளத்திலும், ஹிந்தியிலும், மராத்தியிலும், வங்காளியிலும் எழுத்தாளர்கள் தனியாகவே நூல்களைத் தங்கள் படைப்பை பிரசுரிக்க முடிகின்றதென்றால், தமிழில் அது ஏன் இயலாமலிருக்கிறதென்று சிந்திக்கவேண்டும். இருப்பினும், இப்பொழுது சில தமிழ் படைப்பாளிகள் தங்கள் நூல்களைப் பத்திரிகை வாயிலாக அல்லாமல் தனியாகவே பிரசுரித்திருக்கிறார்கள். பிரசுரித்துக் கொண்டு வருகிறார்கள் என்பது எதிர்காலம் பற்றி நம்பிக்கையைத் தருகிறது. இவ்வாறு முழு நூல்களாகத் தனியாகப் பிரசுரமாகும் படைப்புக் கள், பத்திரிகைகளில் தொடர்களாக வரும் கதைகளை விட, தரத்தில் உயர்ந்திருக்கின்றன என்பது, முழு புத்தகங்களாக வெளியிடுவதின் அவசியத்தை உணர்த்துகின்றன.

தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் எதிர்காலம் சிறுகதையா, நாவலா, கவிதையா, நாடகமா என்றெல்லாம் ஆராய்வதில் பொருள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ‘சிறுகதை இறந்துவிட்டது’ என்று அமெரிக்க விமர்சகர்கள் ஐம்பதுகளில் கூறினார்கள். ஆனால் மறுபடியும் சிறுகதை ஆங்கில மொழியில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. நாவல் எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்று கணித்துக் கூறிய ஹென்றி ஜேம்ஸ் இன்றிருந்தால் அவருக்குப் பல அதிர்ச்சிகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ‘கவிதைதான் என்றும் செங்கோலோச்சும் படைப்பிலக்கிய சாம்ராஜ்யத்து அரசி’ என்று ஆடன் ஒரு சமயத்தில் கூறியிருப்பது போல், இக்கவிதை அரசி, காலத்துக்குத் தகுந்தாற்போல் தோற்றம் கொண்டு, முடி இழக்காமல் இன்னும் இருந்து வருகிறாள். எதிர்கால மேலை நாட்டு நாடகங்கள், ஆசிய ஆப்பிரிக்கத் தொன்மை நாடகங்கள் போல், நடப்பு வாழ்க்கை நிகழ்ச்சிகளினின்றும் பிரிக்க ஒண்ணாததாய் அமையும் என்று சிச்சார்ட் ஷெஷ்னர் போன்றவர்கள் கூறுகிறார்கள். ஆசிய நாடகங்கள் என்பதில் தமிழ்நாட்டுத் தொன்மை நாடக மரபும் அடங்கும்.

‘நாவல் என்பது கதை சொல்லவேண்டும்’ என்ற பாரஸ்டர் கொள்கை இன்று உலகமெங்கும் வலுவிழந்து வருகிறது. ‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நகர்ப்புறத்து நடுத்தர வகுப்பினர் படிப்பதற்கென்று ஒரு குறிப்பிட்ட வடிவம் ஏற்ற நாவல் அந்நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட புகைப்படக் கலையினின்றும் வேறுபடாமல் இருந்ததில் வியப்பேதுமில்லை’ என்கிறார் ராய் மக்முல்லன். இந்த வடிவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்தான் வர்ஜீனியா வுல்ஃப், ப்ரௌஸ்ட் போன்றவர்கள் எழுதினார்கள் என்பதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். நாவல் என்பது கதாநாயகர்கள் அல்லது கதாநாயகிகளின் படத் தொகுப்பல்ல என்ற காரணத்தினாலும், ‘எடுப்பு, தொகுப்பு, விடுப்பு’ என்ற அரிஸ்டாடிலியக் கொள்கை நவீன உலகில் காணும் வாழ்க்கை மதிப்பீடுகளுக்கும் பொருந்தி வராது என்பதாலும் நாவல் வடிவமைப்பில் புதிய புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. படைப்பிலக்கிய வடிவங்களை வகைப்படுத்தி

படிப்பகம்

padippakam

ஒவ்வொன்றையும் ஒரு பிரிவில் அடக்கியாகவேண்டுமென்ற விமர்சன நிர்ப்பந்தம் இன்று ஏதுமில்லை. நாவல் துறையிலேயே இது சாத்தியமில்லை. காமுவின் 'தி ஸ்டேரன்ஜர்' ஷாலிங்கரின் 'தி காட்சர் இன் தி ரை', முரியல் ஸ்பார்க்கின் 'மெமென்டோ மோரி', சால் பெல்லோவின் 'ஹெர் ஜாக்' போன்றவற்றை எந்த விமர்சன அளவுகோலை வைத்துக்கொண்டு வகைப்படுத்த இயலும்? கலைகள் இன்று தனித்தனியாகத் தங்களுக்கென்று சுயாட்சி வகுத்துக்கொள்ளவில்லை. நவீன ஓவியம், கவிதையைப் பாதிக்கின்றது. நாடகத்தின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. போலந்து நாடக இயக்குநர் பலர் ஓவியர்களாகத்தான் முதலில் கலைத்துறையில் இறங்கினர். விஷ்பான்ஸ்கி என்ற மிகச்சிறந்த நாடக ஆசிரியர், மிகச்சிறந்த ஓவியருமாகத்தான் இருந்தார். ஆகவே, கலைகள் இன்று தமக்குள் ஐக்கியக் குடியரசை நிறுவிக் கொண்டிருக்கின்றன என்று 'எலி ஃபார்' என்ற பிரஞ்சு கலை விமர்சகர் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானதென்று தோன்றுகிறது.

ஆனால் ஒன்று மட்டும் நாம் உறுதியாக மனதில் கொள்ளவேண்டும். எந்தக் கலை வடிவமும், எந்த மாற்றம் அதில் ஏற்பட்டாலும் சரி, அது அம்மண்ணின் பண்பாட்டு அடி மனத்தோடு இயைந்திருத்தல் வேண்டும். புறவடிவு வகையில் செய்யப்படும் பரிசோதனைகள்.... அதாவது வேறொரு பண்பாட்டுப் பாதிப்பினால் புறவடிவு வகையில் செய்யப்படும் பரிசோதனைகள். அதற்கென்று உள்ளீட்டுப் பண்பாட்டுத் தர்க்க நியாயம் ஏதுமில்லாத காரணத்தினால், வெறும் 'பரிசோதனை'களாகவே நின்று விடுகின்றன. ஜப்பானியர்களும், ஆப்பிரிக்க ஆசிரியர்களும் இவ்வகையில் வெற்றி அடைந்திருப்பதற்குக் காரணம் அவர்கள் செய்யும் 'பரிசோதனைகள்' அவர்களுடைய பண்பாட்டு அடிமனத்தோடு பொருந்திவிடுகிறது. சான்றாக, டானி ஜாக்கி ஜூனிச்சிரோ எழுதிய 'தி தின் ஸ்நோ' 'ஸோயிங்காவின்' நாடகங்கள் ஆகியவற்றைச் சொல்லலாம்.

தமிழில் 'பரிசோதனைகள்', 'பரிசோதனை'களுக்காகவே நிகழ்கின்றன. இன்றையப் பரிசோதனை நாளை வழக்காற்றில் பரவலாக வந்தாக வேண்டும். அப்படி ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், அக்குறை 'பரிசோதனை'களுடையதுதான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில், நாலாயிரப் பிரபந்தத்துக்கு உரை எழுதியவர்கள் நடையில் ஒரு 'பரிசோதனை' செய்தார்கள். அதுதான் மணிப்பிரவாள நடை. ஆனால் அது அருமையான சொற்சேர்க்கை என்று பாராட்டுக்குரியதாக இருந்தாலும், வழக்காற்றில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதுபோல்தான் சித்தரக் கவிகளும். இவையும் ஒரு வகையில் பார்க்கப் போனால், 'பரிசோதனை'கள்தாம். ஆனால் நூற்றுக்கணக்கான அளவில் தோற்றுவிக்கப்பட்ட கம்பனின் விருத்த வகைகள் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இதில் முதற் பரிசோதனை செய்தவர் என்ற பெருமை திருத்தக்க தேவருக்குத்தான் போகவேண்டும்.

தமிழ் படைப்பிலக்கியத்தின் எதிர்காலம் தமிழ்நாட்டு எல்லைக்கு அப்பால்தானிருக்கிறது போல் எனக்குத் தோன்றுகிறது. குறைந்த அளவாக இதற்கு 'இருமொழிச்சார்பு' தேவைதானோ என்று என்னைச் சிந்திக்கத் தூண்டுகிறது. நான் அண்மையில் படித்த சிறந்த படைப்புக்களை எழுதியவர்கள் கேரளத் தமிழர்கள் அல்லது வேறொரு மொழிப் பாதிப்புக்குட்பட்ட தமிழர்கள். தமிழில் அண்மைக் காலத்தில் தோன்றிய சிறந்த படைப்புக்கள் என்று பட்டியல் தயாரித்தால், அதில் கணிசமான படைப்புக்கள் தமிழ்நாட்டின் எல்லைக்கு அப்பால்தானிருக்குமென்று எனக்குப்படுகிறது.

படிப்பகம்

padippakam

ஆங்கிலத்திற்கு உரிய இடமில்லா நிலையைத் தவிர்க்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆங்கில அறிவில்லாத வளைகுடா நாடுகளில் செல்வச் செழிப்பிருந்தும் சமுதாய அளவில் நிலைத்துவிட்ட ஆதிக்கங்கள் மாறவழியில்லை என கருதப்படுகிறது. குறிப்பாக இசுலாமிய அடிப்படையாளர்கள் பெண்ணடிமைத்தனத்தைப் பேணுவதில் ஆங்கில அறிவின்மை வாய்ப்பாகிவிட்டது. இந்தி எதிர்ப்பால் ஆங்கில ஆதிக்கம் நிலைபெற்றுவிட்டது என்னும் கூற்றும் பொருந்தா கூற்றாகும். ஆங்கிலம் ஆதிக்க மொழி என்பதைவிட, 'தமிழ்' இயலாத மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. இதனைத் தமிழின் இயலாமை என்பதைவிட தமிழர்களின் இயலாமை என்பது ஏற்ற விளக்கமாக இருக்கும்.

## மொழி ஆதிக்கத்தின் கருவி

மொழி ஒரு குழுவின் நீண்டகால பயிற்சி; பண்பாட்டு, நாகரிகக் கூறுகளின் அடையாளம். அதேசமயம் ஆதிக்கத்தின் கருவியாகவும் உள்ளது. "ஆதிக்கம் செலுத்தும் போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் விதமான வடிவம் கொள்கிறது; கருவியைத் தேடி பெற்றுக்கொள்கிறது; நோக்கம் ... எளியோர்தமை வலியோர் சிலர் வதை புரிவதுதான். இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பதை ஒவ்வொன்றும் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் நாட்டில் ஆதிக்கக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக காண்கிறோம். இந்த ஆதிக்கத்தின் எந்த வடிவத்தை ஆராய்ந்திடினும் ஒரு பொதுவான பாடம் கிடைத்திடும். ஆதிக்கத்தை எதிர்த்து நின்று ஒழித்தவர்கள், கொடுமைகளைத் தாக்கித் தகர்த்தவர்கள் பிறகு தாமே ஆதிக்கம் செலுத்துவோராகவும் மாறிவிடுகின்றனர்." (அண்ணாதுரை, 1981). இந்தியாவில் மேற்சொன்ன அனைத்து ஆதிக்கங்களும் வரலாற்று காலம் முதல் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவில் தேவமொழி என்று கருதப்பட்ட சமஃச்கிருதம் படித்தால் வேலை வாய்ப்பு பெறலாம், வாழ்விலும், சமுதாயத்திலும் இருப்புநிலையை (அந்தஸ்து) உயர்த்திக் கொள்ளலாம் என்ற நிலைகள் இருந்தபோது திராவிடர்களும், தமிழர்களும் அம்மொழியைப் படிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. "மைசூர் திவானாகவிருந்த சர்.கே.சேட்ஃசா (ஷா)த்திரி ஐயரிடம் பண்டுவர் பால்பு (ஈழவர் செல்வாக்கிருந்ததால் ஒருவிதிவிலக்காக குமார ஆசானுக்குச் சமஃச்கிருதக் கல்லூரியில் இடம் கிடைத்தது. அவ்வமையம் கல்லூரியிலிருந்த பார்ப்பனரல்லாத (பிராமணனலல்லாத) ஒரே ஒரு மாணவர் ஆசான்... 'நியாயவித்வான்' தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். .. சூத்திரன் ஒருவன் தேவ சாஃச்திரங்கள் பயிலக் கூடா தென்ற கிளர்ச்சியொன்று உருவாக்கப்பட்டது. முடிவில் ஆசானைக் கல்லூரியிலிருந்து நீக்கும் நிலைக்கு திவான் கட்டாயப்படுத்தப்பட்டார். இறுதித் தேர்விற்கு ஆசான் அமரமுடியவில்லை" (கிருட்ஃச்(ஷ்)ணசாமி, 1977, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தமது மேல்நிலைக் கல்வியிலும் இதே இடர்பாட்டைச் சந்தித்தார். "அவரும், அவரின் மூத்த உடன்பிறந்தவரும், சமஃச்கிருதத்தை இரண்டாவது மொழியாகப் பயில அனுமதிக்கப்படவில்லை. பழமைவாதப் பிரிவினர்க்கிடையே புகழ்பெற்ற திலகர் போன்ற ஃகிந்து (Hindu) தலைவர்கள் ஒரு ஃகிந்து என்பவன் வேதங்களின்பால் நம்புகை (Faith) நம்பிக்கை கொண்டவனாக இருக்க வேண்டுமென்றனர். ஆனால் இதில் துயரமான நிலை என்னவெனில் எழுபது சதவிகித

padippakam

மக்கள் (சூத்திரர்களும், ஆதிசூத்திர தாழ்த்தப்பட்ட மக்களும்) வேதங்களைக் கற்பதற்கு மறுக்கப்பட்டனர். குறைந்தது அவற்றை கேட்கவும் முடியாது.... ஃகிந்து இய (Hinduism) பாதுகாவலர்களால் விரும்பாத இரண்டு (அம்பேத்கர் - ஜெயக்கர்) ஃகிந்து (Hindu) மாணவர்களின் தொண்டையில் இந்த நஞ்சு மாத்திரை திணிக்கப்பட்டது.'' (தனஞ்ஃசாய்கர், 1992). இதனால் அம்பேத்கர் பாரசீகமொழியைப் படிக்கவேண்டி வந்தது.

செத்த மொழியான சமஃச்கிருதம் படித்தால் வசதிபெறலாம் என்ற நிலை நிலவியபோது படிக்க வாய்ப்பு மறுக்கப்பட்டது. செத்த மொழியால் பயனில்லைஎன்னும் நிலை வந்தவுடன், இந்த சமஃச்கிருதம்தான் இந்தியாவின் ஆன்மா, உயிர்த்துடிப்பு, பண்பாட்டு வெளிப்பாடு, ஆகவே அதனைப் படிக்க வேண்டுமென ஆதிக்கக்குழுவினர் பேசுகின்றனர். இந்தி படித்தால் வடநாட்டில் வேலைபெறலாம் என இந்திய அரசு, பேராயம் (காங்கிரசு) இவர்களுக்குப் பல்லாக்கு தூக்கும் சில முற்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த கொத்தடிமைகளும் பேசிவருகின்றனர். "இந்தி ஏற்பு விழா" நடத்தும் சென்னை தாழ்த்தப்பட்ட அமைப்பும், இந்தியைப் புகுத்தி குழப்பத்தை விளைவித்து பார்ப்பன அமைப்புகளும் ஆதாயம் கருதி செயல்படுகின்றன. இந்தி மாநிலத்தவர் (மேல்தட்டு மக்கள்) ஆங்கில ஊடகம் வழி கல்விகற்று அமெரிக்கா மற்றும் மேலை ஐரேப்பாவில் சொகுசு வாழ்வு வாழ முனைகின்றனர். ஃகிந்தி மாநிலத்து அம்பேத்கர் வழியினர் சிலர் தென்னகத்து மக்கள் ஃகிந்தியைப் படிக்கக் கூடாது என திராவிட இயக்கத்தின் கொள்கையை எதிரொலிக்கத் தொடங்கியுள்ளனர். தாய்மொழி - ஆங்கிலம் என்னும் திராவிட இயக்கத்தின் கோட்பாடே இந்தியாவில் மொழிச் சமன்மைக்கு வழிகாட்டுவதாகும். பிற கருத்துகள் மொழி ஆதிக்கத்திற்கும், (கல்விவழி) சமுதாய ஆதிக்கத்திற்கும் இட்டு செல்பவை.

## தமிழுக்கு அரண் அமைப்போம்

தமிழ் மொழியை இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு ஏற்ற மொழியாக ஆக்கும் முயற்சிகள் தேவை. தமிழின்பால் தொடுக்கப்படும் பன்னாட்டு, இந்திய, தமிழ்நாட்டு ஆதிக்கக் குழுக்கள், விழுமமற்ற தமிழர்கள், தேர்தலில் வாக்குச்சீட்டு திரட்டிகள், சில தத்துவ மயக்கங்களில் ஆட்பட்டவர்கள், தாழ்வு மனப்பாங்கு கொண்ட தமிழர்கள் ஆகியோரின் தாக்குதல்களையும், உட்பகைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும். இவற்றை முற்றாக அழித்துவிட முடியாது. நாம் தமிழுக்காக அரண் அமைத்துக் கொள்ள முடியும். இதனைச் சுருங்கச் சொன்னால் 'தடைகளும் - வாய்ப்புகளும்' (Checks and balances) உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ்மொழி சார்ந்த நிலைகளில் நிலவும் அடையாள அவலம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழ் நிலத்தில் எழுந்த மொழி - இன - பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கமான திராவிட இயக்கத்தின் வீச்சால் நல்ல தமிழ்ப் பெயர்களை குழந்தைகளுக்கு திராவிடத் தமிழர்களாக சூட்டி மகிழ்ந்தனர். அண்மைக் காலச் சூழலில் தாழ்த்தப்பட்ட மக்கள் இம்முறையை ஒழுங்காகப் பின்பற்றி வருவது கண்டு பொறுக்காத இடைச்சாதி (பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட) திராவிடர்கள் - தமிழர்கள் தமிழ்ப் பெயர்களைத் தவிர்த்து, திரைப்பட பாணியில் வடமொழி ஃகிந்திமொழிப் பெயர்களைச்

padippakam

# தமிழின் ஆக்கமும், சிற்றிதழ்களும்

**பொள்ளாச்சி நசன்**
*சிற்றிதழ்ச் செய்தி ஆசிரியர், பொள்ளாச்சி*

வணிக நோக்கமில்லாது, குறிப்பிட்ட இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு, அந்த இலக்கின் ஆழமான தன்மைகளை நுணுகிநோக்கி, அக்கருத்தோடு உடன்பட்டவர்களை, ஒரு குழுவாக இணைத்துக்கொண்டு, குறைந்த பிரதிகளில் பெரும்பாலும் ஆக்கபூர்வமான எதிர்வினையாக, குறைந்த நாட்களுக்குள் மறைந்து போனாலும், பல புதிய படைப்பாளிகளையும், உணர்வாளர்களையும் உருவாக்கி, இவர்களின் வழி, சுழற்சிபோல மீண்டும் மீண்டும், இதழ்கள் தொடர வழிவகுக்கும் தொலை நோக்கு இதழ்களையே சிற்றிதழ்களாகக் கொள்ளலாம்.

பொதுவாகச் சிற்றிதழ்கள் ஒடுக்கப்பட்டவர்களின் விழிப்புணர்வுக் குரலாகவோ, கலை, இலக்கிய வடிவங்களின் இறுதிவரை சென்ற ஆராய்ச்சிக் குறிப்புடையவைகளாகவோ இருக்கலாம். வார, இருவார, மாத, இருமாத, காலாண்டு - என்ற கால இடைவெளிக்குள் இவைகள் வெளியிடப்படலாம். இரண்டு பக்கங்களிலிருந்து சில நூறு பக்கங்கள் வரை கூட (சிறப்புமலர்களில்) வெளியிடப்படலாம். கதை, கவிதை, கட்டுரை, நாடகம், துணுக்கு என்று ஏதேனும் ஒன்றை மட்டும் உடையதாகவோ, அல்லது அனைத்தும் உடையதாகவோ - இருக்கலாம். தலித்பிரச்சனை, பெண்விடுதலை என்று இயக்க சார்புடையதாகவோ, புதுக்கவிதை, நாடகம், கவிதை, சிறுகதை என்று இலக்கியம் சார்ந்தவைகளாகவோ, மனித சமுதாய மேம்பாட்டை வலியுறுத்தும் மக்கட்குழு சார்புடையதாகவோ இருக்கலாம். அஞ்சல்அட்டை உள்நாட்டு அஞ்சல் வடிவிலோ, கையெழுத்து உருட்டச்சு, ஒளிப்படப்பிரதி, அச்சு, கம்ப்யூட்டர் அச்சு அமைப்பிலோ சிற்றிதழ்கள் உருவாக்கப்படலாம். எப்படி இருந்தாலும், இதழின் சிறப்பு அதன் கருத்துச் செறிவூட்டத்திலும், கலை நயத்திலும் தான் அமைந்துள்ளது.

தற்பொழுதுள்ள இயல், இசை நாடகத்துள் நாம் காணும் வளர்ச்சி திடீரெனத் தோன்றியதல்ல. பல்வேறு வகையான படைப்பாக்கங்கள் படிப்படியாக சோதனை ரீதியில் முயற்சி செய்யப்பட்டு, செழுமையான வடிவம் உள்வாங்கப்பட்டு, பிறகு அங்கீகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டது. இவ்வாறு பல்வேறு சோதனை ரீதியிலான படைப்பாக்கங்களை வெளியிடுவதில் சிற்றிதழ்களின் பங்கு கவனிக்கத்தக்கது. சிறுகதைக்கான பயிற்சிக் களங்களாக இருந்த **மணிக்கொடி**, **சக்தி** போன்ற இதழ்களும், புதுக் கவிதைக்கான முன்னோடிகளாக முயற்சிசெய்த **எழுத்து**, **நடை**, **கசடதபற** - போன்ற இதழ்களும், புதுக்கவிதையை முதன்மைப்படுத்தி வெளியான **வானம்பாடி** இதழும் இந்த நோக்கில் கவனிக்கப்பட வேண்டிய சிற்றிதழ்கள்.

நவீன நாடகங்களுக்கான **'நாடகவெளி'**யும், ஜப்பானிய ஹைக்கூவிற்கான, **கரந்தடி**, **புள்ளி** (இலங்கை) இதழும், அதிநவீனப் போக்குகளையுடைய **வித்யாசம்**, **நடுகல்**,


படிப்பகம்

**உன்னதம், குதிரைவீரன் பயணம், நிழல், புதியன** போன்ற இதழ்களும், - சோதனை முயற்சிகளுக்கான இயங்கு தளமாக வெளியாகி வருகின்றன.

இவைகள் மட்டுமல்லாது கலை இலக்கிய சோதனை மற்றும் திறனாய்வு செய்து வருகிற **நவீன விருட்சம், கல்குதிரை, கனவு, காலச்சுவடு, புதிய நம்பிக்கை,** பல்வேறு படி நிலைகளைக் காட்டுகிற **தாராமதி, முன்றில், காந்தன்** போன்ற இதழ்களும், மொழியை முதன்மைப்படுத்துகிற **வெல்லும் தூயதமிழ், நல்லதமிழ், சுகன், முதல்முரசு, புறப்பாடு, நீலகிரி நியுஸ்** போன்ற இதழ்களும், மொழியின் அரசியலை முதன்மைபடுத்தும், **கவிதாசரண், அரங்கேற்றம், சிந்தனையாளன்** போன்றவைகளும், பெண் விடுதலையை முதன்மைப்படுத்துகிற **புதிய குரல், பாரதி சுட்டும் விழிச்சுடர்** போன்றவைகளும், தலித் விடுதலை மற்றும் இலக்கியப் பார்வையுடைய **மனுசங்க சனம் புதிது, சிவில் உரிமை, மனித உரிமை முரசு** போன்றவைகளும் மார்க்சியத்தை முதன்மைப்படுத்துகிற **நிகழ்,** கலாச்சார அரசியலை முதன்மைப்படுத்துகிற **நிறப்பிரிகை,** புலனாய்ந்து மக்கள் குறையை நீக்கல் வகையில் செயல்படும் **திருப்பூர் செய்தி, அருணன்** போன்றவைகளும் தன் பணியைத் தொடர்ச்சியாகச் செய்கின்றன. புலம் பெயர்ந்தோரின் ஆழ்மன உணர்வலைகளை **மௌனம், எரிமலை** (பாரிஸ்) **நான்காவது பரிமாணம்** (கனடா), **அக்கினிக்குஞ்சு** (ஆஸ்திரேலியா) **வியூகம்** (இலங்கை) போன்ற இதழ்களும், மலையகப் பிரச்சனைகளுக்காக **மக்கள் மன்றம்** (இந்தியா) **குன்றின் குரல்** (இலங்கை, **கொழுந்து**) பல்வேறு வகையான சிற்றிதழ்களின் வழி செழுமைப்படுத்துகிற புதிய போக்குகளும், கலை இலக்கிய வடிவங்களிலும் தமிழுக்குக் கிடைத்த வரவு ஆகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல. கால வகையினானே என்பதற்கிணங்க இப்புதிய வரவால் தமிழின் வளர்ச்சி மேலும் பல நுணுக்கங்களையுடைய பிரிவுகளாக வளரும் என்பதில் ஐயமில்லை.

நுட்பமாகச் சிந்திப்பவர்கள், தங்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையால், அதன் இறுதிவரை செல்கிறார்கள். இவர்களால் படைக்கப்படும் படைப்பாக்கங்கள் ஒப்புமை காட்டுதற்கரியதாகவும், காலம் கடந்து பேசப்படுபவைகளாகவும் உள்ளன. பல்வேறு நுணுக்கங்களில் கூர்மைப் படுத்தப்படும் இக்கருத்துக்கள் அந்தந்த கால கட்டங் களில் அப்படியே பதிவாகின்றன. இப்பதிவு பல்வேறு படிநிலைகளைக் கொண்டிருக்கலாம். சிற்றிதழ்களில் மட்டுமே பதிவாகும் இப்பதிவுகள் தரமான ஆக்கத்திற்குத் தூண்டுகோலாகவும், படிக்கட்டாகவும் இருக்கின்றன. முறைப்படுத்தப்பட்ட இவைகளின் தொகுப்பு இலக்கிய வரலாற்றிற்கான அடித்தளமாகும்.

தற்காலத்தமிழின் பன்முகவளர்ச்சிக்கு ஆதாரமாகவும் சோதனை முயற்சிகளுக்கு இயங்குதளமாகவும் இருக்கின்ற இச்சிற்றிதழ்களின் தொகுப்பு என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. ஒன்றிரண்டு இதழ்களோடு நின்றுபோகும் தன்மையும், பதிவுபெறாது தனிச் சுற்றாக மிகக் குறுகிய வட்டத்திற்குள் சுற்றும் தன்மையும்-சிற்றிதழ்கள் தொகுப்பதைக் கடினமாக்குகிறது. சிற்றிதழ்களைச் சேகரிப்பது, வகைப்படுத்துவது, பாது காப்பது, அதிலிருந்து- பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து கட்டுரைகளை வெளியிடுவது-என்பது சிரமமான செயலே, பல்கலைக் கழகங்களும், நூலகங்களும், இச்செயலில் சிறப்பாகச் செயல்பட வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் தாஸ்னா அங்கீகாரம் பெற்ற நசன் இதழகமும் ஓரளவு இதழ் சேகரிப்பு-பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்கின்றன.

காட்சி ஒவ்வொன்றும்
நடிகையின் அங்கம் திறந்து
காசு பொறுக்க
அவசரப்படும்
பேனாக்காரன் வார்த்தைகள்
காமச்
சிரங்கு சொறிந்தபடி கதை வளர்க்கும்.

* * *

எங்கள்
இளம்படைப்பாளிகள்
இதோ
புதுவகையாய் பெண்ணியம்
வகுக்கின்றனர்.
புணருவதற்கு
யோநி மட்டுமே இடமல்லவாம்
புதுவழிகள் காண வேண்டுமாம்.

* * *

அயல் நாட்டிலிருந்து
அங்கத்தில்
தங்கத்தை எங்கு வைத்துக்
கடத்த
மங்கையர் பயன்பட்டனர்
என்பதை
மோப்பம் பிடிக்கும் துப்பறிகதைகளுக்கு ....
கிழிந்த
உள் உடுப்புக்குள்ளிருந்து
கறையைக் கிளறியெடுக்கும் - எங்கள்
ஷெர்லக் ஹோம்சுகளுக்குப்
பங்கீட்டுக் கடைக்கு வராமல் போன
பாமாயில், அரிசி
பதுங்கிய இடங்களைப்
பார்க்க நேரம் ஏது?
மத, இனக் கலவரங்களில்
தெருக்களில்
வன்முறை-கொலைகளை உச்சரிக்கும்....
திகிலின் பிரசுரங்களாக
மக்கள்.....
உதவிக்கு
ஒரு வாக்கியத்தை அனுப்ப மறுக்கும்
எழுத்தாளர்கள்
அனுப்பி வைக்கும் எழுத்துக்கள்,
குறைக்கும் குபேரர் வீட்டுப்
பொமரேனியன்கள்
மோவாயில் முத்தம் கொடுக்கும்.....
அரசியல் வாதியின்
வைப்பாட்டிகளுக்குத்
துணி துவைத்துப் போடும்.
நம்
சாண்டில்யச் சந்ததிகள்
மகாராணிகள் மார்பளவு பார்த்துக்
கதை எழுதும்.
மாண் டொழிந்த மன்னர்களின்
இராசபுரவிகள்-இவர்கள்
பாலுறுப்பை மிதித்தபடி கனைக்கும்!
வருணனை வேதனையில்
பிறந்துவிடும் இறந்த காலம்!
'இது வேண்டாம்!'
என்று இளவரசிகள் எறிந்துவிட்ட
பாதக் கொலுசுகளைப்
பார்த் தெடுத்து வருவார்கள்-அவை
விற்ற பணத்தில்
வீடுகட்டிக்
கொள்வார்கள்.
இன்றைய சம்பவங்கள்
இவர்கள் இடம் தேடி வந்தாலும்
கதவடைத்து வைப்பார்கள்.
எங்கள்
இலக்கியத்திற்கோ
எதார்த்தத்தைப் பார்க்காதவரை
விழிகளில் பிரகாசம் அதிகம்!
பார்த்துவிட்டால்.....
குண்டு வெடித்துச் சாகாமல்
இலகியத்தைக்
கொண்டுபோய் வைத்துக் காப்பதே
பெரும்பாடு.
இலக்கியத்தின் தோல்
எல்லா நாடுகளிலும் இப்படியா?
எங்கள்
தமிழ்நாட்டில் ரொம்பக் கெட்டி!

* * *

இங்குள்ள
மார்க்சிய புத்திரர்கள்
மக்கள் இலக்கியவாதிகள் பட்டியல்
தயாரிப்பதிலேயே
மாறுபட்டுப் போனார்கள்.
அடித்தல் திருத்தல்களில்
மிஞ்சாமற் போனவர்களில்
மார்க்சும் இருந்தார்
கார்க்கியும் இருந்தார்.
இனியொன்று
சொல்வோம்....
இலக்கியம் இல்லாமல்
மனிதன் இருந்திருக்கிறான்!
மனிதன் இல்லாமல்
இலக்கியம் இருந்ததே இல்லை!
நதியை
விற்றுவிட்டுப் படகு வாங்குவதுபோல்
மனிதனை
மறந்துவிட்டு இலக்கியம்
படைப்பதா?

* * *

# குன்றம் மு. இராமரத்நம் அவர்களின் "சிறை மீண்ட கவிதைகளிலிருந்து"

## மொழி

இளமனதில் முதலாக எமதன்னை தெளித்தவிதை
வளர்ந்தோங்கி மருவற்று சுவையான நற்கவிதை
உலகறிவின் குடியிருப்பு மொழியென்பர் அறிஞரிதை!
சுழியறிவு மின்னூட்டி கதிர்பரப்பும் தனிவிளக்கு!
பொழிகதிரோன் ஒளியேற்று பொங்குமதி குளிர்விளக்கு!
உலகறிவைக் கண்டுணர உதவுகின்ற கருவிழிகள்!
நலமான இசையமுதை நல்கும் யாழ்இக் கழிகள்!
செவிக் குணவு செரிக்கு நெஞ்சின் உளப்பெருக்கு இதழ்வாயின்
புவிக்கீயும் மொழிபுனல் மொழிநமக்கு மகிழ்தாயின் - என்பவரால்
ஒளிகொண்ட ஒலியாகும் அருவம்தான்! புவியேட்டில்
நெளியான குறியாக உருவாகும்
சளியாது வளமூட்டு! நலமூட்டும் நமக்கதுவே!

## மொழிப்பற்று

மொழிப்பற்றுமலர்மதுபோல் அறிவுக்கு அநுபானம்
விழிப்பற்று அளவொழித்தால் அதுவேதான் மதுபானம்
பழிப்பற்ற மொழிப்பற்று அறிவோர்க்கு குளிர்பானம்
மொழிபேசும் மனிதர்க்கு தம்மொழிமே லபிமானம்
மொழிவாரே தன்குஞ்சு பொன்குஞ்சென் பதுபமானம்
பயிர்நெஞ்சில் முதலாக பரிந்தன்னை பயிற்றுமொழி
உயிருள்ள மட்டுமது உளம்விட்டோ டாத்தோழி
அன்போடு இணைந்துவிடும் அகக்கிழத்தி மேல்பற்றேல்
தன்னுணர்வோ டிணைந்தமொழி தனில்மீதும் உறும்பற்றே! - அதனால்
உற்றமொழி உனதுதாயேல் உறுமொழியே மனைவிமக்கள்
பற்றுன்தாய் மேல்தானோ? பாசமதை
பெற்றபெரு உலகினுக்கே பிரித்தாலென்? மிகுமுன்மொழிக்கே!

## மொழி வளர்ப்பு

தேர்ந்தவொரு விஞ்ஞானி எனினுமவர் தெரிந்தமையை
யாரிடமும் செலச்சொல்ல பலசொற்கள் செய்திடுதல்
பார்மீதில் மொழிவளர்த்தல் இலையோசொல் பண்டிதரே!
எதுபொருளை எடுத்துநாம் எவரிடந்தான் கூறினாலும்
அதுயவர்க்கு புரிந்திடவே அரிதாகா வளஞ்சேர்ப்பு
நிதிபோன்ற கருத்துரையும் நீட்சியுறு தத்துவங்கள்
பொதியாக எதுபொருளும் பொலிவுபெறு நிதிச்சேர்ப்பு
எதுவில்லை எம்மொழியில் இதைமட்டும் கற்றாலே
புதுவுலகில் தலைசிறந்து புகழ்படைப்பாய் எனுமார்ப்பு - எனநாமே
அமைதியாய் அயல்மொழிகள் அனைத்துமாய்ந்து அவற்றிலுள்ள
அமைவான பொருளைநம் மொழியிலேற்றி
சமைத்தாலே போதும்நாம் சமைத்தமொழி அமிர்தமாமே!

## மொழி ஒரு கருவி!

செயல்புரி வினைஞன் செய்தொழில் எளிதில்
செய்திட பயன்படும் சிறந்தநற் பொருளெலாம்
கருவிதா னலவோ? தன்னரும் கருத்தினை
இன்னொரு மனிதருக் குணர்த்திட உதவும்
ஒண்மொழி யதுவும் ஓர்ந்திடக் கருவிதான்!
கருவியோர் கருவிதான் கருத்தினில் கொளுமின்!
'மொழியே என்மூச்' சென்றும் என் தாய்
தெய்வம் என்றெலாம் மொழிவர். யாரிவர்?
தமையே ஈன்று தன்னலம் மறந்து
சேய்நலம் கருதி செம்மொழி பயிற்றி
நாளும் காத்த நற்றாய் காக்கிலார்!
அளவினைக் கடந்து சொல்மொழி புகழுநர்
அத்துடன் அமைவாரோ? அதற்கு மேலே
மொழியைக் காட்டி இழிதொரு வெறியினை
எழுப்பிட முனைந்து எத்தனை உயிர்களை
போக்கினார் வெறியர்! புன்மை! புன்மை!!
'மொழியது கருவியுன் முதலாம்' என்று
மொழிநீ. ஏற்போம். கருவி சீர்பெறல்
வினையின் வெற்றிக்காவன, இசைவதே!
'மொழியினை வளர்த்திட முழுமூச்சோடு நாம்
முனைவோம்' என்றிடில் முனைவோம். ஆனால்
வேற்றுமை பலப்பல இருப்பினும் உலகம்
ஒருமைப்பாடுற ஒழுகும் வேளை
மொழியின் பக்தா! யோசி!
மொழிவெறி பகைவிளைத் துலகினைப் பிரிக்கும்!

## மொழிக்கலப்பு இயற்கையானது

எத்தனை மொழிமலர் எழில்சேர் உலகில் பூத்தன!
அத்தனை மலரும் ஆங்கதன் நிலமதற் கழகாம்!
ஒத்தது குறிஞ்சி ஓங்கிய மலைபடு நிலத்தே!
ஒத்தது நறுமுல்லை ஓங்குவேய் வளமார் இடத்தே!
மருதம் முல்லை மருவம ருவினமல் லிமுல்லை
இருவாட்சி பிறந்தது இருபூ மூன்றா னதுபோல
மருவிட மனிதரும் மருவிடும் மொழியது மெனிலோ
உறுமொழி கலப்பும் ஒண்மொழி பிறப்பும் இயல்பே!
இன்றுள மொழிக்குளே எதிலிலை கலப்பு? கலப்பே
நன்றென கொளுமொழி நாளும் உயர்ந்தது: உலகே!
இன்றியே கலப்பது இயம்பல் கூடுவ தரிதே
இன்றிக் கூறிடின் எழிதிடின் மொழிப்பயன் கெடுமே!
பொன்னில் செம்பினை பொருத்தமாய் கலப்பது அனைய
நன்றெனக் கலப்பை நாம்கொளின் மொழிக்கது வலுவாம்
என்னிது? பழைய ஏற்பிலா மணிப்ர வாளமோ?
மன்னியும்! கலப்பு வாழ்மொழி தனக்கது இயல்பே!

## வழக்கொழிந்த மொழிகள் உலகச் சொத்து

நிலையாக யாருமே நித்தம் மொழியாது
நிற்கின்ற வழக்கற்ற பாஷைகள் எல்லாம்
குலைதள்ளி வாழ்வொழித்து சும்மா மரமாய்
குனியாது நிற்கின்ற வாழையின் கம்பம்
இலையாவோ காயாவோ இன்சுவை கனியாவோ
இவ்வுலகம் பெற்றதுண்டு வாழைதான் வாழ்ந்தபோது
மோழையாய் நிற்கின்ற காலத்தும் தன்கன்று
மூன்றெழ கிழங்குடலை தந்துவாடும் பெற்றியொக்க
தழைச்சொல்லை காயெழுத்தை தித்திக்கும் கனிப்பொருளை
தாரணியின் பன்மொழிக்கும் தந்துதவும் தாயதாம்
வழக்கொழிந்த செம்மொழிகள் யாருக்கும் தாயல்ல
வாரிசார்? அதுவுலகச் சொத்து!
கலைகலாச் சாரம் சரித்திர விஞ்ஞானம்
கற்க களிகூர் கனிச்சாறு இலக்கியம்
மேல்நா டெதிலோ விளைந்தது என்றால்
விதையது லத்தீன் எனுமொழி உண்மை!
கீழ்நா டிதிலோ கிடைக்கும் சரக்கெலாம்
கேட்பின்; சமஸ்கிருத வாடைதான் வீசும்
ஏழை எளியவர் கூறும் மொழியிலும்
ஏற்றம் மொழிக்கண் இயைந்தோர் சொலிலும்
இழையும் பலசொல் இயக்கம் இழந்த
இவையனை மொழிகளின் இனிய பதங்களே!
நிலையாம் உலகே! நிதியிவை உமக்கு
நினைவுடன் காத்திடு வாயே!

வரலாற்று சீர்சூழும் வவ்வால்வாழ் கோபுரம்
வலுவிழந்த கோட்டை கொத்தளம் மனைகள்
சிரஞ்சிதைந்த சிற்பம் சிதலையுண்ட சித்திரம்
சீர்மிக்க அரசர் கவிகளின் சமாதி
அரசுடமை என்றிவை காப்பது போல
அகில உலக சரித்திர ஏட்டின்
திறப்ப திகாரமே தீட்டிய செம்மொழி
செப்பும் சரித்திர சம்பவ சூட்சமம்
கரந்தன தம்முளே கரந்தன் கரந்தவை
காப்பாய் உலகே களிந்து!

padippakam

# தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் - உறுப்பிதழ்கள்

| எண் - இதழ் | ஆசிரியர் | முகவரி |
|---|---|---|
| 1. தாரமதி | குன்றம். மு. இராமரத்னம் | புலமைப் பண்ணை சுகர்கேன், கோவை-641007 |
| 2. இளம்பிறை கதம்ப மலர் | திருமதி நிர்மலா | தபால் பெட்டி எண் : 62 குன்னூர், நீலகிரி மாவட்டம் |
| 3. மௌன மலர்கள் | திருமதி நிர்மலா | தபால் பெட்டி எண் : 62 குன்னூர், நீலகிரி மாவட்டம் |
| 4. வாரமுரசு | அ. ராஜா சொர்ணசேகர் | 2சி/8, நடராஜா காலனி சிவகாசி-626123 |
| 5. கவிநிலா | Dr. நடனசந்திரமோகன் | 2418, பூக்காரவஸ்தா தெரு தஞ்சாவூர் - 613 001 |
| 6. சிற்றிதழ் செய்தி | பொள்ளாச்சி நசன் | சூளேஸ்வரன்பட்டி பொள்ளாச்சி-6 |
| 7. மதுமலர் | வலம்புரி லேனா | 5-ஏ, சுயராஜ்யா புதுத்தெரு குளித்தலை-639104 |
| 8. வண்டு | கி. சீனிவாசன் | 660-ஏ, ஸ்வர்ண நகர் ராபர்ட்சன்பேட்டை, கோலார் தங்கவயல் கர்நாடகம் - 563122 |
| 9. அருணன் | கி. அருணன் | மாரியம்மன் கோயில் தெரு, மருதூர் இராமநாதபுரம், கோயம்புத்தூர்-45 |
| 10 நிலா | மானூர் புகழேந்தி | பாரதிதாசன் நகர் இராமநாதபுரம், கோவை-45 |
| 11 துளி | சேலம் பாலன் | 61, பழனிமலை கவுண்டர் வீதி ஈரோடு 1 |
| 12 அலைகள் | அய்யாறு ச. புகழேந்தி | 1165, மேல வீதி தஞ்சை-613002 |
| 13 குறளியம் | வேலா. அரசமாணிக்கம் | 3, மண்டபத்தெரு, ஈரோடு-1 |
| 14 கடிசியா நியூஸ் | கடிசியா வெளியீடு | 8-2, படேல் ரோடு, விருதுநகர்-1 |
| 15 சுந்தர சுகன் | சுகன் | 97, கீழத்தெரு கணபதி நகர், தஞ்சை-1 |

படிப்பகம்

padippakam

| | | | |
|---|---|---|---|
| 16 | கதிரவன் | ம. இசைமணி | 15, சரோஜினி வீதி, மகாலிங்கபுரம் பொள்ளாச்சி 2 |
| 17 | தமிழமுதம் | இல. முத்துகிருஷ்ணன் | 64, முத்து கொத்தனார் தெரு இராஜபாளையம்-626117 |
| 18 | சுட்டி | ஆசிரியர் குழு | ஏபி-638, அண்ணா நகர் சென்னை-40 |
| 19 | ஏழாவது அறிவு | ஆர். ஜெய் ஆனந்த் | 12, காசாங்குளம் மேலக்கரை பட்டுக்கோட்டை-614604 |
| 20 | விடியல் | இராஜாதி | 32-ஏ, பாரதி நகர் வண்டலூர், சென்னை-48 |
| 21 | முகம் | மாமணி | எண் 18, 68வது தெரு, 11வது பிரிவு கருணாநிதி நகர் சென்னை-78 |
| 22 | உங்கள் சரண்யா | குழிவிளை விஜயகுமார் | மெதுகும்மல்-629172 குமரி மாவட்டம் |
| 23 | மக்கள் உறவு | கோடை சேகர் | கீரமங்கலம்-614624 புதுக்கோட்டை மாவட்டம் |
| 24 | திரைச்சோறு | பி. எஸ். பூப்பாண்டியன் | 58, ஆற்காடு சாலை கோடம்பாக்கம், சென்னை-24 |
| 25 | மானுடம் | எட்வின் | இலக்கிய சதுரம் வடக்கு ஈச்சம்பட்டி, திருச்சி-621005 |
| 26 | குமரிக்கடல் | டி. பீட்டர் | மணக்குடி-629602 |
| 27 | முத்தமிழ் முரசு | எம். எஸ்பி கருப்பையா | 84, கோர்ட் ரோடு தஞ்சை-613001 |
| 28 | காகிதம் | எஸ். மோகனகிருஷ்ணன் | 51, சுதர்சனம் தெரு மஞ்சை நகர், கடலூர்-607001 |
| 29 | வெண்ணிலா | வணங்காமுடி | 47, காஜா தெரு, எம். கே. புரம் மதுரை-625011 |
| 30 | அமிர்தம் | சூர்யாதேவி | 95-பி, கல்யாணபுரம் வியாசர்பாடி, சென்னை-39 |
| 31 | மின் விழிகள் | ஜேப்பியார் | ஜே. பி. பிரஸ் கடையல் குமரி மாவட்டம் - 629101 |
| 32 | பூங்கனல் | பொன்னிலவன் | இனியன் பிரிண்டர்ஸ் வேலகவுண்டம்பட்டி-637212 |

படிப்பகம்

padippakam

| | | | |
|---|---|---|---|
| 33 | கேப்பியார் | கே. புஷ்பராஜ் | பரணியறத்தலவிளை களியக்காவிளை, குமரி மாவட்டம் |
| 34 | கைவிளக்கு | பூதை. சொ. அண்ணாமலை | பூதப்பாண்டி குமரி மாவட்டம் |
| 35 | முல்லை நதி | டாக்டர் ஒ. கண்ணப்பன் | 440, பெரியகுளம் சாலை தேனி |
| 36 | இல்லத்தார் சுடர் | என். தினமணி | 12, பாரதி நகர் பி.கே.என். ரோடு, சிவகாசி-626189 |
| 37 | சிவாலயா | வி. எஸ். குமார் | 5, பனகல் தெரு, பாண்டியன் நகர் அனுப்பானடி ரோடு, மதுரை.9 |
| 38 | குரோம்பேட்டை செய்திகள் | எஸ் எல் பிரசாத் | 24, ரங்கநாதன் தெரு. நேரு ரோடு குரோம்பேட்டை, சென்னை-44 |
| 39 | கண்ணிமை | எஸ் ஜான் | 67, கலைமகள் சபா, புதுபள்ளிபாளையம் ரோடு, கொமாரபாளையம்-638163 |
| 40 | நியு ஜெனரேசன் | பி. கே. கோபால் | 65, ஆண்டிக்கவுண்டர் வீதி பொள்ளாச்சி-1 |
| 41 | லாரி | பொன். தென்பாண்டியன் | 107, வ. உ. சி. சாலை சென்னை-3 |
| 42 | மலர்முகம் | அ மாதவன் | 59, குட்டியணஞ்சான் தெரு சிவகாசி-626123 |
| 43 | ஏணி | ஒடவை ஈ. தமிழ்வேந்தன் | 255, ஆர்-3 ஒட்டன்சத்திரம் |
| 44 | தளிர் | பி. இளங்கோவன் | 29, வாட்டர் டேங் ரோடு நாகர்கோவில்-629001 |
| 45 | கலைச்சுரங்கம் | துரை அரங்கநாதன் | 12, முதல் குறுக்குத் தெரு வெங்கடேசபுரம், சென்னை-23 |
| 46 | தெரிந்த கதை | குறளன்பன் | கரிகால்வளவன் இல்லம் எம். எம். கே. காலனி டோல்கேட், திருச்சி-20 |
| 47 | மதுரை மலர் | ப. முருகேசன் | கன்னியப்பபிள்ளைபட்டி வழி, ஆண்டிப்பட்டி-626512 |
| 48 | வேளாங்கன்னி குரலொலி | அருள் ஆரோக்கியசாமி | ஜான்பாஸ்கோ பிரஸ் பூக்கார தெரு, தஞ்சை-613001 |
| 49 | மனிதம் செய்திகள் | தம்பி நாகமாணிக்கம் | காந்தி மண்டபம் தெரு பொள்ளாச்சி |

படிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| 50 | கிராமியம் | ஏ. டி அரசு | 10/69, அங்கலகுறிச்சி பொள்ளாச்சி-7 |
| 51 | பொள்ளாச்சிவாசி | பி எஸ். சுப்பையன் | 62, வள்ளலார் தெரு வி. காலனி, பொள்ளாச்சி-1 |
| 52 | திருப்பூர் செய்தி சுரம் | பி. சண்முகவேல் | 165, மங்கலம் ரோடு திருப்பூர்-641604 |
| 53 | அறிவு | மு. அமீர்பாட்சா | 38-D, தோப்புத் தெரு ஒலிமுகம்மது பேட்டை, காஞ்சிபுரம்-2 |
| 54 | பூஞ்சோலை | வேங்கை வேந்தன் | 18 H, தெற்கு ராம மடத்தெரு திருத்துறைபூண்டி-614713 |
| 55 | அக்னிக் குஞ்சு | இதயகீதன் | 13 எ/2, உலகத்தேவர் முதல் தெரு உத்தமபுரம், கம்பம்-626516 |
| 56 | அறிக்கை மலர் | பி இளங்கோவன் | 29, வாட்டர்டேங் ரோடு நாகர்கோவில்-629001 |
| 57 | குறள் மணம் | செ. வரதராசன் | 82, காந்தி சாலை கள்ளக்குறிச்சி-606202 |
| 58 | நிகழ் | கி பழனிசாமி (ஞானி) | 123, காளீஸ்வரர் நகர் காட்டூர், கோவை-9 |
| 59 | பாரதி | ஓவியர். காரை சிவா | 114, பாரதிதாசன் நகர் முதலியார் பேட்டை அஞ்சல் பாண்டிச்சேரி-4 |
| 60 | மரியஜோசப் | புதிய பூச்செண்டு | 61, விசாகத் தோட்டம் சைதாப்பேட்டை, சென்னை-15 |
| 61 | நகரத்தார் மலர் | நா. இளங்கோவன் | பிளாட் எண். 125 அண்ணா நகர், மதுரை-20 |
| 62 | தேவர் முரசு | ஆ சுந்திரேசபாண்டியன் | 368, புதுச்சிறை வீதி மதுரை 10 |
| 63 | கவியமுது | அ. சிவசுப்பிரமணியன் | 1, முத்தாரம்மன் கோயில்தெரு மெய்யகம், வடிவீஸ்வரம் கோட்டாறு, நாகர்கோவில்-2 |
| 64 | புதிய குரல் | ஓவியா | 2/102 பி, அருண் நிவாஸ் மேலப்புத்தேரி, நாகர்கோவில்-1 |
| 65 | கண்ணாடி | மா. பெரியசாமி | 11, டெலிபோன் காலனி திண்டுக்கல்-624010 |
| 66 | பூவழகி | வீரபெருமாள் | சௌரிபாளையம், கோவை-45 |

padippakam

| | | | |
|---|---|---|---|
| 67 | உறவுக்குரல் | ஆ. சுந்தரேசபாண்டியன் | 134-பி, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001 |
| 68 | நீலகிரி நியூஸ் | கே. எம். செல்வராஜ் | அ. பெ. எண். 48 உதகமண்டலம்-643001 |
| 69 | சிப்பி | ம. ஸ்டாலின் | சின்ன மாரியம்மன் கோயில் வீதி கருங்கல்பாளையம், ஈரோடு-3 |
| 70 | ஏழைதாசன் | எஸ் விஜயகுமார் | பி/2, ஸ்டார் காலனி புதுக்கோட்டை-5 |
| 71 | கண்ணியம் | ஜி. குலோத்துங்கன் | 210, எஸ் ஆர்.பி. காலனி சென்னை-82 |
| 72 | கலைமதி | க. பாலசுப்பிரமணியன் | வையப்பமலை--637410 சேலம் மாவட்டம் |
| 73 | நண்பர் வட்டம் | டேவிட் பாக்கியமுத்து | 56-பி/1, காலேஜ் ரோடு பெருமாள்புரம், திருநெல்வேலி-7 |
| 74 | இலக்கியப் பாசறை | அ. மு. தமிழினியன் | 384, 5-வது வீதி காந்திபுரம், கோவை-641012 |
| 75 | மலர் | கே. வரதராஜன் | 2826, கீழ 3-ம் வீதி புதுக்கோட்டை-1 |
| 76 | தமிழ்ப்பாவை | அ. கருணைதாசன் | 15, சண்முகபுரம் முதல் தெரு மதுரை-10 |
| 77 | புதிய தெருவிளக்கு | என். செல்வேந்திரன் | 22 காமாட்சியம்மன்கோயில் தெரு உறையூர், திருச்சி-620003 |
| 78 | புதிய செங்கமலம் | சோ. இளவழகன் | 8, சின்னக் கடை வீதி கீழச்சரகம், திருச்சி-2 |
| 79 | வேறு திசைகள் | ஐ. மஞ்சுளாதேவி | டி-20, ராமசாமி நகர் உடுமலைப்பேட்டை-642126 |
| 80 | நடுகல் | வா. மு. கோமகன் | 30, ஆண்டிக்காடு முருங்கப்பாளையம், திருப்பூர் |
| 81 | செண்பகபூவிதழ் | கே ஜெகநாதன் | சிறுதலைப்பூண்டி-604204 மேல்மலையனூர் வழி, செஞ்சி வட்டம் |
| 82 | உதிரிப்பூக்கள் | பி. செல்லத்துரை | வடக்கன்குளம்-627116 |
| 83 | மூச்சு | ராம. முரளிநாதன் | 20/F-3, திருவண்ணாமலை சாலை செங்கம்-606709 |
| 84 | பாரத விவசாயி | கோவை கி. பழனிசாமி | 48, சம்பந்தம் ரோடு கிழக்கு ஆர். எஸ். புரம், கோவை-2 |

படிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| 85 | ஓ | தி. ரா. கி. | 24-ஏ, பழைய கீழ்மதுரை ஸ்டேசன் ரோடு, மதுரை-9 |
| 86 | நாடார் குலதீபம் | இரா. சண்முகம் | காரங்காடு-629809 |
| 87 | பறவை தூது | ஆர். இராதாகிருஷ்ணன் | பட்டாளம்மன் கோயில் தெரு காந்தி நகர், போடி-626513 |
| 88 | அறிவே துணை | கே. பாலகங்காதரன் | 203, கிளிஞ்சல் மேடு காரைக்கால்-609605 |
| 89 | அருவி | மயன் | 19, பழைய ஆஸ்பத்திரி சந்து போடிநாயக்கனூர் |
| 90 | வான்முகில் | பாஸ்ரீ | முகிலன் குடியிருப்பு, அகஸ்தீஸ்வரம் குமரி மாவட்டம் |
| 91 | கண்மணி மின்மினி | எம்.ஜி.ஜி. சேகர் | த. பெ. எண். 12, மதுரை-2 |
| 92 | நம் விழிகள் | நல். நடராசன் | 14, கச்சேரி வீதி, ஈரோடு 1 |
| 93 | சூப்பர் ஹீரோ | கே. குருசாமி | 47, நடுத்தெரு, மானகிரி, மதுரை-20 |
| 94 | இலக்கியா | இளமதி | 11, சோழன் நகர் முதல் தெரு, தஞ்சை-1 |
| 95 | தமிழ் ஓசை | பழ. சிவானந்தம் | சிவகாமி பதிப்பகம் தாமரைப்பாடி, திண்டுக்கல்-624009 |
| 96 | நமது வீரவாள் | ஆ. தமிழ்மைந்தன் | மருதூர் வடக்கு-614714 |
| 97 | தமிழ் மலர் | என். ஏகம்பவாணன் | கந்தசாமி கண்டர் கல்லூரி விடுதி வேலூர்-638182 |
| 98 | நிறப்பிரிகை | ரவிக்குமார், அ. மார்க்ஸ் வேலுச்சாமி | த. பெ. எண். 192 பாண்டிச்சேரி-1 |
| 99 | ராஜகிரீடம் | ராஜா ஜெயராணி | சிவகாசி-626123 |
| 100 | வாசல் | அரசு. பி.எஸ். கதிர்பாரதி | 87 இந்திரா நகர் மேம்பாலம் தஞ்சை-4 |
| 101 | கனவு | சுப்ரபாரதிமணியன் | 8/252-பி, பாண்டியன் நகர் பி.என். ரோடு, திருப்பூர்-641602 |
| 102 | நம்மைச் சுற்றி | என். வித்யாதரன் | |
| 103 | திருப்பூர் டைம்ஸ் | எஸ். அஜீஸ் | திருப்பூர்-4 |
| 104 | பாரதி சுட்டும் விழிச்சுடர் | சுபத்ரா | 29, கிராப்பட்டி காலனி திருச்சி-620020 |
| 105 | APT | ஆசிரியர் குழு | புலமைப்பண்ணை, கோவை-641007 |

| | | | |
|---|---|---|---|
| 106 | நவீன விருட்சம் | அழகியசிங்கர் | 7, ராகவன் காலனி<br>மேற்கு மேம்பாலம், சென்னை-33 |
| 107 | முனை | பத்மா<br>வெற்றிப்பேரொளி | 17-சி, கீழத்தெரு<br>திருக்குவளை-610204 |
| 108 | அமுத சரண்யா | வேம்பை முருகையா | 108, ரெங்கராஜபுரம் தெரு<br>கோடம்பாக்கம், சென்னை-24 |
| 109 | முதல் முரசு | கே. ஆர். சண்முகம் | 21, செல்லாண்டியம்மன்<br>கோவில் தெரு, திண்டுக்கல் |
| 110 | பிசினஸ் மெயில் | ஜி. ராஜா | 45, கடை வீதி, நாமக்கல்-637001 |
| 111 | திருவுளம் | வ. சுப்பிரமணியன் | 4/11, மொ. சி. காம்ப்ளக்ஸ்<br>சண்முக நாடார் ரோடு, சிவகாசி-626123 |
| 112 | அம்சா | அ. அரிபுத்திரன் | கொடைவளநாடு, இருவப்பபுரம்<br>சாயர்புரம்-628251 |
| 113 | ஆரோக்கியம்<br>மருத்துவம் | Dr. S. தெய்வசிகாமணி | 212, காந்திஜி ரோடு<br>ஈரோடு-2 |
| 114 | நிலா நிலா நிலா | ஜி. ஆஷ்துரை | 24/24, பூங்கா மேற்கு,<br>கம்பம்-626516 |
| 115 | வைகைத்தென்றல் | மு. பழ. தேவி கணேசன் | 1, சுப்புராமன் வீதி<br>காந்தி நகர், மதுரை-20 |
| 116 | காட்டூர்<br>எக்ஸ்பிரஸ் | ச. பாலமுருகன் | 3-425, வேணுகோபால்<br>காட்டூர், திருச்சி-620019 |
| 117 | பரதன் | மா. அன்பழகன் | 102, நெடும் வழி<br>கோவில்பட்டி-627701 |
| 118 | நெசவு | மு. இ. பிரேம்குமார் | 21, SKS துளசிராம் 2-ம் குறுக்கு<br>தெரு, வில்லாபுரம், மதுரை-12 |
| 119 | சுப்ரமணிய சிவா | வதிலை. சௌந்தர் | 1-15-6ஏ, பீலிஸ்புரம்<br>வத்தலகுண்டு-624202 |
| 120 | அரசகட்டளை | ப. ராமச்சந்திரன் | 6, நூல்கடை வீதி<br>காரைக்கால்-609602 |
| 121 | கற்பனை சிதறல் | மு. காஜா மொய்தீன் | 518, கொள்ளுப்பேட்டை<br>கீழவாசல், திருச்சி-12 |
| 122 | பாட்டுப்பயணம் | சாஸ்திரி வெங்கட்ராமன் | 59-6வது தெரு<br>எடமலைப்பட்டிபுதூர், திருச்சி-12 |

padippakam

| | | | |
|---|---|---|---|
| 123 | | வேலவதாசன் | 5, சாமிநாதபிள்ளை வீதி முதலியார் பேட்டை, பாண்டிச்சேரி-1 |
| 124 | முத்தரையர் மலர் | முத்தரையர் இனமுத்து | 14, சின்னாண்டார் வீதி குளித்தலை-639104 |
| 125 | திகன்ஸ்யூமர் கைடு | கே. சக்திவேல் | 58-ஏ, சிவன் மாடவீதி சிவகாசி-626123 |
| 126 | அபிநயா | A V கருணாநிதி | முதலைப்பட்டி அஞ்சல் நாமக்கல் தாலுக்கா |
| 127 | பூங்குயில் | டி. எஸ் சிவகுமார் | 100, கோட்டைத் தெரு வந்தவாசி-604408 |
| 128 | மனுசங்க | உஞ்சை ராஜன் | மதுக்கூர்-613204, தஞ்சை |
| 129 | வைகை குயில் | சரவணகுமார் நண்பர்கள் | 4/615, செந்தில்நாதன் தெரு தாசில்தார் நகர், மதுரை-20 |
| 130 | சுவடு | வதிலை கவிவாணன் | 6-2-2, பள்ளிவாசல் தெரு வத்தலகுண்டு-624202 |
| 131 | ஆதவன் செய்தி | ஏ. ராஜேந்திரன் | 107, கோட்டைத் தெரு வந்தவாசி-604408 |
| 132 | நிழல் | அப்துல் காதர் - சம்பத் - செண்பகன் | 3/4-130, 3வது வீதி காரைக்குடி-623006 |
| 133 | நாடக வெளி | ரெங்கராஜன் | 1415-2வது தெரு, முதல் செக்டர் கே. கே. நகர், சென்னை-78 |
| 134 | வளரும் தமிழ் உலகம் | மு ச. சிவம் | டி 121, சம்பத் நகர் ஈரோடு-638011 |
| 135 | கவிதாசரண் | கவிதாசரண் | 31, டி. கே. எஸ். நகர் சென்னை-19 |
| 136 | தன்னம்பிக்கை | ஆசிரியர் குழு | 16, சாஸ்திரி தெரு பி. என். புதூர், கோவை-41 |
| 137 | குறள் ஒலி | திருவள்ளுவர் சங்க வெளியீடு | 2. எண்பதடி ரோடு பிரகாசம் நகர், பெங்களூர்-21 |
| 138 | சாளரம் | தஞ்சை பிரகாஷ் | தஞ்சாவூர்-613001 |
| 139 | அந்தமான் முரசு | கரிகால்வளவன் | 315, அபர்டின் பஜார் போர்ட்பிளேயர்-744104, அந்தமான் |
| 140 | எமது முதல் குரல் | எஸ். மார்க்கண்டேயன் | 50, அபிராமி நகர் திண்டுக்கல்-624005 |
| 141 | வியாபாரிகள் செய்தி | எஸ். ஆனந்த் | 340, 6-வது வீதி, காந்திபுரம் கோவை-641012 |

படிப்பகம்

padippakam

# தாஸ்னார மலர்க்குழு



கோவை ஞானி
ஆசிரியர் 'நிகழ்'
123, காளீசுவரர் நகர்,
கோவை-9



அ. மார்க்ஸ்
'நிறப்பிரிகை'
31, தொம்பன் குடிசை
சேவியர் நகர், தஞ்சாவூர்-1



குன்றம். மு. இராமரத்நம்
ஆசிரியர், 'தாராமதி'
புலமைப் பண்ணை, கோவை-7



கருணைதாசன்
ஆசிரியர் 'தமிழ்பாவை'
15, சண்முகபுரம் முதல் தெரு
மதுரை-10



கே. ஆர். சண்முகம்
ஆசிரியர் 'முதல் முரசு'
21, செல்லாண்டியம்மன்கோயில் 3வது தெரு
திண்டுக்கல்-10

படிப்பகம்

padippakam



குன்றம். மு. இராமரத்நம்
தலைவர், தாஸ்ஙா



ஜே. எம். செல்வராஜ்
பொதுச்செயலாளர்



அ. ராஜா சொர்ணசேகர்
பொருளாளர்

படிப்பகம்

padippakam

தஞ்சையில் நடைபெறும்
உலகத் தமிழ் மாநாட்டுக்கு
வருகை தரும்

அனைத்துத் தமிழ் ஆய்வாளர்களை -
பேராள - பார்வையாள பெருமக்களை
வாழ்த்தி வரவேற்கும்



# E. S. தேவசிகாமணி

நிறுவனர் - தலைவர்
லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசுத் திட்டம்
57, அரசு கலைக் கல்லூரி சாலை
கோயமுத்தூர் - 641 018

படிப்பகம்

padippakam



# லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப்பரிசுத்திட்ட நிர்வாகக் குழு

57, அரசு கலைக்கல்லூரி சாலை
கோயமுத்தூர்-641 018.

இன்றைய தமிழ்ச் சிறுகதை இலக்கிய வானிலே சுடர்விடும் நட்சத்திரக் கூட்டங்கள் புடைசூழ பவனிவரும் முழுநிலவு-ESD என அன்பொழுக அழைக்கப் பெறும் எட்வார்டு.எஸ்.தேவசிகாமணி அவர்கள் ஆவர். தமது வாழ்க்கைத் துணைநலமாகி, ஒல்லும் வகையாவினும் ஒத்திசைந்து உதவி ஊக்குவித்து நலம் கூட்டிய பொதுநலப்பிரியை அமரர் லில்லி அவர்களின் நினைவாக 1992-ஆம் ஆண்டு இப்பரிசுத் திட்டத்தை ESD அவர்கள் தோற்றுவித்தார்கள்.

சிறந்த சிறுகதை நூலாசிரியர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்குவதன் மூலம் உற்சாகப்படுத்துவது - தமிழ் இலக்கியத்திற்கு பல்துறையில் பல்லாண்டு தொண்டாற்றிவரும் முதுபெரும் எழுத்தாளர்களை ஆண்டுதோறும் பாராட்டிக் கௌரவிப்பது என்பன இவ்வமைப்பின் நோக்கம்.

மூத்த மற்றும் இளைய தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய அனுபவங்கள் தொகுக்கப்பட்ட வாழ்வும் இலக்கியமும் என்ற நூல் 1993 வெளியிடப்பட்டது.

தொடக்க ஆண்டான 1992-ல், எம்.வி.வெங்கட்ராம் அசோகமித்திரன், வாஸந்தி, திலகவதி, சா.கந்தசாமி, பாவண்ணன் உள்ளிட்ட பதினொரு சிறுகதை ஆசிரியர்களுக்கு நாரணதுரைக் கண்ணன், லா.ச.ராமாமிர்தம், தோ.மு.சி.ரகுநாதன், ஆர்.எஸ்.ஜேக்கப், வல்லிக்கண்ணன், சி.ராஜ நாராயணன், தி.க. சிவசங்கரன், வாகவன் ஆகிய மூத்த எழுத்தாளர்களும் பரிசும் பாராட்டும் பெற்றனர்.

இதே போல இரண்டாம் ஆண்டு (1993) பரிசளிப்பு விழாவிலும் சோ.வி.மணிசேகரன், பரிமளமுத்து முதலான சிறுகதை எழுத்தாளர்களும் ராஜம் கிருஷ்ணன், தயானந்தன் பிரான்ஸிஸ், கே.சி.எஸ்.அருணாசலம் ஆகிய மூத்த எழுத்தாளர்களும் பாராட்டப்பட்டார்கள்.

மூன்றாம் ஆண்டு (1994) இப்பரிசுத் திட்டம் மேலும் விரிவு பெற்றது. ஈழ எழுத்தாளர், எஸ்.பொன்னுதுரை (ஆஸ்திரேலியா) சூர்யகாந்தன், தோப்பில் முகமது மீரான், செங்கை ஆழியான் (இலங்கை) மா.இராமையா (மலேசியா), பா.அமிழ்தன் (துபாய்), அரசு மணிமேகலை, பிரதிபா ராஜகோபாலன் உள்ளிட்ட பன்னிரண்டு சிறுகதை எழுத்தாளர்களும் ஜெயகாந்தன், விக்ரமன் ஆகிய மூத்த எழுத்தாளர்களும் பரிசும், பாராட்டும் பெற்றதோடு, பரிசு பெற்ற நூல்களை வெளியிட்ட பதிப்பகங்களும் பாராட்டுப் பத்திரங்கள் பெற்றன.

நிறுவனர்-தலைவர் ESD அவர்களால் தொகுக்கப்பெற்ற-முழுக்க முழுக்க பெண் எழுத்தாளர்கள் மட்டுமே எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு 'நந்தவனத் தென்றல்', மூத்த எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்பு 'தலைவாழை' ஆகிய நூல்கள் சிறுகதை இலக்கியக் களஞ்சியத்திற்கு இவ்வமைப்பு இவ்வாண்டு வழங்கிய இலக்கியக் கொடையாகும்.

படிப்பகம்

padippakam

# வில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசுத்திட்ட நிர்வாகக் குழு



செ.ஞானன்
(செயலர்)



S. விஜயகுமார்
(பொருளாளர்)



E.S.D.
தலைவர்-நிறுவனர்



பேரா. பிரேமகுமாரி தாமஸ்
(உறுப்பினர்) சாராடக்கர் கல்லூரி,
பாளையம்கோட்டை.



T. கருணாகரன்
(உறுப்பினர்)
மதுரை

படிப்பகம்



பேரா. ஆண்டாள் பாஸ்கரன்
(உறுப்பினர்)
வேளாண்மை கல்லூரி, மதுரை

padippakam

# 1994-ம் ஆண்டில் பிரசுரமான சிறுகதை நூல்களுக்கு பரிசு

## விதிகள்

1994-ல் (ஜனவரி முதல் டிசம்பர் முடிய) வெளியான சிறுகதைத் தொகுப்பு நூல்களை மட்டும் அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு நூலிலும் நான்கு (4) பிரதிகள் அனுப்ப வேண்டும்.

ஒருவரே பல நூல்களை அனுப்பலாம். (நூல்களின் விலையை அஞ்சல் செலவுடன் மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

ஆசிரியரோ, பதிப்பாளரோ, ஆசிரியரின்சார்பில் ஏனையோரோ, ஆசிரியரின் உடன்பாட்டுடன் அனுப்பலாம். போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரிடமிருந்து சம்மதம் தெரிவிப்புக் கடிதம் பெற்று அனுப்ப வேண்டும். பரிசு ஆசிரியருக்குத்தான்.

பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும். முதல் பரிசு ரூ. 3000, இரண்டாம் பரிசு ரூ. 1500 வீதம் இரண்டு, மூன்றாம் பரிசு ரூ. 1000 வீதம் நான்கும் வழங்கப்படும்.

ஆசிரியர், தமக்குப் பிடித்த 3 கதைகளைக் குறிப்பிட வேண்டும். அந்த 3 கதைகளை மட்டுமே நடுவர்கள் தேர்வுக்கு எடுப்பார்கள். (ஆசிரியரின் திறனை சரியான முறையில் இனம்காண இந்த ஏற்பாடு) அவ்வாறு குறிப்பிடத் தவறினால், நூலில் முதல் மூன்று கதைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

உலகில் எங்கு வாழ்ந்தாலும், தமிழில் எழுதும் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளலாம்.

தமிழகத்தின் பிரபலமான மூத்த மூன்று எழுத்தாளர்களோடு, இவ்வமைப்பின் தலைவர் மற்றும் செயலர் அடங்கிய ஐவர்குழு தேர்வு செய்யும். தலைவரின் முடிவே இறுதியானது.

நூல்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 31-1-1995.

1995 மே மாதம் 3-வது ஞாயிற்றுக்கிழமை கோவையில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

ஏற்கனவே இவ்வமைப்பில் பரிசு பெற்ற எழுத்தாளர்கள், பரிசு பெற்ற ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளுக்கு போட்டியில் கலந்து கொள்ளாமலிருக்க வேண்டுகிறோம்.

நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி :

**Che. Gnanan**
Secretary, LDMLPS
"GNANA KUIL ILLAM"
6/714, Asari Colony, Sivakasi-West-626124

படிப்பகம்

padippakam

தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டுக்கு
சிறப்பு மலர் வெளியிடும்
தாஸ்னாவுக்கு எமது வாழ்த்துக்கள்!

★

**கவிமாமணி. சேலம் பாலன்**
ஆசிரியர், துளி
செயலர், ஈரோடு தமிழ்ச் சங்கம்
செயற்குழு உறுப்பினர்,
தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

---

தஞ்சை தமிழ் மாநாட்டுக்கு வருகை தரும் அனைத்து தமிழ் நெஞ்சங்களையும்
வருக வருக என வாழ்த்தி வரவேற்கும்

## உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை

*எடமலைப்பட்டிபுதூர் - திருச்சி - 620 012*

**கவிஞர். சுரதா**
உலகத் தலைவர்

**கவிமாமணி. சாஸ்திரி வெங்கட்ராமன்**
உலகப் பொதுச் செயலாளர்

**பனம்பாக்கம் சீதா**
தமிழ் மாநிலச் செயலாளர்

---



**கவிஞர். எழுஞாயிறு**


## எழுது!

தெரிந்ததை எழுது தெளிவுடன் எழுது
கருத்தினை எழுது கனிவுடன் எழுது
துணிவுடன் எழுது தொய்வின்றி எழுது
சுருக்கமாய் எழுது சுவையாய் எழுது
உண்மையை எழுது உனக்கும் நீ எழுது
யாருக்கோ எழுதிவிட்டு
இல்லத்திற்குப் பொருந்தாதென்றால்
எதற்காக உனக்குப் பேனா?
எடுத்தெறி! படுத்துத்தூங்கு!!

படிப்பகம்

padippakam

உலகிலேயே சிறிய பத்திரிகை - 'அணு'!




அணு, 60, பிள்ளையார் கோவில் தெரு,
*சிவகங்கை - 623 360*

## தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்!

- கவிஞர். சேலம் தமிழ்நாடன் அவர்கள் தமிழ்மொழியின் முதல் அச்சு நூலான தம்பிரான் வணக்கம்'(1578) குறித்து ஆய்வு நூல் வெளியிட்டுள்ளார். இந்நூல் விளக்கந்தவிர தமிழ்மொழியின் இரண்டாம், மூன்றும் புத்தகங்களின் (கிரிசித்தியானி வணக்கம்-1579 கன்பசனேரியோ-1580) படங்களும், விளக்கங்களும் உள்ளன.

- தஞ்சை உலக தமிழ் மாநாட்டின் நினைவு வெளியீடான இந்நூலை வெளியிட்டவர் திரு 'லவ் ஓ' ஏ. கே. நாகராசன் அவர்கள். இந்நூலின் பிரதி தேவைப்படும் ஆய்வறிஞர்கள் திரு. ஏ. கே. நாகராசன், சினொர் தெரு குகை, சேலம் - 636 006 அவர்களுக்கு எழுதி இலவசமாகப் பெறலாம்.

★

## தமிழ் நாவல் ஆய்வாளர்களுக்கு ஒரு நற்செய்தி

**முதல் தமிழ் நாவல் - 'ஆதியூர் அவதானி'**

இப்போது இரண்டாவது பதிப்பாக வெளிவருகிறது!

- வேதநாயகரின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' (1879) உரைநடையில் முதல் தமிழ் நாவல். 'ஆதியூர் அவதானி' (1875) அம்மானை வடிவிலான செய்யுள் நடையில் முதல் நாவல்.
- சமகால சமுதாயச் சிக்கல்களை சொல்வது நாவல் இலக்கியம். தூ. வீ. சேஷய்யங்கார் தன் கதையைத் தன் கால சமூகச் சிக்கல்களோடு வைத்துச் சொல்லி இருக்கிறார்.
- அவதானி பிராமண சமூகத்தை சேர்ந்தவர். சமகாலச் சிந்தனைகளோடு கலப்புத் திருமணம் கைம்பெண் மறுமணம் ஆகிய திருத்த கண்ணோட்டம் நாவலிலிடம் பெறுகிறது.
- இலண்டன், பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்திலிருந்து பெறப்பட்ட இந்த நாவல் இப்போது இரண்டாம் பதிப்பாக திரு. 'சிட்டி', பெ. கோ. சுந்தரராசன், திரு. சிவபாத சுந்தரம் ஆகியவர்களின் ஆய்வு முன்னுரையோடு வெளிவருகிறது.
- தரமான இலக்கியப் படைப்புக்களையும், அறிவு நூல்களையும் வெளியிடும் விஜயா பதிப்பகம் இந்த அரிய நாவலை மகிழ்ச்சியோடு வெளியிடுகிறது.

தொடர்புக்கு : **விஜயா பதிப்பகம்**

படிப்பகம்

*20, இராச வீதி, கோவை - 641 001*

padippakam

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு
வருகை தரும் அனைத்து
தமிழ்நேய பேராள - பார்வையாளர்களுக்கு
எனது இனிய வரவேற்பு!



## கவிஞர். வலம்புரி லேனா

**ஆசிரியர், மதுமலர்**
5-எ, சுயராஜ்யா புதுத் தெரு
**குளித்தலை- 639 104**

## குறிஞ்சிமலர் பதிப்பக வெளியீடு

**குன்றம். மு. இராமரத்நம் எழுதிய**

- ☐ சிறை மீண்ட கவிதைகள் (கவிதைத் தொகுப்பு) ரூ. 12-00
- ☐ சாத்தான் வேதம் ஓதுகிறது (சிறுகதை தொகுப்பு) ரூ. 5-00
- ☐ இரயிலுறவா? (நாவல்) ரூ. 30-00
- ☐ கீழைமார்க்சியம் - ஒரு பாமர பார்வை (திறனாய்வு நூல்) ரூ. 15-00

மு. பெ. இராமலிங்கம் எழுதிய

- ☐ குறளின் குரல் ரூ. 15-00

**குறிஞ்சிமலர் பதிப்பகம்**
புலமைப் பண்ணை, கோவை-641007


---

தஞ்சை உலக தமிழ் மாநாட்டுக்கு வருகை தரும் அனைத்து தமிழ் நெஞ்சங்களையும் வாழ்த்தி வரவேற்கும்

போன் : 20060, 20394

## சிற்பம் சூப்பர் மார்கெட்

**70, சேலம் நெடுஞ்சாலை,**
**கொமாரபாளையம் - 638183**



**டீலர்ஸ் :** சைக்கிள், ஃபேன், கிரைண்டர்
ஸ்டீல் பர்னிச்சர்ஸ்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறோம். மாநாட்டுக்கு பெருமை சேர்க்கும் பேராளர் - பார்வையாளர்களை வரவேற்கிறோம்,



## சக்திவேல் அச்சகம்

**24, வெங்கடேச கவுண்டர் சந்து**
**(பிருந்தாச்சாரி வீதி)**
**ஈரோடு-633001**

எல்லாவித அச்சு வேலைக்கும் சிறந்த இடம்,

படிப்பகம்

padippakam

தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டிற்கு
வருகை தரும் அனைத்து தமிழ் நேய பேராள - பார்வையாளர்களுக்கு
எனது இனிய வரவேற்பு!

## திண்டுக்கல்லிலிருந்து வெளிவரும் முழுமையான செய்திப் பத்திரிகை

☎ 22244

# முதல் முரசு

பல்சுவை சமுதாய வார இதழ்

நிர்வாக ஆசிரியர் :

**கே. ஆர். சண்முகம்**

**21, செல்லாண்டியம்மன் கோவில் 3 வது தெரு**
**திண்டுக்கல் - 10**

படிப்பகம்

padippakam

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகைதரும்
புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளை
தாய்மொழி வேறாயினும் தமிழைப் போற்றும்
பன்னாட்டுப் பேராளர் - பார்வையாளர்களை

# கலைமகள் சபாவும், கண்ணிமை இதழும்

வரவேற்பதில் பெருமகிழ்வு கொள்கின்றன.



## கண்ணிமை

மக்களிடையே கூட்டுடைமை தத்துவத்தை வளர்க்கிறது

*

## கலைமகள் சபா

அத்தத்துவத்தை நடைமுறைப்படுத்துகிறது.

*

இரண்டும் சேர்ந்து
பத்து லட்சம் பணக்காரர்களை உருவாக்க முயற்சிக்கிறது.

## கலைமகள் சபா - சேவா சங்கம்

பதிவு எண். : 16/80

கொமாரபாளையம் - 638 183 - சேலம் மாவட்டம்

படிப்பகம்

padippakam

# தமிழ் சிற்றிதழ்கள் சங்கம்
# TAMIL SMALL NEWSPAPERS ASSOCIATION

(பதிவு எண்:19.91)

புலமைப் பண்ணை-கோவை 641 007

## நோக்கங்கள்:

1) நமது தாயகமான இந்தியாவில் மக்களின் ஒற்றுமையையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும், சமூக நல்லுறவுகளையும் பொது நலன்களையும் வளர்க்கப்பாடுபடுவது.

2) சிற்றிதழ்களிடையே இணக்கமான நல்லுறவை ஏற்படுத்தி அவற்றின் மூலம் நாட்டுக்கும், உலகிற்கும், மனித சமுதாயம் பூராவிற்கும் நலம் விளைப்பதான சிந்தனை எழுச்சியை கருத்து வளத்தை உண்டாக்குவது.

3) மொழிமேம்பாடு, இலக்கியவளர்ச்சி, கலாச்சார அபிவிருத்தி ஆகியவற்றிற்கு பாடுபடுவது

4) மனிதநேயம், மானிட மேம்பாடு, அனுமதி நோக்கிய சமுதாய நடைமுறை ஆகியவற்றிற்கு அறிவியல் ரீதியான இதழியல் செயல்பாட்டிற்கு சிற்றிதழ்களை தயார்படுத்துவது - ஊக்குவிப்பது - நவீன இதழியல் பயிற்சிகள் அளிப்பது.

5) மனித மேம்பாடு சிந்தனை எழுத்தாளர்களுக்கு எழுதுகளம் அமைத்தளிப்பது அதன்மூலம் மக்களுக்கு விழிப்புணர்வைப் பரவச் செய்வது.

6) மானிட மேம்பாட்டில் அக்கறையும், சமூகச் சிந்தனையில் ஆர்வமும் கொண்ட வாசகர் அணி உருவாக உழைப்பது.

7) சங்க சிற்றிதழ்களின் தரஉயர்வு, வளர்ச்சி பாதுகாப்பு ஆகியவற்றிற்கு வழிவகை செய்வது அரசு மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் ஆதரவு மற்றும் உதவிகளைப் பெற்றுத் தருவது.

8) சிறந்த சிற்றிதழ்களுக்கும், படைப்பாளிகளுக்கும் ஆண்டுதோறும் பரிசுகள், பட்டங்கள், விருதுகள் அளித்து பாராட்டி ஊக்குவது.

9) நல்ல சமூக சிந்தனையாளர்களைக் கொண்டு கருத்துப்பட்டறை கருத்தரங்கம், கவியரங்கம் முதலியன நடத்துவது - அவற்றின் முடிவுகளை நூல்களாக வெளியிடுவது.

10) நல்ல செய்தி, தகவல், கருத்து, தத்துவ பரவலுக்கும் பரிவர்த்தனைக்கும் தேச, சர்வதேச இதழியல் மற்றும் அறிவியக்க நிறுவனங்களோடு தொடர்பு அல்லது இணைப்பு ஏற்படுத்தி இணைந்து செயல்படுவது.

11) நல்ல ஆரோக்கியமான சமுதாய உருவாக்கத்துக்கு உகந்ததான இதர இதழியல் பணித் திட்டங்களை சட்ட வரம்புக்குள் வரைந்து செயல்படுத்துவது.

12) இச்சங்கம் அரசியல் நோக்கத்துடனோ, லாபநோக்கத்துடனோ செயல்படுவதல்ல.

படிப்பகம்